
# பூச்செண்டு



30
காசு
எப்ரல் 1968

www.thamizham.net - Free E Books No TM 14705

www.thamizham.net - Free E Books No TM 14705

# " பூச்செண்டு "

செண்டு : 3 | ஏப்ரல் 1968 | பூ : 6

## இந்த இதழில்


| | | |
|---|---|---|
| அரசாங்க வரவுச் செலவுத் திட்டம் | ... | 3 |
| வருந்துகிறோம்...... | ... | 5 |
| அன்புள்ள ஆசிரியருக்கு | ... | 6 |
| ஓர் புதிய ஆயுதம் | ... | 7 |
| சித்திரைத் திருமகள் | ... | 15 |
| ஐந்து ரூபாய் | ... | 17 |
| உலக மக்கள் தொகை | ... | 21 |
| அழகு | ... | 22 |
| பளிங்குப் பந்தில் எதிர்காலம் | ... | 28 |
| அசோகனுடன் சில நிமிடங்கள்.! | ... | 33 |
| ஆடைக்கலையில் " நிறம் " | ... | 35 |
| நிலாவிலுள்ள 'டைக்கோ' மடு பற்றி சர்வேயர்—7 கூறும் சுவையான கதை! | ... | 38 |
| மாணவர்க்கு கூறுகிறேன் ! | ... | 49 |
| உலகில் உயிர் பிறந்தது எப்போது ? இதோ புதிய தகவல்கள் ! | ... | 43 |
| தீந்தமிழ்த் தேம்பாவணி | ... | 44 |
| குடியிருந்த கோவில் (பட விமர்சனம்) | ... | 48 |
| தங்கை வருகிறாள் ! | ... | 40 |
| வள்ளுவர் வழி—2 | ... | 53 |
| மாணவர்களே ஒரு நிமிடம் ! | ... | 63 |


பூச்செண்டில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள், யாவும் கற்பனையே.

www.thamizham.net - Free E Books No TM 14705

# பூச்செண்டு
## (மாணவர் திங்களிதழ்)

அலுவலகம் :

**19, நௌரோஜி ரோடு,**
**சென்னை-10.**

## ஆசிரியர் குழு :

சிறப்பாசிரியர் :

**ஷெவாலியர் அருள்தாசு.**

பதிப்பாசிரியர் :

பேராசிரியர் :

**திரு. எஸ். இராஜேந்திரன், எம்.ஏ.**


பொறுப்பாசிரியர்கள் :

**திரு. இ. ஜே. சுந்தர், பி.எஸ்ஸி.**
**திரு. வில்லியம் பெர்னாண்டஸ், சி.டி., (ஏ.எம்.ஐ.இ.).**

துணையாசிரியர்கள் :

**திரு. இரா. கலைக்கோவன், III எம்.பி., பி.எஸ்.**
**திரு. ஜெ. சந்திரதாஸ், II எம்.காம்.**
**செல்வி. ஆ. வி. நிர்மலா, II பி.எஸ்ஸி.**
**செல்வி. ரேவதி, (முன்னிலை).**

www.thamizham.net - Free E Books No TM 14705



# அரசாங்க வரவு செலவுத் திட்டம்

மாநில அரசுகளும், மத்திய அரசும் தங்கள் தங்கள் வரவு செலவுத் திட்டங்களைச் சட்டசபைகளில் தாக்கல் செய்திருக்கின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, நமது மாநில அரசு தாக்கல் செய்திருக்கும் திட்டம் எல்லோராலும் வரவேற்கப்பட்டிருக்கிறது. விலை வாசிகள் வேகமாக ஏறிக்கொண்டு போகும் இந்நாட்களில் புதிய வரிகளோ அதிக வரிகளோ இல்லாத ஒரு திட்டத்தை வகுத்திருப்பது, தமிழக அரசிற்கு, குறிப்பாக நமது முதலமைச்சருக்கு மக்கள்மட்டும் இருக்கும் பரிவைக்காட்டுகிறது. பதவியேற்ற முதலாண்டில் மாநில நிதி நிலைமையைச் சரியாய் புரிந்துகொள்வதில் கவனம் செலுத்தி வந்த நமது அமைச்சரவை வரும் ஆண்டுகளிலாவது பயனுள்ள பல திட்டங்களை வகுப்பர் என்று நம்புகிறோம்.

மத்திய அரசு பார்லிமெண்டில் தாக்கல் செய்திருக்கும் திட்டம் அவ்வாறு யாவரும் பாராட்டக்கூடியதாக இல்லையென்னலாம். எவ்வகையிலும் செலவைக் குறைத்து ஏறிக்கொண்டேபோகும் விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டிய முயற்சி செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஏழை, பணக்காரர் ஆகிய எல்லோரும் பயன்படுத்தும் அஞ்சல் அட்டை, அஞ்சல் உறை ஆகியவற்றின் விலை அதிகப்பட்டிருக்கிறது என்பது யாவரும் இத்திட்டத்தில் காணும் ஒரு பெரிய குறை.

ஆனால் அதைவிடப் பெரிய குறை என்னவெனில் மத்திய வரவு செலவுத் திட்டத்தில் காணும் செலவினங்களில் சிக்கனம் கையாளப் படாதிருப்பதாகும். மத்திய அரசின் நிர்வாகச் செலவு 95 கோடி ரூபாயிலிருந்து 123 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. பாதுகாப்பிற்காக இன்னும் ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் மத்திய

www.thamizham.net - Free E Books No TM 14705

அரசில் ஆட்சியிலமர்ந்திருக்கும் அரசியல் கட்சி ஏற்றுக் கொண்டிருக்கும் ஏதோ தவருன கொள்கைகளைப் பின்பற்றி, அரசாங்கமே பல பெரிய தொழிற்சாலைகளை நடத்திவருகிறது. இத்தகைய தொழில்களில் நஷ்டம் ஏற்பட்டு வருவது யாவரும் அறிந்த உண்மை. இவ்வாறு வியாபாரத்திலும், தொழிலிலும் இறங்கி அரசாங்கம் பல கோடி ரூபாய் நஷ்டம் அடைவதை நிறுத்தியிருக்கலாம். அவ்வாறு நிறுத்தாததோடு இவ்வாண்டும் ஒருபுது எஃகு ஆலை அமைப்பதற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நாம் வெளிநாடுகளிலிருந்து வாங்கியிருக்கும் கடன் சுமார் பன்னிரண்டாயிரம் கோடியாக வளர்ந்திருப்பதற்கு அரசாங்கத் தொழிற்சாலைகளே முக்கியமான காரணம். மேற்கூறப்பட்டிருக்கும் பல துறைகளிலும் மத்திய அரசு சிக்கனத்தைக் கையாண்டு மக்கள்மேல் விதிக்கப்பட்டிருக்கும் வரிச்சுமையைக் குறைத்தாலன்றி நாட்டின் பொருளாதார நிலையில் முன்னேற்றம் தோன்ருது.

இவ்வாறு அரசாங்கம் வரிகளை உயர்த்தியும் மாற்றியும் அமைத்து வருவது நாட்டுப்பற்றில்லாத சில வியாபாரிகள் கொள்ளை லாபம் சம்பாதிக்க வாய்ப்பளிக்கிறது. ஒரு பொருளின் மேல் விதிக்கப்படும் வரி சற்று உயரும் என்று தெரிந்தவுடன் சமூக நலனைக் கருதாத தன்னல வியாபாரிகள் அப்பொருளின் விலையைப் பன்மடங்காக உயர்த்தி விடுகின்றனர். அல்லது அப்பொருளை மறைத்தேவைத்து விடுகின்றனர். இது ஆண்டு தோறும் நடக்கும் ஒரு கேலிக் கூத்தாகி விடுகிறது. குறைந்த நாட்களில் பெரும் பணம் சம்பாதிக்கும் வழிகளில் இது ஒரு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. எஃகுத் தகடுகளின் மேல் விதிக்கப்பட்டிருக்கும் வரி பத்து சதவீதம் ஏறும் என்று திட்டத்தில் குறிக்கப்பட்டிருந்தால் இருபத்தைந்து ரூபாய்க்கு விற்கப்பட்ட இரும்பு நாற்காலிகளின் விலை முப்பத்தைந்தாக உயர்த்தப்படுகிறது. இத்தகைய சமூக விரோதச் செயல்களை அரசாங்கம் தடை செய்யாமல் இருந்தால் ஆண்டு தோறும் விலைவாசிகள் ஏறிக் கொண்டே போகும் என்பதற்கு ஐயமொன்றுமில்லை.

இறுதியாய் மக்களிடம் நாட்டுப்பற்று, சமூகப்பற்று, நீதி நிலை, பண்பாடு ஆகிய இயல்புகள் இல்லையானல் எந்த விதமான திட்டங்களும் ஒரு பயனையும் அளிக்க முடியாது.

www.thamizham.net - Free E Books No TM 14705

# வருந்துகிறோம்

கடந்த திங்கட்கிழமை 25-3-'68 அன்று இரவு ஏழு மணி அளவில் சட்டக் கல்லூரி அருகே ஏற்பட்ட வேண்டாத குழப்பம், செவ்வாய் காலையில் பயங்கர வடிவம் எடுத்து விட்டது. குற்றமற்ற மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கின்றனர். துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. சட்டக் கல்லூரி மாணவர்கள் தாக்கப்பட்டபோது அவர்களைத் தாக்கி யழிக்க போலீஸ் தடுத்தும் மீறி நுழைந்த நிலையில்தான் டிரைவர்கள் ஒருவரிருவர் தாக்கப்பட்டிருக்கின்றனர். ஒருபாவமும் அறியாத கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்களின் மீது பயங்கரத் தாக்குதல் நடந்தியிருக்கின்றது. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மகளிர் விடுதி மீது தாக்குதல் நடத்திய காலிகளை மாணவர் விடுதியினர் தடுத்தபோது மாணவர்களைப் பயங்கர மாகத் தாக்கினர். சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதிக்குள் இரும்புத் தடிகளும், உருட்டைக் கட்டைகளுமாய் நுழைந்து பலத்த தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். மண்டை உடைந்து மருத்துவமனையில் சேர்ந்திருக்கும் நண்பர்களைப் பார்க்கும்போது விழிநீர் வடிகின்றது!

எந் நாட்டிலும் மாணவர் சமுதாயத்தைத்தான் யாவரும் கண்போல் பாதுகாத்து வருகின்றனர். அத்தகைய மாணவர் சமுதாயத்திற்கு அரசு தக்க பாதுகாப்பளிக்க முடியாத நிலையில் இருந்தது மிகவும் வருந்தத்தக்கது. மாணவர் விடுதி களில் பல ஆயிரக்கணக்கான ரூபாய் பெறும் பொருள்கள் அழிக்கப்பட்டிருக்கின்றனவே, அதற்கு என்ன பரிகாரம்?

இவ்வாறு மாணவர் விடுதிகள் தாக்கப்பட்டதை யொட்டி எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் உணர்ச்சியுடன் பேசப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

www.thamizham.net - Free E Books No TM 14705

# அன்புள்ள ஆசிரியருக்கு !

ஆக்க வேலையைக் கைவிட்டு அழிவுப் பாதையில் செல்கிறீர்களே ! என்று மாணவர்களைப் பார்த்து கண்கலங்கிய தமிழ் சமுதாயம் அதே மாணவர்கள் இன்று ஆக்க வேலையில் முனைந்து நின்று பூச்செண்டிற்குப் புத்துயிர் அளித்துள்ளார்கள் என்றால் அம்மாணவர்களையும் மாணவிகளையும் போற்றாமல், புகழாமல் இருப்பது எங்ஙனம் ?

*ஜோனாதன்,*
காந்திபுரம், கோயம்புத்தூர்.

"பூச்செண்டு" புதுமணம் கமழுகிறது. எத்தனையோ நாட்களுக்குப் பின்பு சந்திப்பு! எத்தனையோ எண்ணங்கள் பொங்கி பூரிக்கின்றன.

*கிருஷ்ணமூர்த்தி*
திருச்சி—2

மாணவர் அறிவை வளர்த்திடவே—மீண்டும்
மாண்பாய் வந்தாய் மலர்ச்செண்டே !
கண்டோம் சுவைத்தோம் கனியிதழே—நான்
கற்றேன் ! முழுவதும் ! ! திகட்டவில்லை ! ! !

*[ஆ. கணேசன்*
மாணவர் மன்றச் செயலாளர், சிறுநல்லூர்.

சின்னாட்கட்கு முன் என் நண்பர் மூலம் "கத்தோலிக்கு சேவை" இதழ் பார்க்கும் வாய்ப்புப் பெற்றேன். அதில் "சென்னையில் அரும்பிய வாடிய மலர்—பூச்செண்டு" என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அது வாடவில்லை வாடாத மாலைச் செண்டு என நிரூபணமாக்கி விட்டீர்கள்.

*தா. வளவன்*
வெட்டி வயல்.

மாணவர் மலரான "பூச்செண்டு" தொடங்கப் பெற்ற நாள் முதல் இறுதி என்பதில்லாமல், இனிமை மணத்தோடும், புதுமைச் சுவையோடும், பல்லாண்டு காலம் பெருகிப் பலுக வாழ்த்துகிறேன்.

*ஜெகதீசன்*
தோர்னகல்லு, பெல்லாரி மாவட்டம்.

கருத்துக் குவியல்களாம் கவிதைப் பண்ணைகளாம்
நிறுத்துக் குவித்துவிட்டீர் நீங்கா நிலைபெறச் செய்துவிட்டீர்
செழித்து வளர்ந்திடுமாம் சிறிய பூச்செண்டும்
நிலைத்து நின்றிடவே என்றும் நினைத்து உதவிடுவோம்.

*க. ஜோசப் சேவியர்*
செம்படையார்குளம்.

www.thamizham.net - Free E Books No TM 14705

# ஓர் புதிய ஆயுதம்

மணிவண்ணன்......

கையில் கடிகாரத்தையும், மடியில் பணத்தையும் மனத்தில் பேராசையையும் கட்டிக்கொண்டு நவநாகரிக ஆடவரும் பெண்டிரும், அந்த அகலமான வீதியில் கூட்டம் கூட்டமாக நடமாடிக் கொண்டிருந்தனர்.

கண்ணைப்பறிக்கும் விதவிதமான மின்சார விளக்குகள், கருத்தைக் கவரும் கல்லூரிக் குமரிகளின் கூட்டம், பொருளையும் தர்மத்தையும் சேர்ந்தாற்போல விற்றுக் காசைச் சேர்க்கும் கடைகள், டிராம், பஸ், ரிக்ஷா. ஜட்கா, டாக்ஸி எல்லாம் ஓடுகின்றன. பட்டணத்து வீதிக்கு வேண்டிய எல்லாத் தகுதிகளும் அந்தத் தெருவுக்கு இருந்தன.

'இந்த மனிதப் பயல்களுக்கும் வெளிச்சம் போடுகிறவன் நான்' என்று நிமிர்ந்து நின்று சொல்வது போல் வரிசை வரிசையாக மின்சாரக் கம்பங்கள், டெலிபோன் தூண்கள், உயரமான கட்டிடங்களின் உச்சந்தலையில் ஏறி மிதித்துக் கொண்டு நிற்கும் ரேடியோ 'ஏரியல்' கம்பங்கள்.

வீடுகளில் தான் எத்தனை வகை? இரண்டுமாடி, மூன்று மாடி, நான்கு மாடி—இன்னும் பல மாடிகள். எல்லாம் பிரமாதம் தான்! பட்டணமில்லையா? பிரமாதமில்லாத எதுவும் தான் பட்டணத்தில் இருக்க முடியாதே!'

அதோ! அந்த ஆடம்பரமான வீதியில் கிழக்குக் கோடியிலிருந்து வரிசையாக ஏழு வீடுகள் தெரிகின்றனவே; அவற்றில் ஏழாவது வீட்டைத் தவிர மற்ற ஆறும் செல்வச் செழிப்பின் பிரதிபிம்பங்களாக நிமிர்ந்து நிற்கின்றன. ஏழாவது வீடு மட்டும் ...... பாவம்! பழைய பெட்டிபோல் ஒரு சிறிய ஓட்டடுக்கு வீடு அது! ஓடு சரிந்து விழுந்து விடுமோ என அஞ்சத்தக்கதாக இருந்தாலும் அதனுள் அஞ்சாமல் குடியிருப்பவனுடைய மன வலிமைக்குப் பயந்தோ என்னவோ வீடு இன்றும் விழாமல் நின்று கொண்டிருந்தது.

முதல் ஆறு வீடுகளில் யார் யார் குடியிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா நீங்கள்? வரிசையாகச் சொல்லுகிறேன், கேளுங்கள்:


முதல் வீட்டில் ஒரு பிரபல சினிமா நடிகர் இருக்கிறார். வாசலில் நாலைந்து புத்தம் புதிய கார்களும் விடலைப் பிள்ளைகளும், பள்ளிச் சிறுவர்களும், ஆவலாகக் கூடி நிற்பதிலிருந்து இதை நீங்களே தெரிந்து கொண்டிருக்க வேண்டுமே? ஆமாம்! இப்போதே சொல்லிவிடுகிறேன். நல்லதோ, கெட்டதோ எதையும் பிறர் கூறாமலே அனுமானித்துத் தெரிந்து கொள்ளுகிற ஞானம் பட்டிணத்துக்கு மிகவும் அவசியமான தேவை. அந்த ஞானம் இல்லாவிட்டால் பட்டணத்தில் நீங்கள் மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கும்.

முதல் வீட்டு நடிகர் ஏராளமான படங்களில் நடித்து புகழ்பெற்றவர். பழைய காலச் சரித்திரத்தில் இத்தனைப் போர்களில் காயம் பெற்றவர் என்பதைப் பெருமையாகச் சொல்லிக் கொள்கிற மாதிரி இப்போது இத்தனை வருட அனுபவம் என்பதைப் பெருமையாகச்

www.thamizham.net - Free E Books No TM 14705

சொல்லிக் கொள்வார்கள். இருபத்தைந்து வருடமானால் வெள்ளி விழா! ஐம்பது வருடமானால் பொன் விழா! நூறு வருடமானால் நூற்றாண்டு விழாவாம். ஐந்து, பத்து, பதினைந்து போன்ற குறைவான வருடங்களுக்கு என்ன விழாக் கொண்டாடுவதென்று என்னுடைய ஏழை நண்பர்கள் கேட்கலாம். முறையே இரும்பு விழா, பித்தளை விழா, செம்பு விழா என்று வைத்துக்கொண்டால் போகிறது. இந்தக் கணக்குப்படி செம்பு விழா எடுக்க வேண்டிய அவ்வளவு அனுபவமுள்ள நடிகர் அவர். நாலு கார், பதினறு வீடு, நிறையக் கையிருப்பு—இவ்வளவுமுள்ள செழிப்பான கலைஞன்.

இனி இரண்டாவது வீட்டுக்கு வரலாம். இரண்டாவது வீட்டில் ஒரு பெரிய டாக்டர் வசித்து வருகிறார். வைத்திய சம்பந்தமாக உலகத்திலுள்ள எந்தெந்த சர்வ கலாசாலைகளில் என்னென்ன பட்டங்கள் உண்டோ அவ்வளவும் வாங்கினவர் அவர். அவர் கை பட்டாலே நோய் பறந்து விடும் என்கிற அளவுக்குத் திறமைசாலி.



நோயாளிகளை ஒருமுறை பார்த்து இன்ன நோய் என்று சொல்வதற்கே நிறையப்பணம் வாங்கி விடுவார். டாக்டர்களுக்கும் வக்கீல்களுக்கும் இலவச தொண்டு செய்தால் புகழ் எங்கே வருகிறது. எவ்வளவு அதிகமாகப் 'பீஸ்' வாங்குகிறார் என்பதை கொண்டு தானே பெரிய டாக்டர், பெரிய வக்கீல் எல்லாம் இந்த உலகத்தில் உருவாக்கப்படுகிறார்கள்?

அந்த வகையில், இரண்டாவது வீட்டு டாக்டர் இணையற்றுத் திகழ்ந்

www.thamizham.net - Free E Books No TM 14705

தார். ஒருதடவை கழுத்தில் 'ஸ்டெதஸ் கோப்பை' மாட்டிக் கழற்றினால் கோட்டுப் பைக்குள் நூறு ரூபாய் சேர்ந்துவிடும். டாக்டரிடம் ஒரு பெரிய காரும் இரண்டு சிறிய கார்களும் இருந்தன. பெரிய கார் அவருக்கு, சிறிய கார்களில் ஒன்று அவர் மகள் மெடிகல் காலேஜுக்குப் போக வர உபயோகப்பட்டது. மற்றது திருமதி டாக்டர் லேடீஸ் கிளப்புக்கும், கடை, கண்ணி, கோயிலுக்கும் போகப் பயன்பட்டது. பெயரின் முதல் இரண்டு எழுத்துக்களை சொன்னாலே நகரிலுள்ள அத்தனை பேருக்கும் தெரிந்துவிடக்கூடிய பிரபல டாக்டராக இருந்தார் அவர்.

மூன்றாவது வீடு யாருடையது என்று அதன் முன்புறமுள்ள பெயர் பலகையைப் பார்த்தவுடனே உங்களுக்குத் தெரிந்துவிடும். பார்-அட்-லா பட்டம் பெற்ற ஓர் வக்கீலுடைய வீடு அது. டாக்டருக்கு வீட்டைத் தவிர ஆஸ்பத்திரி என்று தனியாக வேறு ஒரு கட்டிடம் இருந்ததனால் வீட்டில் போர்டு மாட்டவில்லை. வக்கீலுக்கு அப்படி கிடையாது. வருகிறவன் வீட்டைத் தேடிந்தானே வர வேண்டும்? அதனால் பெரிதாகப் பெயர்ப் பலகை எழுதித் தொங்க விட்டிருந்தார்.

வக்கீல் தொழிலே பலகையால் விளங்க வேண்டிய ஒன்று. அதாவது பலபேருடைய கைகளால் என்று சிலேடைப் பொருளாக வைத்துக் கொண்டாலும் சரிதான். டாக்டரைப் போலவே இவரும் பெரிய வக்கீல். இவருடைய வீட்டில் உள்ள அவ்வளவு சட்ட புத்தகங்களையும் வாரிக் கொண்டு போய்கொட்டினால் மெரினாவுக்குக் கிழக்கே இரண்டு மைல் தொலைவுக் கடலை தூர்த்துத் தரையாக்கி விடலாம். அத்தனை பெரிய வக்கீல். கொலை செய்தவனை நிரபராதியாகவும், நிரபராதியைக் கொலை செய்தவனாகவும் மாற்றிக் கேசை ஜெயிக்க வைப்பதில் நிபுணர்.

நான்காவது வீடு ஒரு வியாபாரியுடையது. ஒரு மில்லுக்கும், இரண்டு பாங்குகளுக்கும், ஆறு கம்பெனிகளுக்கும் டைரக்டரான அந்த வியாபாரி, வருடத்திற்கு இலட்சக்கணக்கில் வருமான வரி கட்டுகிறார். ஊரில் உள்ள எல்லா இலக்கியச் சங்கங்களுக்கும், மன்றங்களுக்கும் கழகங்களுக்கும், தாராளமாக நிதியுதவி செய்து கௌரவப் பாதுகாவலராக விளங்குகிறார். ஏதாவது ஒரு மகாநாடு நடத்தச் செலவுக்குப் பணமில்லையென்றால் அவரையே தலைவராகப் போட்டு அவரிடமே மகாநாட்டுச் செலவை நிதியாக வாங்கிவிடும் தந்திரம் சில மகாநாடுகளை நடத்துகிறவர்களுக்குத் தெரிந்திருந்தது.

அந்த வியாபாரியைச் சுற்றி எப்பொழுதும் சமயம், மதம், புலமை சம்பந்தமான ஆட்கள் கூடியிருப்பார்கள். சமயத் தலைவர்களுக்குப் பாத காணிக்கைகளும், பொன்னாடையும், சன்மானமுமாகச் செலுத்தி வியாபாரி குன்றாத செல்வாக்கோடு வாழ்ந்து கொண்டிருந்தவர் அவர். எதெதிலோ தக்ஷிணப் பிரதேசம் வேண்டுமென்று தெரியாதவர்கள் சொல்லிக் கொண்டு கிடக்கிறார்கள். அந்த வியாபாரியினுடைய அந்தப்புரத்தில் இருக்கிறது ஐயா தக்ஷிணப் பிரதேசம்! புரியவில்லையா? ஒரு தெலுங்குப் பாட்டுக்காரி, ஒரு மலையாளத்து நாட்டியக்காரி, ஒரு கன்னட நடிகை, இத்தனைபேரும் அவர் வீட்டில் இருந்தார்கள். 'வீட்டில் இருந்தார்கள்' என்று மொட்டையாகச் சொன்னால் என்ன அர்த்தம்? அர்த்தமாவது; மண்ணாங்கட்டியாவது? அர்த்தம் சொல்லியா இதெல்லாம் புரிய வேண்டும்? வாருங்கள் அடுத்தவீட்டைப் பார்க்கலாம்!

www.thamizham.net - Free E Books No TM 14705

ஐந்தாவது வீடு ஓர் காலேஜ் புரொபஸருடையது. உயரமான தோற்றமும் மூக்குக் கண்ணுடி யணிந்து அறிவொளி திகழும் முக முமாக இவர் நடப்பதே கல்வி யின் பெருமிதத்தை எடுத்துக்காட் டும். டக்டக் என்று பூட்ஸ் கால் கள் ஒலிக்க நடந்து மோட்டார் சைக்கிளில் ஏறி இவர் காலே ஜுக்கு கிளம்பும் அழகே அழகு. நடிகரையும், டாக்டரையும், வக்கீ லேயும், வியாபாரியையும் போல் இவர் கொழுப்பு நிறைந்த வாழ்க்கை வாழ முடியாவிட்டா லும், போதுமான வசதிகளுடன் சுகமான வாழ்க்கை வாழ்ந்தார். சுயநலமும் உலகத்தில் சராசரி மக் களின் துயரங்களைப்பற்றிக் கவலைப் படாத திமிரும், இவரிடம் நிறைய இருந்தன. மணிபர்ஸில் பணமிருந் தும் மண்டையில் மூளையில்லாத ஆட்களைப் பிடித்துச் சங்கங்களை யும், மன்றங்களையும் ஆரம்பிக்கச் செய்து பொன்னுடையும், பூமாலை யும் போட்டுக் கொண்டு மேடைக்கு மேடை பழம்பெருமை பேசி இன்று உள்ள ஏழைகளின் தொல்லைகளைப் பற்றியே நினைவின் றிக் கோவில் காளைபோல் சுற்றி வந்தவர் இவர். கூப்பிட்டாலும் கூப்பிடாவிட்டாலும் எல்லா கூட் டங்களிலும் போய்ப் பேசினர். அதிகம் 'பவர்' உள்ள லென் ஸோடு கூடிய இவரது மூக்குக் கண்ணுடியின் ஆராய்ச்சிப் பார்வை யில் ஆயிரம் ஆயிரம் ஆண்டு களுக்கு முற்பட்ட வரலாறுகள் எல்லாம் பளிங்குபோல் தெரிந்தன. ஆனல் கண்முன் பசியால் செத் துக் கொண்டிருப்பவனும், குழந் தையை விலைக்கு விற்றுக் கொண் டிருக்கும் தாயும், வேலை கிடைக் காததால் தற்கொலை செய்து கொள்ளும் வாலிபனும், பசிக் கொடுமையால் காசு கொடுத்தவர் களுக்கெல்லாம் மனைவியாக மாறும் பெண்ணும் தெரியவேயில்லை. இவர் நன்ருக உண்டு, நன்ருக உடுத்திக் கல்லூரியில் நமது சமு தாயத்தின் எதிர்கால மனிதர்களை உருவாக்கிக் கொண்டிருந்தார்.

ஆருவது வீடு அரசாங்கத்தில் பெரும் பதவி வகிக்கும் ஒரு 'கெஸட்டெட்' ஆபீஸருடையது. இவர் ஆங்கிலம் மளமளவென்று பேசுவார். பேச்சில் எப்பொழுதும் அதிகார மிடுக்கு இருக்கும். வீட்டு வாசலில் பித்தளை வில்லையை மார் பில் தாங்கிய டவாலிச் சேவகனும் அல்சேஷியன் நாய்க்குட்டியும் நிற் பார்கள். நாய்க்கும் டவாலிக்கும் ஒரு வித்தியாசம். நாய் சமயா சமயங்களில் வீட்டு எஜமானியம் மாளின் மடியில் ஏறி உட்கார்ந்து 'கிளாஸ்கோ' பிஸ்கோத்தைச் சாப்பிட்டுக் கொண்டே காரில் சவாரி போகும். 'டவாலி'யால் அது முடியாது.

சிவப்பு நாடாவினல் இறுக்கிக் கட்டிய பைல்களின் ஆதிக்கம் இவர் கையில்தான். வெறும் காகிதங்களோடு பழகிப்பழகி இவ ருடைய மனம் ரொம்ப நாட் களுக்கு முன்பே மரத்துப் போய் விட்டது. இவர் ஆபீஸுக்குப் போகும்போது பெரிய பைகள் தைத்த கோட்டைப் போட்டுக் கொண்டு போவார். திரும்பி வரும் போது இரண்டு பையும் நிறைந்து கலகலக்கும்! புரிகிறதா? மேலதி காரிகளையும், மந்திரிகளையும், சட்ட சபை உறுப்பினர்களையும் குளிப் பாட்டிக் குல்லாப் போடுவதில் மனிதர் மகா நிபுணர். இவருடைய மனைவி எல்லா பொது விழாவிலும் பரிசு வழங்குவதற்குப் போவாள். இவரும் சில கூட்டங்கள் திறப்பு விழாக்களுக்குத் தலைமை வகிக்கப் போவார். டென்னிஸ் கிளப், சங்கீத சமாஜம், ஆஸ்திக சமாஜம் எல்லாவற்றிலும் இவருக்கு முக்கிய அங்கம் உண்டு.

ஏழாவது வீடு அத் தெருவிற்கே திருஷ்டிப் பரிகாரம் போலிருந்தது. வாயிற்புறத்து இருண்ட அறையிலி ருந்து யாரோ காசநோட்டுக்காரன்

www.thamizham.net - Free E Books No TM 14705

போல லொக்கு லொக்கென்று இருமிக் கொண்டிருந்தான். இதற்கு மேல் இப்போதைக்கு அந்த வீட்டைப் பற்றி வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை.

பாவம் அந்த வீட்டில் இருப்பவன் அப்பாவிப் பயல். போனால் போகிறதென்று அவனை இப்பொழுது விட்டு விடுவோம்.

கண்ணுக்கு எட்டாத இடத்தில் பரமண்டலங்களின் மேலான மண்டலத்திலிருந்து கொண்டு உலகைப் படைத்த கடவுள் ஒரு நாள் தம்முடைய அந்தரங்க காரியதரிசியைக் (கடவுளுக்கு அந்தரங்க காரியதரிசி உண்டா இல்லையா? என்று இங்கு யாரும் பிரச்சினையையோ, கேள்வியையோ எழுப்பிப் பயனில்லை. ஏதாவதொரு அந்தரங்கக் காரியதரிசி இல்லாமல் கடவுளால்தான் பிரச்சினைகளை எப்படிச் சமாளிக்க முடியும்?) கூப்பிட்டு,

“அப்பனே! பூலோகத்தில்உள்ள நகரங்களில் இப்பொழுதுவாழ்க்கை நிலை எப்படி எப்படி இருக்கின்றது? யார் யார் பணக்கஷ்டமில்லாமல் வசதியாக வாழ்கிறார்கள்? உலகில் ஒழுக்கமும் அறமும் நலிந்து மக்களுக்கு சத்தியத்தில் நம்பிக்கைக் குன்றி வருவதாக நான் அறிகிறேன். அது நிஜம் தானா? உலகத்தைச் சீர்திருத்தி நன்னிலைக்கு கொண்டு வருவதற்கு இனி ஓர் புதிய ஆயுதம் தேவை! அதை எங்கேயிருந்து யாருடைய கையிலிருந்து நாம் தயாரிக்கலாம்?” என்று பரபரப்போடு கேட்டார்.

“சுவாமி! இப்பொழுது கிராமங்கள் எல்லாம் படிப்படியாக இடிந்து நலிந்து இருண்டு போய் விட்டன. நகர வாழ்க்கைதான் ஒளிபெற்று ஓங்கியிருக்கின்றது. முற்காலத்தில் கோவில் வாசலில் நின்ற கூட்டத்தைப்போல நான்கு மடங்கு கூட்டம் சினிமா கொட்டகைகளின் வாசலில் நிற்கிறது. கவிகள், ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள், விவசாயிகள், நெசவாளிகள் எல்லோரும் பட்டினி கிடந்து திண்டாடுகிறார்கள். விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய ஒரு சிலர் தான் வசதியாக வாழ்கிறார்கள்.”

“மொத்தத்தில் சூழ்நிலை திருப்திகரமாய் இல்லை! அப்படித்தானே?”

“திருப்திகரமாக இல்லாததோடு பணவளம் சில இடங்களிலேயே தொடர்ந்து தேங்கிப்போய் அழுகி நாற்றமெடுக்க ஆரம்பித்து விட்டது. போட்டி, பொறாமை, வஞ்சகம், ஏமாற்று, சுயநலம், புகழ் வேட்டை, பதவிப்பித்து, எல்லாம் எல்லாருக்கும், எல்லா ஊர்கள் உள்ளும் அதிகரித்து விட்டன. உலகம் இதே நிலையில் போய்க் கொண்டிருந்தால் பட்டப்பகலில் நட்ட நடுத்தெருவில் காட்டு மிருகங்களைப் போல ஒரு மனிதன் இன்னொரு மனிதனை அடித்துத் தின்ன ஆரம்பித்து விடுவான். ஓர் புதிய ஆயுதம்—உலகைச் சீர்திருத்தும் ஓர் புதிய ஆயுதம் உடனே வேண்டியது தான்.”

“புதிய ஆயுதம் வேண்டுமென்பதைத்தானே நானும் சொல்கிறேன். அதை எங்கே போய் கண்டு பிடிப்பது?”

“தன்னைப் பற்றி கவலைப்படாமல் தன் வீட்டில் இல்லையே என்பதைப் பற்றிக் கவலைப் படாமல், உலகத்தில் உள்ள ஏழைகளுக்காக நினைத்துப் பேசி, உழைக்க ஒரு மனமும், வாயும், இரு கைகளும் தேவை! அந்தக் கைகள் தாம் உலகத்தைச் சீர்திருத்தும் புதிய ஆயுதம்.”

“நல்லது! ஆனால் அந்தக் கைகளை நான் எங்கே போய் தேடுவது?”

கடவுளிடமிருந்து இந்த கேள்வி பிறந்த உடனே அவருடைய அந்

www.thamizham.net - Free E Books No TM 14705

தரங்கக் காரியதரிசி பூவுலகத்தில் பட்டணத்தில் நாகரீகம் சுழித்தோடும் அந்த அகலமான வீதியிலிருந்த முதல் ஏழு வீடுகளையும்— தப்பு ! தப்பு ! ஆறு வீடுகளையும், ஏழாவது குடிசையையும் கடவுளுக்குச் சுட்டிக் காட்டினர்.

"அங்கே அந்த வீடுகளில் அப்படி என்னதான் இருக்கிறது?"— கடவுள் தன் காரியதரிசியைப் பார்த்து ஏமாற்றத்தோடு கேட்டார்.

"இன்றைய சமுதாய அமைப்பின் தவிர்க்க முடியாத ஏழு உறுப்பினர்கள் அங்கே அந்த ஏழு வீடுகளில் இருக்கிறார்கள். அவர்கள் ஏழு பேரில் யாராவது ஒருவரிடம். உங்களுக்குத் தேவையான சமதர்ம உலகைப் படைக்கும் புதிய ஆயுதம் ஒரு வேளை கிடைத்தாலும் கிடைக்கலாம்! போய்த் தேடிப் பாருங்கள்!"

"ஐயோ! என்னைப் பட்டணத்துக்கா போகச் சொல்கிறாய்!" என்று மெய் விதிர் விதிர்த்துப் பயந்து நடுங்கிக் கொண்டே கேட்டார் கடவுள்.

"ஏன் பயப்படுகிறீர்கள்? பட்டணத்திலும் நீங்கள் படைத்த மனிதர்கள் தானே வாழ்கிறார்கள்" என்று சிரித்துக் கொண்டே சொன்னார். அவருடைய அந்தரங்கக் காரியதரிசி.

கடைசியில் ஒரு வழியாகக் கடவுள் வேறொருவர் காணுமல் உலகத்து உலாவும் மாய வடிவோடு புதிய உலகைப் படைக்கும் புதிய ஆயுதத்தைத் தேடிக் கொண்டு பட்டணத்துக்குப் புறப்பட்டார். உயரமான ஆறு மாடி வீடுகளும் ஒரு குச்சு வீடும் இருந்த அந்த வீதிக்குள் ஆவலோடு நுழைந்தார்.

நடிகர் வீட்டுக்குள் அவர் நுழைந்தபோது, "கடவுளாம், கடவுள்! சுத்த மூட நம்பிக்கை" என்று ஏதோ ஒரு சினிமா படத்திற்கான வசனத்தை நெட்ருச் செய்து கொண்டிருந்தார் நடிகர். கடவுள் பயந்து போய் 'இந்த இடத்தில் நமக்கு வேலையே இல்லை' என்று ஓடிவந்து விட்டார். நடிகருடைய வசனத்தைக் கேட்டு அவருக்கே பயம் உண்டாகி விட்டது. அங்கே புதிய உலகைப் படைக்கும் ஆயுதம் கிடையாது என்று அவருக்குத் தோன்றிவிட்டது.

இரண்டாவதாக டாக்டரின் வீட்டுக்கும் போனார். டாக்டரின் கழுத்தில் தொங்கிய ஸ்டெதஸ் கோப்பைக் கண்டதும் "ஆ! கண்டுபிடித்து விட்டேன். புதிய உலகைப் படைக்கும் புதிய கருவி கிடைத்துவிட்டது" என்று வியப்போடு மெய்சிலிர்த்துக் கூவினார் கடவுள்.

ஆனல் அந்தோ பரிதாபம்! அருகில் நெருங்கிப் பார்த்தபோது, உயிரில்லாத அந்த இரப்பர்க் குழாயில் பல உயிர்களின் மரணச்சுவடுகள் பதிந்து கிடந்தன. "இதுவும் புதிய உலகைப் படைக்காது"— என்று ஏமாற்றத்தோடு வெளியேறினர் கடவுள்.

மூன்றாவதாக வக்கீல் வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த தடிமன் தடிமனை சட்டப் புத்தகங்களைப் பார்த்தபோது புதிய உலகத்தைப் படைக்கும் ஆயுதம் இந்தப் புத்தகங்களில் எங்காவது இருக்கலாம் என்று கடவுளுக்குத் தோன்றியது. ஒரு புத்தகத்தைப் பிரித்து படித்தார். "உயிர்களைக் கொலை செய்வது இத்தனுவது பிரிவின்படி குற்றம்"—என்று எழுதியிருந்த பக்கத்துக்குள்ளேயே மூன்று பூச்சை, நாலு ஈ, ஒரு பல்லிக் குட்டி—எல்லாம் நசுக்கப்பட்டுக் காகிதத்தில்—செத்துப் போய் ஒட்டிக் கொண்டிருந்தன. கடவுள் அந்தப் புத்தகத்தின் தலையைச் சுற்றி வீசி எறிந்து விட்டுக் கோபமாக வெளியேறினர்.

www.thamizham.net - Free E Books No TM 14705

பின்பு வியாபாரியின் வீட்டுக்குப் போனார் கடவுள். வியாபாரியுடைய தராசு முள் நிரந்தரமாக ஒரே பக்கம் வளைந்து கிடந்தது. அவர் ஏழைகளின் ரத்தத்தைப் பன்னீராக மாற்றித் தனது காதலிமார்களுக்குப் பூசிக் கொண்டிருந்தார்.

அங்கேயும் கடவுளுக்குப் புதிய உலகம் படைக்கும் ஆயுதம் கிடைக்கவில்லை.

புரொபஸரின் மூக்குக் கண்ணாடியைப் பார்த்ததுமே கடவுளுக்கு நம்பிக்கை போய்விட்டது. "இவர் சொந்தக் கண்களால் உலகத்தைப் பார்க்கத் தெரியாதவர். புத்தகங்களைத் தெரிந்த அளவு யதார்த்த வாழ்க்கை தெரியாது. இவரிடம் புதிய உலகைப் படைக்க ஆயுதம் இல்லை" என்று வெளியேறினார் கடவுள்.

சர்க்கார் உத்தியோகஸ்தர் யாரோ பெரிய வியாபாரிகளை இரகசியமாக வரச்சொல்லி வாசல் கதவைத் தாழிட்டுக் கொண்டு உள்ளே லஞ்சம் வாங்கிக் கொண்டிருந்ததனால் கடவுள் அந்த வீட்டுக்குள்ளேயே போகாமல் வாசலிலேயே காறித் துப்பிவிட்டுத் திரும்பினார்.

புதிய உலகைப் படைக்கும் புதிய ஆயுதம், முதல் ஆறு வீடுகளிலும் கிடைக்கவேயில்லை. நடிகரின் கலையில், டாக்டரின் ஸ்டெதஸ்கோப்பில், வக்கீலின் சட்டப் புத்தகங்களில், வியாபாரியின் தராசில், புரொபஸரின் மூக்குக்கண்ணாடியில், சர்க்கார் உத்தியோகஸ்தரின் பையில்—எங்கும் அந்த ஆயுதம் கிடைக்கவே இல்லை.

ஏமாற்றம் என்ற உணர்ச்சியை எந்தக் கடவுள் படைத்தாரோ அவருக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது. கடைசியாக அந்தக் குச்சு வீட்டின் வாசலுக்குப் போனார். இருமல் சத்தம் காதைத் துளைத்தது. உள்ளே ஒரு மெலிந்த உருவம் குனிந்து உட்கார்ந்து எதையோ எழுதிக் கொண்டிருப்பதைக் கடவுள் பார்த்தார். மறைந்து நின்று மேலும் கவனித்தார்.

எழுதுகிறவனுக்கு முன்னால் அவனுடைய மனைவி வந்து நின்று கூச்சல் போட்டாள்.

"எழுத்து என்ன வேண்டிக் கிடக்கிறது? எழுத்து? பானையில் அரிசி இல்லை. டப்பாவில் காப்பிப் பொடி இல்லை. அஞ்சறைப் பெட்டியில் கடுகு இல்லை. மணி பர்ஸில் துட்டு இல்லை"—

"பேனாவில் மை இன்னும் கொஞ்சம் இருக்கிறது" என்று நறுக்கென்று அவளுக்குப் பதில் கூறிவிட்டு நிமிர்ந்து பாராமலே மேலும் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தான் அவன்.

"என்ன எழுதுகிறீர்களாம் அப்படி?"

"ஏழைகளின் துன்பத்தைப் பற்றிக் கவி எழுதுகிறேன்."

அவ்வளவுதான்! இதைக் கேட்டாரோ இல்லையோ, மறைந்திருந்த கடவுள் சிறு குழந்தைபோல உணர்ச்சி வசப்பட்டுக் கை கொட்டினார்; சிரித்தார்; துள்ளிக் குதித்தார்.

"கண்டுபிடித்து விட்டேன். புதிய உலகைப் படைக்கும் புதிய ஆயுதத்தைக் கண்டு பிடித்து விட்டேன். அது இந்த நோஞ்சான் பயலுடைய கையில் அல்லவா இருக்கிறது!"—என்று வியப்பு மேலீட்டால் கூவிக் கொண்டே சிறிது சிறிதாகக் கரைந்து நீலநிற மையாக மாறி அந்த ஏழைக் கவி

www.thamizham.net - Free E Books No TM 14705

ஞனுடைய பேனுவுக்குள் புகுந்து கொண்டார்.

கவி ஆவேசம் பிடித்தவனைப் போல், ஏழைகளின் துன்பத்தைப் பற்றி எழுதிக் கொண்டே இருந்தான். அவன் மனைவி அடுப்படியில் சுருண்டு விழுந்து கிடந்தாள். புதிய உலகைப் படைக்கும் புதிய ஆயுதம் வெள்ளைக் காகிதத்தைக் கறுப்பாக்கிக் கொண்டிருந்தது.

— :: —

## அங்கே மட்டும்

சார்!

நான் கைகாட்டும் பக்கங்கள் எல்லாம், கார்கள் நிற்கும், பஸ்கள் திரும்பும், ஜீப்கள் திணறும், சைக்கிள்கள் குவியும், கலையும். ஆனல்........அங்கே மட்டும் என் கைகள், திணறும், மடங்கும், நடுங்கும் உதைப்பெடுக்கும்......என்று தன் மனைவியைப் பற்றி அலுத்துக் கொள்பவர் யார் தெரியுமா ?........

அவர் ஒரு 'டிராபிக் போலிஸ்காரர்.'

எல்ஸபி மணுளன்'

www.thamizham.net - Free E Books No TM 14705

# சித்திரைத் திருமகள்

நா. வளன்

ஞாலமெல்லாம் போற்றுகின்ற நல்லதிரு மகளே
—தமிழ்

நாவலர்கள் வாழ்த்துகின்ற நல்லதமிழ் மகளே
காலமெல்லாம் இனிக்கின்ற கலைத்திரு மகளே
—எங்கள்

காப்பியத்தே காக்கின்ற தலைத்திரு மகளே

இளவேனிற் பருவத்தின் இளந்திரு மகளே—வசந்த
இளமையில் துடிக்கின்ற இன்றமிழ் மகளே
உழைப்பெல்லாம் போற்றுகின்ற உயர்திரு மகளே
—உலகம்

தழைத்தோங்கப் பிறந்திட்ட தலைத்திரு மகளே

மாமலரில் அணிசெய்யும் மணித்திரு மகளே—தமிழ்
மாதங்களில் சிறந்திட்ட சித்திரைத் திருமகளே
நாமூன்று பேர்களுக்கு நல்லதிரு மகளே—எங்கள்
நாடெல்லாம் ஒளிசெய்யும் சித்திரைத்திரு மகளே

தளிர்க்கின்ற காவினிலே தடங்காட்டும் மகளே
—மணி

துளிதுளியாய் கோடைமழை தூவுகின்ற மகளே
கொழிக்கின்ற பழம்யாவும் கொட்டிவைக்கும்
மகளே—புதுக்

கோலமுடன் ஓடிவரும் சித்திரைத்திரு மகளே.

www.thamizham.net - Free E Books No TM 14705

# சைக்கிளுக்கு சத்தமா?

நாங்கள் பல மாணவர்கள் ஒரு சமயம் தூத்துக்குடியிலிருந்து திருச்செந்தூருக்கு. சைக்கிளில் சென்று கொண்டிருந்தோம் பந்தயம் போட்டு வேகமாகச் சென்று கொண்டிருந்தோம். இடையில் ஆத்தூர்—முக்காணி பாலம் குறுக்கிட்டது. தாம்பரபரணி ஆற்றில் இப்பாலம் கட்டப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 3 பர்லாங்கு நீளம் இப்பாலம் அமைந்துள்ளது. அச்சமயத்தில், அப்பாலத்தைக் கடந்து செல்லும் வாகனங்களுக்கு சத்தம் வசூலித்துக் கொண்டிருந்தனர். கார்களுக்கும், பஸ்களுக்கும் ரூ. 1; மாட்டு வண்டிக்கு 4 அணுவும், சைக்கிளுக்கு 1 அணுவாக வசூலித்தனர். எங்கள் கூட்டத்தைக் கண்டதும், அதில் சத்தம் வசூலிப்பவர் •பாலத்தின் இடையே ஒரு நீள மூங்கில் கழியை வைத்து, வழியை மறித்துவிட்டார். சைக்கிள் ஒவ்வொன்றுக்கும் 1 அணு கொடுத்து விட்டுத்தான் பாலத்தில் போக வேண்டுமென கூறி விட்டார்.

எங்களுடன் வந்த மாணவர் ஒருவர் அவரிடம், 'எதற்கெல்லாம் இந்த சத்தம் வசூலிக்கப்படுகிறது' எனக் கேட்டார். உடனே அவர், 'மாட்டு வண்டிக்கு 4 அணு, பஸ், கார் ரூ. 1; சைக்கிளுக்கு 1 அணு' என அடுக்க ஆரம்பித்துவிட்டார்.

உடனே நண்பர், "பாலத்தில் நடந்து செல்பவர்களுக்குச் சத்தம் உண்டா?" எனக் கேட்டார். "இல்லை" என பதில் அளித்தார்.

உடனே நண்பர், "தலைச்சுமைக்கு சத்தம் வசூலிக்கிறீர்களா?" எனக் கேட்டார். "இல்லை" என பதிலளித்தார்.

உடனே மாணவ நண்பர் சைக்கிளைத் தலைக்குமேல் தூக்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்தார். பின் எங்களுக்கென்ன? எல்லோரும் சைக்கிளைத் தூக்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தோம் கொஞ்சதூரம்தான். பின் சைக்கிளில் ஏறிக்கொண்டு பறக்க ஆரம்பித்தோம். சத்தம் வசூலிப்பவரின் முகத்தில் அசடு வழிந்தது.

பின்னால் சைக்கிளில் வந்து கொண்டிருந்தவர்களும் அப்படியே இதைப் பின்பற்ற ஆரம்பித்துவிட்டனர். அதன்பின் அந்த பாலத்தில், சைக்கிளுக்கு சத்தம் வசூலிப்பதில்லை.

தகவல்: தாஸ்.

www.thamizham.net - Free E Books No TM 14705

# ஐந்து ரூபாய்

—: :—

பி. வி. கிரி

உருக்குலைந்து போன ஒரு பெண் உருவம், அந்த டாக்டரின் முன்னால் உட்கார்ந்து கொண்டிருந்தது. அதன் பக்கத்தில் மெலிந்த ஓர் ஆண் உருவம் டாக்டரைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தது.

டாக்டர் நோயாளிகளைப் பரிசோதிப்பதும், சீட்டு எழுதித் தருவதுமாக இருந்தார். நோயாளிகள் வரிசையாக வந்து கொண்டிருந்தார்கள்.

"தம்பி......பயப்படாதே! நான் எழுதித்தரும் மருந்தைக் கொடு. எல்லாம் குணமாகிவிடும்!........" டாக்டர் ரத்தினத்தைப் பார்த்து நயமாகக் கூறினார்.

ரத்தினம் கண்ணீர் மல்க, இரு கரங்களாலும் கும்பிடு போட்டு விட்டு மனைவி தேவகியை அழைத்துச் சென்றான். நடக்கவும் சக்தியற்ற அவளைத் தோளில் கை கொடுத்து மெல்ல நடத்தி வந்தான் ரத்தினம்.

அவனுடைய குழி விழுந்த கண்களும் ரோமம் வளர்ந்த ஒட்டிய கன்னங்களும் பார்க்கப் பரிதாபமாகத்தான் இருந்தன. ஆனால் அவன் மனைவியைப் பார்ப்பவர்களோ அழுதே விடுவார்கள். 'ஆஸ்த்துமா' நோயால் அவதிப்படும் அவளின் அவல நிலைக்கு இரங்குவார் யாருமே இல்லை.

மருந்துச் சீட்டில் டாக்டர் எழுதிய எழுத்துக்கள் புரியாததுபோல அவன் வாழ்க்கையும் அவனுக்குப் புரியாமலேயே இருந்தது!

மனைவிக்கு மருந்து வாங்கி கொடுத்து விட்டால் மட்டும் போதுமா? அதற்கு வேண்டிய உணவு வேண்டாமா? அதற்கு எங்கே போவது? செலவுக்குப் பணத்தை யாரிடம் கேட்பது?

பலத்த சிந்தனையில் ஆழ்ந்திருந்த ரத்தினம், தன் மனைவியின் தலையை வருடிக் கொண்டிருந்தான்.

அலுமினியப் பாத்திரக் கடையில் இரண்டாண்டுகளுக்கு முன் வேலை செய்து கொண்டிருந்தான் ரத்தினம். அந்த வேலை உடல் நிலைக்கு ஒத்து வராததால் டாக்டர் அவனை வேலையிலிருந்து ஓய்வு



www.thamizham.net - Free E Books No TM 14705

பெறும்படி செய்து டாக்டர்! ஓய்வு பெறவேண்டிய சூழ்நிலை அல்ல அது.

வேலை செய்து கொண்டிருக்கும் போதே பிரசவ வேதனை பட்டுக் கொண்டிருந்த ரத்தினம் வேலை இல்லாமல் மரண அவஸ்தை பட்டுக் கொண்டிருந்தான்.

கூலி வேலை செய்து 'பிழைப்பை நடத்தலாம் என்ருலோ உடல்தான் ஓடாய் ஒடுங்கிப் போய் விட்டதே!

கொல்லன் துருத்தி போல தேவகி மேல் மூச்சு வாங்க வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள் கண்கள் மேலும் கீழும் ஏறி இறங்கிக்கொண்டிருந்தன. வெளுத்துப்போன முகத்தில் வேதனை ரேகைகள் நெளிந்தன.

ரத்தினம் நெற்றியைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு மூளையுடன் போராடிக் கொண்டுருந்தான். அவனுக்கு உலகமே இருண்டு கிடந்தது. அதில் வழி தெரியாமல் அவன் தத்தளித்துக் கொண்டிருந்தான்.

தத்தளித்துக் கொண்டிருந்தவனுக்கு வழி கிடைத்துவிட்டது போல் சட்டென எழுந்தான். நைந்து போன துண்டை உதறித் தோளில் போட்டான். விழி மூடித் துயிலில் ஆழ்ந்திருந்த மனைவியைக் கூட அவன் விழி அப்போது ஏறிடவில்லை. அவன் தனக்கு வழி கிடைத்து விட்டதாக விறுவிறுவென நடந்தான்.

கார், வண்டி, மாடு, மனிதர்கள் யாரையும் அவன் சட்டை செய்யவில்லை. நடந்தான், நடந்தான், நடந்துகொண்டேயிருந்தான்.

"ஆம்......நடராஜனைத்தான் பார்க்க வேண்டும். பால்ய சிநேகிதனை அவன் கட்டாயம் நமக்கு உதவி செய்வான். எப்படியாவது அவனிடமிருந்து ஒரு ஐந்து ரூபாய் கேட்டு மனைவுக்கு வேண்டிய பழம் உணவு வகைகள் வாங்க வேண்டும்......!" கண்ணீர்த் துளிகளைத் துடைத்துக்கொண்டே மேலும் நடையைக் கட்டினன் ரத்தினம்.

சிவபெருமானை மார்க்கண்டேயன் அணைத்தது போல, கல்லாப் பெட்டியை அணைத்துக் கொண்டிருந்தான் நடராஜன். கொத்தவால் சாவடியில் பாக்குக் கடை வைத்திருக்கும் பெரிய புள்ளிகளில் நடராஜனும் ஒருவன். அவன் கடைக்கு வாடிக்கைக்காரர்கள் வந்து கொண்டேயிருப்பார்கள். கொஞ்சங்கூட அப்படி அசதியாக உட்கார முடியாது. அவ்வளவு கிராக்கி அந்தப் பாக்குக் கடைக்கு.

கடைக்கு வருபவர்களை ஓரக் கண்ணுல் பார்த்துக்கொண்டே. ரூபாய் நோட்டுக்களை எண்ணி எண்ணி கல்லாப் பெட்டிக்குள் திணித்துக் கொண்டிருந்தான் நடராஜன்.

அப்போது ரத்தினம் கடைக்கு நேரே வந்து நின்ருன். கடைக் கண்ணுல் கண்ட நடராஜன்,"போ போ!.........உங்க தொல்லையே பெரிசாப் போச்சு எங்கேயாவது வீட்டுலே போய் கேட்டுப் பாரு. சோருவது போடுவாங்க!...பாக்குக் கடைக்கு வந்தா சோரு கிடைக்கும் ?" என்று எரிந்து விழுந்தான்.

துக்கம் தொண்டையை அடைத்தது ரத்தினத்திற்கு.

"என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு ?.........நான் பிச்சைக்காரன் இல்லேங்க!

ரத்தினம் கண்ணீர்த் துளிகளைத் தன் நைந்துப்போன துணியால் துடைத்துக் கொண்டான்.

www.thamizham.net - Free E Books No TM 14705

"ஆமாமா...போ, போ!...உன்னைப் போல எத்தனை பேரை நான் பார்த்திருக்கிறேன். சினிமாக்கதை யாட்டம் என்னைத் தெரியலை யான்னு கேட்டு, எங்க மடியி லேயே கை வைக்கிறுங்களே! போ! போ!...டேய் முனியா! கும்ப கோணத்துக்குப் பார்சல் அனுப்பிச்சிட்டியா?" என்று வியாபார மும்முரத்தில் ஈடுபட்டான் நடராசன்.

"நான் உங்ககூட படிச்சவன் சார்...கொய்யாத்தோப்பு பள்ளிக் கூடத்திலே..." என்று ரத்தினம் கூறி முடிப்பதற்குள், "டேய் முனியா...இவனை அந்தக் கோடிவரை கொண்டுபோய் விடுடா!..."என்று தன் அதிகாரத்தைப் பயன்படுத்தினுன். அதுவரை ரத்தினம் அங்கு காத்திருக்கவில்லை. கையெடுத்து ஒரு கும்பிடு போட்டுவிட்டு வந்த வழியே நடந்தான்.

"பள்ளியிலே படிக்கும்போது இரக்கத்தைப் பற்றிக் கட்டுரை எழுதி 'முதல் பரிசு' வாங்கின நடராசனு இவன்? இல்லாதவங் களுக்கு தம்மிடம் உள்ளதைப் பகிர்ந்தாவது கொடுத்துப் பரவச மடைய வேண்டும் என்று மாண வர்கள் கூட்டத்திலே அவன் பேசியது இப்போதுகூட என் நினைவுக்கு வருகிறதே!...அதை யுமா இவன் மறந்துவிட்டான்... அடப் பாவி!...

பிற்பகல் அவன் மிகவும் சோர்ந்து போனுன். கால்கள் நடக்க மறுத்தன கண்கள் பார்க்க மயங்கின. அடிவயிற்றை யாரோ பிசைவது போன்ற உணர்ச்சி. மனத்திரையிலே அலைமோதும் கவலைகள். இவைகளுடன் அவன் போராடிக்கொண்டு நடைப்பிண மாக நடந்தான்.

வேறு யாரைப் பார்க்கலாம், எங்கு போகலாம் என்று சிந்திக்கக் கூட அவனுக்குச் சக்தியில்லை. கால்கள் போன போக்கில் போய்க் கொண்டிருந்தான்.

"பஞ்சு!"

"யாரடா அவன்?"

"பஞ்சாட்சரம்! என்னைத் தெரிய வில்லையா உனக்கு?" தாடி அடர்ந் திருந்த முகத்தில் பல்லைக் காட்டிக் கேட்டான்.

"யாரது?...ஓ! நீயா?" என்று கூலிங் கிளாசை ஸ்டைலாகச் சுழற்றினுன் பஞ்சாட்சரம்.

"ஏன், ரத்தினம்! எங்கே இப்படி? சௌக்கியமா?"

"பஞ்சு! என்னைப் பார்த்தால் தெரியவில்லையா? பஞ்சு! ஒரு அஞ்சு..."

"டேய் ரத்தினம்! உனக்கு பஸ் ஸுக்குத்தானே காசு வேண்டும்?" என்று பாக்கெட்டைத் துழாவி ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துப் புகையைச் சுருளாக விட்டான் பஞ்சாட்சரம்.

"இல்லை வந்து..." ரத்தினம் தலை யைச் சொரிந்தான்.

"ஓ! நீ நடந்து நடந்து பழக்கப் பட்டவன் ஆயிற்றே! உனக்குத் தான் பஸ்ஸென்றுல் பிடிக்காதே!"

"இல்லை பஞ்சு! ஒரு அஞ்சு ரூபா கடனு கொடுப்பியா?" நாணி கூனிக் கேட்டான் ரத்தினம்.

கண்ணுடியைக் கையால் சுற் றிக்கொண்டே, எதிர் பிளாட் பாரத்தில் செல்லும் ஏந்திழை ஒருத்தியை ஏறிட்டுப் பார்த்தான் பஞ்சு.

"ரத்தினம்; நேற்றுதான் ஒரு

www.thamizham.net - Free E Books No TM 14705

'டிரான்சிஸ்டர்' ரேடியோ வாங்கினேன். இதோ இந்தக் கூலிங் கிளாஸ் பத்துரூபாய்...! முள்ளங்கி பத்தை மாதிரி...! நேற்றே நீ வந்திருந்தால் கொடுத்திருப்பேனே... இந்தப் 'பேன்ட்' கலர் உனக்குப் பிடித்திருக்கிறதா? சொன்னால் பயப்படுவாய்...கெஜம் பதினைந்து ரூபாய்..." இந்தக் 'கோட்டு' நன்றாக இருக்..."

நிமிர்ந்து பார்த்தான் பஞ்சு. ரத்தினத்தை அங்கு காணவில்லை.

மாலை மணி ஆறு இருக்கும்.

தெருக் குழாயில் வயிறு நிறையத் தண்ணீரைக் குடித்துவிட்டு நகர சபை இருக்கும் திசையை நோக்கி இரு கைகளாலும் வணங்கினான். வீடு நெருங்க நெருங்க அவன் மனம் 'திக்திக்'கென்று அடித்துக் கொண்டது. தோல்வி கண்டவன் போல் முகத்தைத் தொங்க போட்டுக் கொண்டு குடிசைக்குள் நுழைந்தான்.

உள்ளே எரிந்து கொண்டிருந்த மண்ணெண்ணெய் விளக்கு அணைந்து கிடந்தது. இருள் சூழ்ந்த அந்த இடத்தில் தேவகி இருக்கும் இருக்கும் இடம் கூடத் தெரியவில்லை. கூரையின் இடுக்கில் விளக்கைக் கொளுத்த நெருப்புப் பெட்டியைத் தேடிக் கொண்டிருந்தான் ரத்தினம். அந்த இருட்டிலும் கண்களைக் கசக்கிக் கொண்டு மனைவியின் முகத்தைப் பார்த்தான்.

தலை சாய்ந்து கிடந்தது, கால்கள் விறைத்துக் கிடந்தன.

"தேவகி!"

உடல் ஜில்லிட்டுக் கிடந்தது,

"தேவகி!"

மோவாய்க்கட்டையைத் தூக்கி அசைத்துப் பார்த்தான்.

"தேவ...கி !..." குடிசையே அதிர்ந்தது.


## நரைமுடியைக் கறுப்பாக்க . . .

நான் அதிகமாகச் சொல்வதாக நினைக்க வேண்டாம். எங்களுடைய **சூரியகாந்தி எண்ணெயைப்** பயன்படுத்தினால், முடியானது தனது வேர்ப் பாகத்திலிருந்து வளரத்துவங்குவதுடன் என்றும் மாறாத கருமையுடன் இருக்கும். எதிர்காலத்தில் ஏற்படும் புதிய முடிகளும் கருப்பாகவே இருக்கும், இந்த எண்ணெய் விழிகளுக்கும் மூளைக்கும் குளிர்ச்சியைத் தருகின்றது. ஆயிரக்கணக்கான ஆடர்கள் குவிகின்றன. அங்காடியில் விற்கப்படும் கற்ற எண்ணெய்களைப்போலவே எங்களுடையதும் இருக்கிறதென்று நீங்கள் நினைப்பீர்களானால், இதன் விலை, இதன் மதிப்போடு ஒப்பிடும்போது அப்படி ஒன்றும் பெரிதல்ல. விலை ரூபாய் 10-மட்டுமே. உங்களுக்குத் திருப்தி இல்லையேல் பணம் திருப்பப்படும்.

DURGA PHARMACY,
P. O. Katri, Surai (Guya)


www.thamizham.net - Free E Books No TM 14705

# உலக மக்கள் தொகை

ஒரு நிமிடத்தில் உலகில் பிறக்கும் பிள்ளைகள் 132. 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி உலக மக்கள் தொகை 344·3 கோடி. கி. பி. 2000-ம் ஆண்டில் அது 700 கோடியாகும். இவ்வாண்டு முடிவதற்குள் 11 கோடி பிள்ளைகள் பிறப்பார்கள். மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேல் பதினைந்து வயதிற்குட்பட்டவர்களாகும். நாள்தோறும் உணவருந்துவோர் தொகை 1,90,000 பேர் வீதத்தில் அதிகரிக்கிறது.

(மூலம் இந்து பத்திரிகை 12 3-68)

* * *

உலகின் உணவு உற்பத்தியைச் சரியாகப் பெருக்கி உற்பத்தியான உணவை நல்ல முறையில் பங்கீடு செய்தால் ஒருவரும் பட்டினி இருக்க வேண்டியதில்லை.

ஆண்டுதோறும் சாலைகளில் விபத்துக்களால் உயிரை இழக்கும் மக்களின் தொகையைவிட ஐந்து மடங்கு அதிகமானவர்கள் சிகரெட் புகை குடிப்பதால் மரணமடைகின்றனர்.

—செனெட்டர் ராபர்ட் கென்னடி.

* * *

உணவு மனிதனை வளர்க்கிறது; ஆனால் உணவுப் பற்றுக் குறை அரசியல்வாதியை வளர்க்கிறது.

—வெங்கிடப்பய்யா, திட்டக்குழு அங்கத்தினர்.

* * *

குடும்பத்தைத் திறமையுடன் நடத்தக்கூடிய பெண்களை இளைஞர் விரும்பித் தேடியலைகின்றனர்; ஆனால் இளம் பெண்கள் குடும்பத்தை நடத்தும் தொல்லையில்லாத வாழ்க்கையளிக்கக் கூடிய அளவு சம்பாதிக்கும் இளைஞர்களைத் தேடுகின்றனர்.

—ஜார்ஜ் கெல்லி

www.thamizham.net - Free E Books No TM 14705

# அழகு என்ற தத்துவம்

"எழில் வளவன்"

அட்டை சொல்லும் கதை

அழகைத் தத்துவமாக்கும் வயதல்ல அது அழகை முழுமையாக ரசித்து இன்புறும் வயது. அந்த வயதின் நடுப் பருவத்திலே இருந்தான் அவன். அழகின் கவர்ச்சித் தோற்றம் எங்கிருந்தாலும் அதைக் கண்டு ரசிக்காமல் விடமாட்டான் அவன்.

ரசிகத்தன்மை இருக்க வேண்டியதுதான், ஆனால் இப்படியா? தனது தொழிலேயே பாதிக்கும் வண்ணம்! செய்தித்தாளில் ஒரு சினிமா விளம்பரம் ஒரு பக்க அளவில் போட்டிருந்தால் போதும்! அதையே வைத்த விழி அசையாமல் பார்த்துக் கொண்டிருப்பான், "யோவ் டாக்ஸி" என்று வருபவர்கள் கூவி விட்ட ஒலி கூட அவனை ஒன்றும் செய்யாது. வெறுப்படைந்தவர்கள் ஸ்டான்டில் இருக்கும் மற்றொரு டாக்ஸிக்கு போவார்கள். இப்படி எத்தனை வாடகைகளை நழுவ விட்டிருக்கிறான் அவன்.

இன்றுகூட செய்தித் தாளில் பெரும் கொட்டை எழுத்துக்களில் ஒரு விறுவிறுப்பான செய்தி வந்திருந்தது. எங்கோ ஓரிடத்தில் விமானம் பனிப்படலத்தின் ஊடே சென்று, பாறை ஒன்றின்மீது மோதி ஒருவரும் பிழைக்கவில்லையாம். சுக்கு சுக்காக நொறுங்கிய விமானத்தின் பாகங்களை முதல் பக்கத்திலே பெரிசாக போட்டிருந்தார்கள். அதையே உற்று நோக்கிக் கொண்டிருந்தவன் வெளிச் சுற்றுப்புறத்தை கவனிக்கவில்லை. ஒரு பேய் காற்று எங்கிருந்தோ அடிக்க முதல் பக்கம் மடிந்து இரண்டாம் பக்கம் வந்தது. அதில் கவர்ச்சிகரமான ஒரு பெண்ணின் படம் பெரும் அளவில் வந்திருந்தது. அதை உற்றுப்பார்க்க நினைத்தவன், அப்படத்தை நன்ருகப் பார்க்குமுன்.

"டாக்ஸி இப்படியே நிறுத்தினு எப்படிய்யா! பின்னுல் இருக்கிறவங்க நகர தேவயில்லை. இன்னையப் பேப்பர் வேண்டிகிடக்கு இப்போ, அப்பால ஒதுக்குயா" எறிந்து விழுந்தான் பின்னுல் வந்த டாக்ஸி டிரைவர். கண்ணை ஒரு சிமிட்டு சிமிட்டிவிட்டு திரும்பிப் பார்த்தான் அவன். சக டிரைவர்கள் ஏளனச்சிரிப்போடு பார்த்தனர் அவனை. அவர்கள் ஏளனப் புன்னகையால் ஏற்பட்ட அவமானத்தாலோ அல்லது அவர்கள் மிகவும் சுறுசுறுப்புக்காரர்கள் எதையும் நிதானித்து ரசிக்கும் பொறுமையற்ற மடையர்கள் என்று அவன் நினைத்ததாலோ தெரியவில்லை. தனது பலமெல்லாம் சேர்ந்து ஒரு வளை வளைத்து ஸ்டீரிங்கைத் திருப்பிச் சாலையில் மறுமுனைக்கு கொண்டு சென்றுன் வண்டியை தனது மனதில் ஏற்பட்ட இந்த திடீர் மாற்றம் குறையும்வரை வண்டியின் வேகம் 40க்கு குறையவில்லை. படிப்படியாக வேகம் குறைந்து வண்டி சாதாரணமான நிலைக்கு வந்து கொண்டிருந்த அதே சமயத்தில் அவனது மனமும் பழைய நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தது.

மீண்டும் சிந்தனை வயப்பட்டான் அவன். தெருவில் ஒட்டியிருந்த சினிமா சுவரொட்டிகளில் காணப்பட்ட அவனது அபிமான நட்சத்திரங்களின் புன்சிரிப்பு வதனங்கள் அவனை கனவுலகினிலே மிதக்கச் செய்து உல்லாசபுரிக்கு அழைத்துச் சென்றது. இனிய நினைவுகளிலே ஆழ்ந்திருந்தவனை மீண்டும் ஒரு குரல் நினைவுலகத்திற்குத் திருப்பியது. பிரேக் போட்டு

www.thamizham.net - Free E Books No TM 14705

நிறுத்திவிட்டு பின் திரும்பிப் பார்த்தான்.

இன்ப நினைவுகளிலே ஆழ்ந்த பழைய உணர்வுகளில் நிழலாடிக்



கொண்டிருந்த அவன் விழிகள், கண்ட காட்சி கனவா என்று நம்ப மறுத்தன. அந்த நினைவுகளுக்கெல்லாம் நாயகி போல் ஆடம்பர நங்கை யொருத்தி வண்டியை நோக்கி அன்னநடை பயின்று வந்து கொண்டிருந்தாள். கதவைத் திறந்து விட்டு மீட்டரை போட்டவுடன் "எங்கம்மா போவனும்" என்றான்.


"நான் பல இடங்களுக்குப் போகனும்பா, அங்கங்கே நிறுத்தனும். இந்தமாதிரி பல இடங்களுக்குப் போய்விட்டு மீட்டர் காண்பிக்கிற பணத்தோட 5 ரூபாய் சேர்த்துத் தரேன். சாய்ந்தரம் வரை போகனும். முடியாவிட்டா சொல்லு...."

அவனு முடியாதென்பான். பணமே தரமாட்டேன் என்று சொன்னால் கூட நாள் முழுவதும் அவளை ஏற்றிச் செல்லத் தயாராயிருந்தான்.

"அம்மா, நீங்க காலணசேர்த்துத் தர வேண்டாமா, எவ்வளவு நேரம் ஆனாலும் பரவாயில்லை, முதல்லே எங்கே போகனும்"-ஒரு சாதாரண டாக்ஸி ஓட்டியிடம் காணப்படாத குழைவைக் கண்டு அவள் முகம் மலர்ந்தாள். அந்த மலர்ச்சியை தன் முன்னால் உள்ள கண்ணாடியில் பார்த்து மகிழ்ந்தான் அவன்.

"முதல்லே ஸ்டர்லிங் ரோடு போப்பா" அவள் பேசுவதாக அவன் உணரவில்லை, இனிய வீணையின் தந்தி ஒலிப்பதாக உணர்ந்தான். உடலெல்லாம் புல்லரித்தது.

இயற்கையான அழகு அப்படியொன்றும் நிரம்பி வழிவதாக இல்லா விட்டாலும், ஆடம்பர பொருட்களின் செயற்கை அலங்கரிப்பிலே அவள் ஒரு திரை அழகி போல கண்ணைப் பறித்தாள். திரையழகிகளின் ரசிகனான அவனும் கண்ணைப்பறி கொடுத்தான்.



www.thamizham.net - Free E Books No TM 14705

"இங்கே—இதோ அடுத்த தெரு அங்கே நிறுத்திக்கோ ஐந்து நிமிடத்திலே வந்திடறேன்."

அவள் போய்விட்டாள். ஏதோ அழைப்பிதழ்கள் கொடுப்பதற்காக இப்படி போய் கொண்டிருக்கிருள் போல இருக்கிறது. அவளது எழில் உருவத்தை நேரே பார்க்கக் கூசிய வன் வண்டியை ஓட்டும்போதெல்லாம் கண்ணுடி வழியாக அவள் முகத்தைக் கண்டு, இதற்குமுன் அவன் கண்டு கொண்டிருந்த கற்பனையையெல்லாம் நனவாக்கிக் கொண்டிருந்தான். அவளுடன் ஏதாவது பேச வேண்டும் அவள் முல்லைப் பற்கள் சிரிக்க வேண்டும் என நடுவே நினை நடுப்பான் ஆனுல் ஆனுல் என்ன பேசுவது எப்படிப் பேசுவது. அவள் தன்னைப்பற்றி ஏதாவது தவருக நினைக்கா திருக்க வேண்டும் என்று எண்ணத்தில் ஒன்றுமே பேசத்தெரியாது மீண்டும் அவளது முகத்தையே கண்ணுடியில் பார்த்துக் கொண்டிருப்பான்.

"அதோ அவள் வருகிருள். நடையில் எத்துணை குலுக்கம். மைதீட்டிய கண்கள் உதட்டிலே வெளிர் சிவப்பு சாயம், உடல் முழுவதும் இன்பமூட்டும் வாசனைப் பொருள்களின் இனிய மணம், கால்களை மறைத்து அவளை வான் வீதியிலே அழகுத் தேவதையாக பறக்க விட்டாற்போல் கால் தெரியாது மறைத்து அவளுடன் சேர்ந்து ஆடும் மெல்லிய நைலெக்ஸ் சேலை—இவையெல்லாம் அவன் கற்பனைக்கும் அப்பாற்பட்டதோற்றங்கள்—நேரே அவன் அவளை கண்டு கொண்டிருக்கிருன்.

வண்டி மீண்டும் கிளம்புகிறது. மீட்டர் விரைவாக ஓடுகிறது. அதைப்பற்றி அவள் கவலைப்படுவதாகவே தெரியவில்லை. செல்வச் சிறப்பிலே மிதந்து கொண்டு பணத்தைக் காகிதமாக மதிக்கும் பரம்பரையில் வந்த சீமாட்டியாக அவள் இருக்க வேண்டும் என்று அவ நினைத்தான். வண்டி விரைவாக சென்றுகொண்டிருக்கின்றது. அழகுக் கைப்பையைத் தனது திறந்து அடிக்கடி தனது அலங்காரங்களைச் சரிபார்த்துக் கொள்கிருள்.

சென்னை நகரின் பல முக்கிய வீதிகளையெல்லாம் சுற்றிவிட்டு வண்டி திருவற்றியூர் சாலையில் சென்று கொண்டிருந்தது. ஒரு நெருக்கமான சந்திப்பு. அவள் இறங்கிக் கொண்டாள். பல மணி நேரம் அவளுடன் அவன் இருந்தும் ஏன் அவளைப் பற்றி ஒன்றும் கேட்க அவனுக்கு துணிவில்லை? அவன் என்ன பயந்தவியா? இல்லையே. முன்பு ஒரு முறை இதே இடத்தில் ஒரு பெண்ணைச் சுற்றிக்கொண்டு காலாடிகள் சிலர் நையாண்டி செய்து கொண்டிருக்கும்போது அவன் அவர்களை விரட்டியடித்துவிட்டு அப்பெண்ணை வண்டியிலேற்றி அவள் வீட்டிற்கு அனுப்பிவைத்த நிகழ்ச்சியை அவன் இன்னும் மறக்கவில்லையே. இன்று ஒரு பெண்ணுடன் நீங்கள் யார்? ஊர் என்ன? பெயரென்ன? என்று இரண்டு வார்த்தை பேசக்கூட அவன் மனம் உடன்படவில்லை அது ஏன்? என்னதான் ரசிகனும், சபலபுத்திக்காரனுக இருந்தும் அவன் பெண்களுடன் சிறிது பேசுவானே தவிர நெருங்கிப் பழக அஞ்சுவான். ஆனுல் பெண்கள் துன்புறும்போதோ, கௌரவக் குறைவாக நடத்தப்படும் போதோ வெகுண்டெழுவான். அழகின் தூய ரசிகனுன அவன் அதன் எழில் சிறிது குன்றுவதற்கு யார் காரணமாயினும் பொறுக்கமாட்டான். அவள் அவனுடன் நெருங்கிப்பேசினுல் எங்கே அவளது எழில் அவன் ரசிகத்தன்மைக்கு உட்படாது போய்விடுமோ என்று

www.thamizham.net - Free E Books No TM 14705

காரணத்தினுல் தான் அவளிடம் பேசக்கூட அஞ்சுகின்றுன்?

மீண்டும் வருகின்றுள் அவள். வண்டி இப்போது தெற்கு நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. அவளது கண்கள் அடிக்கடி கைக் கடிகாரத்தையும், சாலையையும் நோக்குவதை அவன் கவனிக்கத் தவறவில்லை. மெரினு கடற்கரை சாலையின் மென்மையான தென்றலின் தழுவலில் வண்டி வேகமாக எவ்வித குலுக்கலுமின்றி சென்று கொண்டிருந்தது. மாலை நேர ஆதிக்கத்தை அறிவிக்கும் வண்ணம் ஆதவன் தன் மஞ்சள் நிற கதிர்களை மேல் திசையிலிருந்து மென்மையாக வீசிகொண்டிருந்தான். அந்த இனிமையான சூழ்லுக்கு பின்னணி இசை பொழிவது போல அவள் இசைக் குரல் பேசியது "உனக்கு ரொம்ப தொந்தரவு கொடுத்துட்டேன் இல்லையாப்பா. அப்பாடா—இது தான் நாம் கடைசியாக போக வேண்டிய இடம், அதன்பிறகு எனது வீட்டிற்குப் போக வேண்டியது தான்".

கடற்கரைச் சாலை நீண்டு கொண்டே சென்றது. அந்த நீளத்தை அளப்பதுபோல வண்டி விரைந்து சென்றது. சென்னை நகர எல்லையைத் தாண்டியாகி விட்டது. கடைகள், மக்கள் கூட்டம் நெருக்கமாய் உள்ள ஒரு இடம். வண்டி நின்றது. அவனை கடைக் கண் பார்வையால் செல்லமாக கன்னத்தில் தட்டுவதுபோல பார்த்துவிட்டு அந்த நெருக்கமான தெருவில் அவள் நுழைகிருள்.

சாலையில் ஒரு ஓரமான பகுதியில் தான் அவன் வண்டியை நிறுத்தியிருக்கிருன், கதவை மெல்ல மூடிவிட்டு காற்ருேட்டமாக வெளியே வந்து வண்டியின் மேல் ஒயிலாக சாய்ந்தவண்ணம் வாயிலே சிகரெட்டைப் பற்றவைத்துக் கொள்கிருன். புகை சுருள் சுருளாக வெளியே வந்து விரிவடைந்து, விரிவடைந்து இறுதியில் எங்கோ மறைந்துவிடுகிறது. அந்தப்புகைச் சுருள்கள் அவனது மனதிலே எவ்வித தத்துவார்த்த விளக்கத்தையும் எழுப்பவில்லை. மீண்டும் கற்பனையைத் தான் கிளறி விடுகிறது.

கடைசியாக அவள் மீண்டும் வருவாள். வண்டியில் ஏறுவாள். அவளை வீட்டில் இறக்கி விடுவோம் பின்பு அவளை வாழ்வில் எங்கும்தான் சந்திக்க போவதேயில்லையா!

அவனுல் அவளை என்று மறக்கவே முடியாது என்று அவனுக்குத் தோன்றியது. சிகரெட் தீர்ந்து விட்டு நெருப்பு கையை சுட்டது. அதை வீசியெறிந்து விட்டு, இரு பாக்கெட்டிற்குள்ளும் கையை விட்டுக்கொள்கிருன். அவனே அவன் முழுவதும் பார்த்துக்கொள்கிருன்.

"ஆப்டர் ஆல் ஒரு டாக்சி டிரைவர்" அவன் வாய் முணு முணுக்கின்றது. தகுதியற்ற ஆசைகளுக்கு உட்படுவது அவன் தவறுதான். ஆனுல் அவன் என்ன செய்ய முடியும். பிறவியிலேயே ரசிகனுன பிறந்த அவன் மேல் அந்த மேனியழகு அத்துணை தூரம் ஆக்ரமிப்பு செலுத்திவிட்டது அவன் அவள் அழகிலே தோய்ந்தான். அவன் மட்டும் அவளை மணந்தால்......அப்பப்பா அவனுல் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. அந்த மேனியழகின் மென்மையெல்லாம் அவனுக்கு கிடைத்து விட்டால்......

மாலை மறைந்ததையும், வான் மீது நிலவின் நிலையான ஆட்சி ஏற்பட்டு விட்டதையும் கடந்து சென்று கொண்டிருந்த அவன் நினைவுகளை எங்கோ கேட்ட சங் கொலி சாலைக்கு திருப்பியது சுற்

www.thamizham.net - Free E Books No TM 14705

றும் முற்றும் பார்த்தான். எவ்வளவு நேரம் நாம், இப்படியே நின்றிருக்கின்ருேம், இன்னும் அவள் வரவில்லையா. கடைசி வீடாதலால் அதிக நேரம் பிடிக்கலாம். சாலையில் வேகமாக தான் புதிதாக கட்டிக்கொண்டிருக்கும் கைக்கடிகாரத்தை போவோர் வருவோரெல்லாம் பார்க்க வேண்டும் என்று அசட்டுத்தனமாக ஒரு பட்டிக்காட்டு பையன் இடது கையை ஆட்டிக்கொண்டே நடந்தான். 'தம்பி மணியென்ன'? அவன் கேட்டான்.

"மணி எட்டு அடித்து பதினேழு நிமிடம்" துல்லியமாக வந்தது பதில்.

"அப்படியென்ருல் கிட்டத்தட்ட இரண்டு மணிநேரமா காத்திருக்கின்ருேம்." அவனுக்கு என்னமோ போலிருந்தது. என்னென்னமோ தோன்றியது. நேரே சென்று பார்த்துவிடலாம் என்று கூட எண்ணினுன். இதே சாலை வழியாகத்தானே சென்ருள். எந்த வீடு என்று சரியாக அவனுக்குப் புலப்படவில்லை.

அதற்குள் அந்த சாலை வழியாக யாரோ வருவது தெரிந்தது. அவனையே கேட்டுவிட்டால் ?

அந்த ஆள் டாக்சியை நெருங்கி வரும்போது "சார் இங்க ஒரு லேடி கொஞ்ச நேரம் முன்னுடி இந்த பக்கமா போனுங்க. எங்கேயாவது பார்த்தீங்களா ?"

முகத்தைக் கடுகடுவென வைத்துக்கொண்டு எரிந்து விழுந்தான் அந்த ஆசாமி.

"எவள் போராள் வராள்னு பாக்கர ரோட் பொறுக்கின்னு நினைச்சியாய்யா, வேறே வேலை இல்லையா."

அவனது கடுகடுத்த முகம் இருளில் சரியாகத் தெரியாவிட்டாலும் சாலை விளக்கிலிருந்து வந்த மங்கலான ஒளியில் ஓரளவு தெரிந்தது. அவனது முகத்தைக் கோபமாக இவனும் பார்த்தான். ஆனுல் அந்த ஆள் எங்கோ அவசரமாக செல்வதுபோல் தெரிந்தது. தூரத்தில் இருந்து வந்த ஏதோ ஒரு பஸ்ஸை கைகாட்டி நிறுத்திவிட்டு ஏறிக்கொண்டு அவன் சென்ற திசையை வெறுமையாக பார்த்துக் கொண்டே இருந்தான் அவன். அந்தக் கடுகடுப்பான முகம் மீண்டும் அவனுக்குக் காட்சியளித்தது. எங்கோ எங்கோ பார்த்த முகமல்லவா ! எங்கே எங்கே—எவ்வளவோ நேரம் பழகி இருந்ததுபோல தெரிந்தது அவனது விழிகள் தந்த காட்சி. அவனது குரல்கூட எதையோ அவனுக்கே புரியாத வகையில் நினைவுறுத்தியது. அந்த முகம் ! அந்த முகம் !

அவனுக்கு இப்போது எல்லாம் விளங்கி விட்டது போலத் தோன்றியது. தற்செயலாக காலையில் அவன் பார்த்துக் கொண்டிருந்த தினசரி கையில் தட்டுப் பட்டது. அவன் எதையோ பார்த்துக் கொண்டிருந்தான் அப்போது தானே பின்னுல் இருந்து சத்தம் வந்தது. எதையோ நினைத்தவன், ஏதோ ஒரு அவனுக்கே புரியாத நினைவில் அந்த படத்தை மீண்டும் உற்று நோக்கினுன்.

"கவர்ச்சிகரமான அந்த பெண்ணின் உருவப்படம். அதே பெண் சந்தேகமேயில்லை.

அதற்கடியில் வந்த அந்த செய்தியைப்படிக்கும்போது யாரோ ஈர்க்குச்சியின் முனையால் உடல் முழுவதும் அடிப்பதுபோல இருந்தது. "பெண் வேடத்தில் வந்த ஆண் சீன ஒற்றன்" இதுதான் தலைப்பு. சாலை அதிர்வது போல

www.thamizham.net - Free E Books No TM 14705

யும், வண்டி நகர்ந்து தன்மீது விழுவது போலவும் தான் பள்ளத்தில் தள்ளப்பட்டுகீழே, கீழே, இன்னும் கீழே......முடிவின்றி சரிந்து கொண்டிருப்பது போலவும் உணர்ந்தான்.

இறுதியாக ஒரு இடத்தில் வந்து நிலையாக நிற்பது போலத் தோன்றியது. இன்னும் அவன் வெறும் அழகை வெறுமையாக ரசிக்கும் சாதாரண ரசிகனல்ல. அழகு என்ற தத்துவத்தை வாழ்க்கைப் பாடமாகக் கற்ற கலைஞன்!

## தோற்றுப் பார்!

பிறர்மனம் நோக நடந்துகொள்வதில் பிடிவாதமாய் இராதே. அன்பு வளரட்டும் என்று தோற்றுப் போய்விடு, இப்படித் தோற்றுப் போவதால் ஒரு கெடுதியும் இல்லை. ஒன்றையும் இழந்து விடுவதில்லை. வேண்டும் என்றே தோற்றுப்பார். மனத்தின் முனைப்பு அடங்கிவிடும். ஒரு தீமையும் இல்லை. வாழ்க்கையில் எத்தனையோ துறைகளில் சோதனை செய்து செய்து பார்த்துத் தெரிந்துகொள்கிறோம், இப்படி அன்புக்காகத் தோற்றுப் போவதில் பயிற்சி பெற்றால் என்ன ?

டாக்டர். மு. வ.
தொகுப்பு : ஆர்.கே.


## வெண்குஷ்டத்திற்கு இலவச சிகிச்சை

'உண்மையான முயற்சிகள் வீணாகாது' என்பது சான்றோர்கள் சொல்லியிருக்கும் கருத்து. பல்லாண்டுகால கடுமையான முயற்சிகட்கு ஆராய்ச்சிகட்குப் பிறகு நாங்கள் வெண்குஷ்டத்திற்கு ஒரு புதிய மருந்தைக் கண்டறிந்திருக்கின்றோம். இது வீரியம் மிக்கது; அத்துடன் பலனளிப்பது. இம் மருந்தைத் தடவிய மூன்றாம் நாளே, தோலின் நிறம் மாறுவதுடன் மிக விரைவில் வெண்மை நிறம் முழுவதுமாக மறைந்துவிடுகின்றது. நீங்களும் ஒருமுறை சோதித்துப் பார்த்து இதன் மகிமையை அறியுங்கள். ஆயிரக் கணக்கானவர்கள் சோதித்துப் பலனடைந்திருக்கின்றார்கள். விளம்பரத்திற்காக ஒரு பாட்டில் இலவசமாகத் தரப்படுகின்றது.

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

BRITAIN AYURVED BHAWAN
P. O. Katri, Sauai (Guya)


www.thamizham.net - Free E Books No TM 14705

# பளிங்குப் பந்தில் எதிர்காலம்

"இசு"

அது ஒரு அழகான மதியஉணவு அருந்தும் விசாலமான அறை! நவம்பர் மாத இறுதியில் ஒரு பகல் பொழுது! மூன்று பெண்கள் ஏதேதோ வம்பளந்துக் கொண்டு உணவுக்காக காத்துக் கொண்டிருந்தனர். உணவு வந்தது. இரு பெண்கள் தங்களுக்குள் ஏதேதோ காரசாரமாக விவாதமிட்டுக் கொண்டு பதார்தங்களை சுவைத்துக் கொண்டிருந்தனர். மூன்றாவது பெண் உணவைத் தொடவே யில்லை. அவள் முகம் சோகத்தால் வாட்டமிழந்து காணப்பட்டது. அவள் தோழி உடனே அவளை நோக்கி, "என்ன ஜீன் உணவைத் தொட்டுக்கூட பார்க்கவில்லையே, ஏன் இப்படி சோர்ந்து காணப்படு கிறாய். உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே." என்றாள்.

அமைதியாக ஜீன் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள். அவள் கண்கள் மூடின. "என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. ஏதோ ஒரு பயங்கரமான நிகழ்ச்சி இன்று நமது ஜனாதிபதியவர்களுக்கு நிகழப் போகின்றது" என்றாள்.

"இன்றைக்கா! நம் ஜனாதிபதிக்கா" அவள் வியப்புடன் கேட்டாள். உடனே மற்றொரு பெண் மணி, "ஆம்! ஆம் முந்தாநாள் கூட ஏதோ ஒரு நடக்கக்கூடாத நிகழ்ச்சி ஜனாதிபதி கென்னடிக்கு நடக்கப் போகிறது. விரைவில் என்று தான் உணருவதாக ஜீன் என்னிடம்கூட கூறினாள்."

இதை அவள் கூறி முடிக்கவில்லை. திடீரென்று அந்த விடுதியில் இனிமையாக வாசிக்கப்பட்டு வந்த ஆர்கெஸ்ட்ரா இசை நின்றது. எங்கும் ஒரு திடீர் அமைதி. விடுதி ஆள் ஒருவன் மூவர் இருக்கும் இடத்திற்கு விரைவாக ஓடி வந்தான். "யாரோ கென்னடியை சுடுவதற்கு முயன்றிருக்கிறார்களாம்" என்றான்.

உடனே ஜீன் "ஜனாதிபதி இறந்துவிட்டார்" என்றாள் உயிரற்ற குரலில்.

எங்கிருந்தோ இதைக் கேட்டு ஓடிவந்த மனிதர் ஒருவர் "இல்லை, இல்லை அவர் சாகவில்லை. அவருக்கு அதிகமான அடிகூட அப்படி ஒன்றும் பட்டிருக்காது" என்றார்.

ஜீன் உறுதியாக "சீக்கிரத்தில் அவர் இறந்துவிட்டதாக அறிவீர்கள்" என்றாள். உடனே அந்த மனிதர் உள்ளே ஓடினார். மீண்டும் விரைந்து வந்து, "நான் ரேடியோவில் கேட்டேன். அவர் இன்னும் உயிரோடுதான் இருக்கிறாராம். அவருக்கு இரத்தம் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்களாம்" என்றார். ஜீன் அவரை உற்றுப்பார்த்து, "ரேடியோ கூறிய செய்தி தவறு. கென்னடி மரணமடைந்து விட்டார். முன் கூட்டியே ஜனாதிபதிக்கு எச்சரிக்கை அனுப்ப எவ்வளவோ முயன்றேன். இப்போது தாமதமாகி விட்டது." என்றாள். சில மணி நேரத்தில் அவள் கூறியது

சென்ற இதழில் குறிப்பிட்ட ஜீன்டிக்ஸன் பற்றிய வியப்பூட்டும் விவரங்கள்!

www.thamizham.net - Free E Books No TM 14705

நிகழ்ந்துவிட்டது. அமெரிக்காவும், அகில உலகமும் செய்தி கேட்டு வியந்து நின்றது.

ஜீன் டிக்ஸன் என்ற இந்த அமெரிக்கப் பெண்மணி கென்னடியின் கொலை பற்றி உணர்ந்தது என்று தெரியுமா? கென்னடி ஜனாதிபதியாவதற்கு பதினொரு ஆண்டுகளுக்கு முன்பு! 1956ம் ஆண்டு "பரேட்" என்ற பத்திரிகையில் அவர் கூறிய நிகழ்ச்சி வந்திருக்கிறது. இத்தகைய விசித்திர திறமை பெற்ற இவர் ஒரு போலி ஜோதிட ஞானியோ ஏமாற்று வித்தைக்காரியோ அல்ல! நடந்து வரும் நிகழ்ச்சிகளைக் கொண்டு நடக்கப் போகும் நிகழ்ச்சிகளை ஊகிக்கும் சொற்களாக அவர் கூற்று இருப்பதில்லை. ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை எதிர் காலத்தை தன்னிடமுள்ள சில அரிய உணர்வுகளால் முன் கூட்டியே காட்சிகளாய் காணும் திறம் பெற்றவர் பிறக்கின்றார்கள் என்று பல நிபுணர்கள் கூறுகிறார்கள். அத்தகைய அரிய திறம் பெற்றவர்களில் ஜீன் டிக்ஸன் ஒருவராய் இருக்கிறார் என்று அவரது வாழ்க்கை சரிதம் நமக்கு காட்டுகிறது.

முதல் உலகப்போரின் முடிவிற்கு சிறிது காலத்திற்கு முன்பு அமெரிக்காவின் சிறுகுக் கிராமத்தில் பிறந்த ஜீன், சிறு குழந்தையாயிருக்கும் போதே தனது பெற்றோர் எம்மா வான்க்ரெப்பி, ஃபிராங்பின்சர்ட் இவர்களுடன் கலிபோர்னியா வந்தடைந்தார். அங்குதான் ஜீன் டிக்ஸனுடைய இந்த அபூர்வ திறமை முதன் முதலில் வெளிப்பட்டது. அவளது இந்த திறமையை முதன் முதலில் உணர்த்திய நிகழ்ச்சியைப் பற்றி அவரிடம் கேட்டால் இன்றுங்கூட உணர்ச்சிப் பெருக்கோடு அவர் கூறுகிறார். அந்த ஊரில் ஒரு நாள் நாடோடிக் குறப் பெண் (gipsy) ஒருத்தி வந்து தங்கியிருப்பதாகவும், அனைவருக்கும் குறி சொல்வதாகவும் அறிந்த ஜீனின் தாய் ஒரு நாள் அவளிடம் ஜீனை அழைத்துச் சென்றாள். அப்போது ஜீனுக்கு வயது எட்டு. ஒவ்வொருவரையாக பார்த்துவந்த அந்த நாடோடிப் பெண் ஜீனிடம் வந்தாள். அவளுடைய கைகளைப் பற்றி பலமுறை உற்று நோக்கினாள். பிறகு உணர்ச்சிப் பெருக்கால், "இந்தப் பெண் மிகமிக புகழ் பெறப் போகிறாள். உலகத்தில் நடைபெறப் போகும் மிகப் பெரிய மாற்றங்களை முன்கூட்டியேகாணப் போகிறாள். வருவதுரைக்கும் தீர்க்கதரிசினியாகும் பேறு இவளுக்கு கிடைத்திருக்கிறது. பாருங்கள் இவள் கையில் நெளியும் கோடுகளை! இவ்வளவுஅதிர்ஷ்டம் வாய்ந்த விநோதக் கோடுகளை நான் இதுவரைக் கண்டதில்லை" என்று கூறி உடனே தனது கூடாரத்திற்கு சென்று ஒரு பளிங்குப் பந்துடன் வெளியே வந்து "இது இனி உன் கையில் இருக்கவேண்டியது. நீ ஆழ்ந்த சிந்தனையுடன் எதிர்காலத்தை நினைக்கும்போது விசித்திரமான நிகழ்ச்சிகளை நீ இதில் காணலாம்" என்றாள். குழந்தை ஜீன் உடனே அந்தப் பந்தை வாங்கி உற்றுப் பார்த்தது. அதற்கு அது ஒரு புதிய விளையாட்டுப் பொருளாகத் தோன்றியது. அந்தக் காலத்தில் அங்கே டெலிவிஷன் வரவில்லை யென்றாலும், டெலிவிஷனில் காணுவதுபோல அந்தப் பந்தில் நிகழ்ச்சிகளைக் கண்டாளாம்.

"அதோ தெரிகின்றன நீல நிறக் கடல் அலைகள். அதை அடுத்து தூரத்தே நிலப்பகுதி ஒன்று தெரிகிறது. அது தான் இந்த நாடோடிப் பெண் வந்த இடமாக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அதையடுத்து ஒரு விசித்திரமான உண்கலத்தில் அவள் ஏதோ உணவு சமைக்கிறாள். அவளுக்கு ஏதோ துன்பம் வருவதுபோல

www.thamizham.net - Free E Books No TM 14705

உணர்ந்து கத்தினேன்" என்று ஜீன் தன் குழந்தைப் பருவத்தில் தான் முதன் முதலாகக் கண்ட தோற்றங்களைக் கூறுகிருள். அடுத்தமுறை அந்த நாடோடிப் பெண்ணை தாயுடன் சந்திக்கச் சென்றிருந்தபோது அவள் கையில் கட்டுப் போட்டிருந்தாளாம். சமைக்கும் போது சுடுநீர் கையில் விழுந்து கையை காயப்படுத்தியிருந்ததாம்!

குழந்தை ஜீனின் இந்தத் திறமையை, கடவுளின் ஒரு அபூர்வ கொடையை இன்னும் வளர்ச்சிப் படுத்த தாய் எம்மா வான்க்ரெப்ரி தன்னுலியன்ற முயற்சிகள் எல்லாம் செய்தாள். ஜீன் வளர வளர அவளது தீர்க்கதரிசன மெய்யறிவும் வளர்ந்தது. இரண்டாம் உலக மகாயுத்தம் நடந்து கொண்டிருந்த சமயம்! லாஸ் ஆன்ஜலஸில், சிகை அலங்கார நிலையம் ஒன்றிற்கு ஜீன் சென்றிருந்தாள். அப்போது அந்த நிலைய அதிபர் ஜீனை அங்கு வந்திருந்த திரை நடிகை கரல்லா லாம்பர்டு என்பவருக்கு அறிமுகப்படுத்தினுர். உடனே அவருடன் கைகுலுக்க ஜீன் முன்னே சென்ருள் அப்படி செல்லும்போது ஏதோ எச்சரிக்கை அதிர்வு ஒன்று அவளுக்குத் தோன்ற தன்னையும் மறந்து, "லாம்பர்டு, நீங்கள் இன்னும் ஆறு வார காலத்திற்கு விமானத்தில் எங்கும் செல்லாதீர்கள்" என்ருள். ஆனுல் அந்த நடிகை புன்சிரிப்புடன், "உடனே ஒரு முக்கிய விஷயமாக நான் விமானத்தில் கிளம்ப இருக்கிறேன்" என்ருர். அடுத்த முறை ஜீன் அதே சிகை அலங்கார நிலையத்திற்கு வந்த போது அந்த மனிதர், "நீங்கள் போனவுடன் லாம்பர்டு, உங்கள் அறிவுரைப்படி போகாமல் இருப்பதா, போவதா என்று தெரியாமல் காசு ஒன்றை குலுக்கிப் போட்டுப் பார்த்தாள் பிறகு விமானத்தில் சென்று விட்டாள். அந்த விமானம் விபத்தில் நொறுங்கி விட்டது" என்று பரிதாபமாகக் கூறினுர்.

ஜீன் டிக்ஸன் மனேதத்துவ நிபுணர்கள் பலரின் கவனத்தை மிக அதிகமாக கவருகிருர். அவர் அறிவிக்கும் தீர்க்கதரிசனம் பற்றி மனேதத்துவத் துறையில் பல வழிகளில் கண்டு உணர முயற்சிக்கின்றனர். அவரையே இதுபற்றி கேட்டபோது தான் பல வழிகளில் எதிர்கால நிகழ்ச்சிகளைக் காண்பதாகக் கூறுகிருர். சில சமயங்களில் சிலருடைய விரல்களை தொடும்போதே அவரைப்பற்றி உணருவதை கூறுகிருர். நேரில் காணுத சில மனிதர்களின் இறந்த கால, எதிர்கால நிகழ்ச்சிகளையெல்லாம் கூட, அவர்களின் பிறந்த தேதியையும், மாதத்தையும் வைத்து வியப்பூட்டும் வகையில் அறிவிக்கிருர். ஆனுல் சாதாரணமாக அவர் கூறுவதெல்லாம் பளிங்குப் பந்தை வைத்து அதில் ஆழ்ந்த தியானத்திற்குப்பின் காணும் உள் நிகழ்ச்சிதான்! அவர் அதிக மதிப்பளித்துக் கூறுவது எதிர்பாராத விதமாக அவருக்குத் தோன்றும் காட்சிகள் தான் என்கிருர். பெரும் மகத்தான நிகழ்ச்சிகளைப்பற்றி அவர் கண்டதெல்லாம் இத்தகைய காட்சிகளில் தான்.

இவர் கூறும் எந்த கூற்றும் சாதாரணமாகத் தவறுவதில்லை. அவர் காணுவதை வைத்து நிகழ்ச்சிகளை கோர்வைப் படுத்திக் கூறுகையில் சிறு தவறுகள் நிகழ்ந்திருக்கின்றன. அது கூட அவர் கோர்வைப்படுத்தி கூறிய அநுமானத்தின் தவறே ஒழிய கண்டதின் காட்சிகள் தவருனதேயில்லை.

ஜீன்டிக்ஸன் கடவுளிடம் ஆழ்ந்த நம்பிக்கையும், பற்றும் கொண்டவர். கடவுள் தனக்கு அளித்துள்ள இந்த பேற்றை

www.thamizham.net - Free E Books No TM 14705

மக்கள் நலனுக்காகவே அவர் பயன் படுத்துகிறார். மிக பக்தி வாய்ந்த கத்தோலிக்கு கிறிஸ்துவரான இவர் ஒரு நாள் கூட பூசையைக் காண தவறுவதில்லை. அவர் உண்பது முற்றிலும் காய்கறி உணவு தான்.

ஜீனின் கணவர் ஜேம்ஸ் டிக்ஸன் என்பவர் எஸ்டேட் சம்பந்தமான வாணிபத்துறையில் இருக்கிறார். ஜீனுடைய திறமைகளைப் போற்றி, அவளுக்கு சிறந்த கணவராக விளங்கி வருகிறார். ஒரு நாள் காலை பளிங்குப் பந்தை வைத்து தியானித்துக் கொண்டிருக்கும் போது பறக்கும் ஒரு விமானம் நெருப்புக்குள்ளாகும் காட்சியைக் கண்டார் ஜீன். அன்று மாலை அவர் கணவர் சிகாகோவிற்கு விமானத்தில் செல்ல இருந்தார். ஆனால் ஜீன் அவருக்கு தான் காலை பளிங்குப் பந்தியில் கண்ட நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு எச்சரித்துப் பார்த்தார். ஆனால் ஜேம்ஸ் அதை அதிகப் பொருட்படுத்தவில்லை. ஜீன், அன்று தன் வாழ்விலேயே முதன் முறையாக அவர் போகவே கூடாது என்று அடம் பிடித்ததன் விளைவாக அவர் தன் பயணத்தை ஒரு வழியாக நிறுத்தினார். அவர் டிக்கெட் வாங்கியிருந்த விமானம் சிகாகோவிற்கு சற்று வெளியே நொறுங்கி பயணம் செய்தவர்கள் அனைவரும் மாண்டதாக அடுத்த நாள் செய்தி கூறியது.

இப்படி ஜீன் எத்தனையோ உயிர்களை காத்திருக்கிறார். அது மட்டுமல்ல எத்தனையோ பேர்களிடம் உள்ள, அவர்களுக்கே தெரியாத அரிய திறமைகளை வெளிக் கொண்டு வர உதவியிருக்கிறார். எனவே ஆயிரம் ஆயிரம் நண்பர்களும், மற்றவர்களும் அவரிடம்

*With compliments from*

# M/s. Ravi Ragaviah & Sons

**Burmah - Shell and Nocil Agents**

**CHALLAPALLI**

**ANDHRA PRADESH**

www.thamizham.net - Free E Books No TM 14705

உதவி வேண்டி வந்த வண்ணம் இருந்தனர். ரூஸ்வெல்ட் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக இருந்த போது, அவரே ஜீன் டிக்ஸனுடைய திறமைகளைக்கண்டு வியந்து தன்னை வந்து பார்க்குமாறு அழைத்திருந்தார். 1944ம்ஆண்டு நவம்பர் மாதத்தில் ஒரு நாள் நேரிலே ரூஸ்வெல்டுடன் உரையாடும் வாய்ப்பு ஜீனுக்கு கிட்டியது. அவரிடம் நெருங்கிப் பேசிய போது ஏதோ ஒரு தனிமை அவரைச் சூழ்ந்திருப்பதாக ஜீன் உணர்ந்தார். "நான் என்னுடைய வேலைகளை செய்துமுடிக்க எனக்கு எவ்வளவு காலம் இருக்கிறது" என்றாராம் அவர் பேச்சினிடையே. ஜீன் அவரது விரல்களைத் தொட்டு விட்டு, பதிலளிக்காது மழுப்ப முயன்றார். ஆனால் ஜனாதிபதி உறுதியாகக் கேட்பதைக் கண்டு, "ஆறு மாதம் அல்லது அதற்கும் குறைவாக" என்று விடையளித்தார். அறையில் ஆழ்ந்த அமைதி நிலவியது. பின்பு ஜனாதிபதி மீண்டும், "ரஷ்யாவைப் பற்றி நாம் எடுக்கும் முடிவுகளைப்பற்றி என்ன நினைக்கிறாய்" என்றார். அதற்கு ஜீன், "உலக அமைதி நிலவுவதற்குமுன் அமெரிக்கா, பிரான்சு, இங்கிலாந்து, ஜெர்மனி இவையெல்லாம் நட்பு நாடாக விளங்கப்போகின்றன. ஜெர்மனியும் நம்முடன் இருந்து ரஷ்யாவிற்கு எதிராக இயங்கப்போகின்றது" என்றார். அந்த சமயத்தில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு ஆகிய நாடுகள் ரஷ்யாவுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு ஜெர்மனிக்கு எதிராக போரிட்டுக் கொண்டிருந்தன. எனவே ஜனாதிபதி, "நாம் ராஷ்யாவுடன் ஒன்று சேர்ந்து இருக்கப் போவதில்லையா?" என்றார் வியப்புடன். ஜீன், "நாம் ரஷ்யாவுடன் ஒன்று சேரப் போகின்றோம். இப்போதல்ல,பிறகு செஞ்சீனாவுக்கு எதிராக நாம் போராடும் போது" என்றார்.

"செஞ்சீனவா! நமக்கும் சீனவிற்கும் எந்தத் தகராறும் இருப்பதாகத் தோன்றவில்லையே" என்றார். ஜீன் தனது பளிங்குப் பந்தில் நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டே, "சீனு, கம்யூனிஸ்டு நாடாவதைக் காண்கிறேன் அது மட்டுமல்லாமல் வரும் ஆண்டுகளில் அது நமக்கு பெரும் தலைவலியாக விளங்கப் போவதையும் காண்கிறேன். அதனையடுத்து வெளிநாட்டு விவகாரத்தில் ஆப்பிரிக்கா பெரிய தொந்தரவு தரும் நாடாக விளங்கப் போகின்றது" என்று தெளிவாக அறிவித்தார். இறுதியாக ஜனாதிபதி, "நான் என் வேலைகளை நிறைவேற்ற எத்தனை வருடக்காலம் இருக்கின்றது" என்றார். ஜீன் உடனே, "ஆண்டுகளல்ல, மாதங்கள், ஆறு மாதத்திற்கும் குறைவாக" என்றார் பிறகு இருவரும் விடைபெற்றனர். அதன் பிறகு 1945 ம் ஆண்டு மீண்டும் அவரை சந்திக்கும் வாய்ப்பு ஜீனுக்கு கிட்டியது. அப்போது கூட அவர் கேட்டார் "இப்போது எனக்கு இன்னும் எத்தனை நாட்கள் இருக்கின்றன?" "நாம் நினைக்க விரும்புவதை விடக் குறைவாக" என்றார் ஜீன். 1945 ம் ஆண்டு ஏப்ரல் 12 ம் தேதி அவர் மரணமடைந்தார். ஜீன் குறிப்பிட்ட கால அளவான ஆறுமாதத்திற்குச் சற்றுக் குறைவாக அவர் தனது வாழ்வை முடித்து விட்டார்.

இது மட்டுமல்ல. இன்னும் நாட்டின் எத்தனையோ தலைவர்களும், தூதுவர்களும், பெரிய மனிதர்களும் அவரிடம் ஆலோசனை கேட்க வந்துள்ளனர். எத்தனையோ பேருக்கு, அவர்கள்

[இதன் தொடர்ச்சி 56ம் பக்கம் பார்க்க]

www.thamizham.net - Free E Books No TM 14705

# அஞ்சாகனுடன சில நிமிடங்கள்!

— o —

கேள்வி : மாணவர்களின் முதல் கேள்வி எதுவாக இருக்குமென்று நினைக்கிறீர்கள் ?

பதில் : காலத்தாலும் சூழ்நிலையாலும் கனிந்து நிற்கும் பிரச்சினையே மாணவர்களின் கேள்வியின் கருப்பொருளாக இருக்கும், இன்றைய பிரச்சினை......?

கேள்வி : நீங்கள் இதுவரை நடித்த படங்களில் உங்களுக்கே திருப்திகரமான நடிப்பு எந்தப் படத்தில் அமைந்தது.

பதில் : என்னத்தே திருப்தி !

கேள்வி : மாணவர் உலகம் எப்படி இருந்தால் இன்னும் சிறப்பாக எதிர்கால செம்மல்கள் உருவாவார்கள் என எண்ணுகிறீர்கள் ?

பதில் : உலகம் உங்களை தெரிந்து கொள்ளுமுன்பே, அந்த உலகத்தை நீங்கள் புரிந்து கொள்வதுதான்.

கேள்வி : சந்திரனுக்கு முதல் மனிதனை அனுப்பப்படுவதாக இருந்தால் சம்மதிப்பீர்களா ?

பதில் : நான் அமெரிக்காவிலோ ரஷ்யாவிலோ பிறக்கவில்லையே!

கேள்வி : இறப்பிற்குப் பிறகும், மனித வாழ்வு தொடருகிறது என்ற கொள்கையை நம்புகிறீர்களா ?

பதில் : அது மத போதகர்களின் தத்துவம்......

கேள்வி : நீங்கள் படித்துக் கொண்டிருக்கும்போது திரைவானில், ஒரு வில்லன் நடிகராக மாறுவீர்களென நினைத்தீர்களா ?

பதில் : கல்லூரியின் காலத்தே திரைக்கலைஞனாக வேண்டுமென ஆசை உதயமாகியது...!

கேள்வி : திரை உலகால் நாடு கெடுகிறது என்று பலபேர் கூறுகிறார்களே அத்தகைய திரையுலகத்தைத் திருத்தி அமைக்க வேண்டுமென்ற புரட்சியை நீங்கள் ஏன் தொடங்கக் கூடாது.

பதில் : குருடர்கட்கு பகலும் இருண்டதாகவே இருக்குமாம் பகலுக்கும் ஒளியேற்றும் பணி - தேவையா......?

கேள்வி : நடிகரும் அரசியல்வாதியும் ஒரே தன்மையுடையவர்கள் என்ற கூற்றுக்கு, உங்கள் விளக்கம் என்ன ?

பதில் : இருவரும் மனிதர்களே ; கலைஞர்கள் இன்று அரசியலில் பெரும் பங்கு பெற்றிருக்கிறார்கள்.

கேள்வி : பாங்குகளை தேசியமயமாக்குவது பற்றி உங்கள் கருத்தென்ன ?

பதில் : காலம் பார்த்து போடுகிற விதையும், நேரமறிந்து சொல்கிற உண்மையுந்தான் சரியான பலனைத் தரும்.

கேள்வி : உங்களுக்கு என்று ஒரு



www.thamizham.net - Free E Books No TM 14705

பாத்திர அமைப்பு உங்கள் உள்ளத்தில் உருவாகி, அதை நடிப்பதற்கு சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருக்கிறீர்களா? அப்படியானல் அக்கதாபாத்திரம் என்ன?

பதில்: எனக்கென்று ஒரு பாத்திர அமைப்பை எதிர்பார்க்கவில்லை பாத்திர அமைப்புக்கென்றுதான் நான்.

கேள்வி: நாங்கள் கலை சேவை செய்யவே சினிமாவில் இருக்கிறோம் என்கிறார்களே, அதைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

பதில்: அது அவர்களது கருத்து சுதந்திரம். இது ஜன நாயக யுகம்.

கேள்வி: பட உலகில் நடிப்பதைத் தவிர வேறு துறையில், (அதாவது டைரக்ஷன் துறையில்) உங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு இருக்கிறதா?

பதில்: இன்றைய மாணவமணிகட்கு நானே பேராசிரியராக வர விருப்பம் இருக்காதா!

கேள்வி: காதல் ஒரு தெய்வீக உறவு என்றார் நாங்கள் பேட்டி கண்ட ஒரு நடிகர். அதைப்பற்றி நீங்கள் என்னசொல்லுகிறீர்கள்.

பதில்: அமர காவியங்கள் பிறந்ததே, உண்மைக் காதல் தெய்வீகமானதால் தானே...?

கேள்வி: மாணவர்களால் மாணவர்களுக்காக நடத்தப்படும் இந்த பூச்செண்டு பத்திரிகையைப் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்.

பதில்: மாவீரனின் போர்வாள் முனையைவிட மாணவ மணிகளின் பேனு முனை வலிமை வாய்ந்தது. போலீஸ் உங்களிடம் துப்பாக்கி வேட்டுகளைக் கிளப்பினுல், பொதுத் தேர்தலில் ஓட்டுகளை வைத்து அவர்களை கிளப்புகிறீர்கள். பூச்செண்டு மாணவர்களின் பேராயுதம்! பூச்செண்டு பல்வேறு மணம் கமழும், மாணவர்களை இணைத்து நிற்கும் மலர் செண்டு. பூச்செண்டு புதிய தலை முறையினருக்கும் கிடைத்திருக்கும் புரட்சி செண்டாக, புத்தொளியும் புதிய மணமும் பரப்பவேண்டும்; மக்கள் மனம் மகிழ வேண்டும்; மாணவருலகம் தழைக்க வேண்டும், பூச்செண்டு வாடாமலர் செண்டாக வளர்ந்து தழைத்து செழிக்க வாழ்த்துகிறேன்.

[பேட்டி: பொறுப்பாசிரியர்கள்.]

## ‘அதிசய காலியோப்’

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ‘காலியோப்’ என்னும் பறவை காணப்படுகின்றது. இது நடக்காது. ஆனுல், எல்லாப் பக்கங்களிலும் வேகமாகப் பறக்கும் ஆற்றல் வாய்ந்தது, இஃது ஓர் அவுன்ஸ் எடையில் ஏழில் ஒரு பங்குதான் இருக்குமாம்.

உலகத்தில் மிகப் பெரிய பறவை தீக்கோழிதான். இது ஆப்பிரிக்காப் பாலைவனத்தில் மிகுதியாகக் காணப்படும். உயரம் ஏறத்தாழ எட்டடி; இறக்கைகள் உண்டு; ஆனுல் பறக்காது. இதனுடைய முட்டை 20 கோழி முட்டைகளைக் காட்டிலும் பெரியதாக இருக்கும்.

www.thamizham.net - Free E Books No TM 14705

# ஆடைக்கலையில் "நிறம்"

— : : —

ஆ. வி. நிர்மலா

மனிதன் என்று ஆடைகளை கண்டறிந்தானே அன்று முதல் உடைகள் மனித நாகரீகத்தில் பெரும் பங்கு வகுக்கலாயின. கடந்து சென்ற சரித்திர ஏடுகளைப் புரட்டிப் பார்க்கின்ற நேரத்திலே ஆடை எந்த அளவுக்கு சில நாடுகளில் பெரும் பங்கு வகித்திருக்கின்றது என்பதை உணர்கின்றோம். சிறப்பாக இங்கிலாந்து நாட்டிலே, எலிசபெத், விக்டோரியா நூற்றுண்டுகளில் உடைகள் அன்றைய நாகரீக வாழ்வின் பெரும் அங்கமாக விளங்கின. அன்று மட்டுமென்ன, இன்றும் கூட உடைகள் நமது வாழ்வில் ஒரு தனிப் பங்கு கொள்கிறதென்றால் மிகையல்ல. உடை அணிவதே ஒரு தனிப்பெருங்கலை! சிறப்பாக மகளிர் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டிய அழகுக் கலை! நல்ல உடையை நாகரீகமாக அணிபவர்களை நாம் போற்றுகிறோம். சுருங்கக் கூறப்போனால் தனி மனிதனுடைய தனிப் பண்பு (Personality) ஆடைகள் அணிவதன் மூலம் தான் எதிரொலிக்கின்றது. எப்படி உடையணிகின்றார்கள் என்பதைப் பொறுத்தே பல சமயங்களில் தனி மனிதர்களின் பண்புகள் ஊகிக்கப் படுகின்றன.

## ஆடைக்கலையில் நிறத்தின் பெரும் பங்கு :

ஆடைக் கலையில் முதற்கண் வைத்து சிந்தித்துப் பார்க்கும் கட்டத்தில் "நிறம்" விளங்குகின்றது. இந்தக் கலையில் நிறத்தை ஒருவர் தேர்ந்தெடுப்பதைப் பற்றி நன்கு உணர்ந்து கொள்வார்களானலும் அக் கலையின் பெரும்பகுதி அவருக்கு கைவந்த ஒன்ருகி விடுகிறது என்பதில் ஐயமில்லை. எனவே அந்த நிறத்தை நாம் தேர்ந்தெடுப்பதற்கு அவற்றின் விளைவுபற்றி நாம் முதலில் நன்கு உணர வேண்டும்.

## நிறங்களின் மனேதத்துவ விளைவுகள்

ஒவ்வொரு நிறத்திற்கும் தனிப்பட்ட மனேதத்துவ விளைவுகள் உண்டு என்று மனேதத்துவம் கூறுகின்றது. அந்த விளைவுகளை சரிவர உணர்ந்து எந்தநிற ஆடைகள் நமக்கு பொருந்தி வருகின்றது என்பதை உணர வேண்டும். எடுத்துக் காட்டாக ஒரு கருப்பு நிறப் பெண் வெளிர் நிற ஆடைகளில் கவர்ச்சிகரமாகத் தோற்றமளிப்பாள். அதே சமயத்தில் இருண்ட நிற ஆடைகள் சிவப்பான பெண்களுக்குக் கவர்ச்சியைக் கொடுக்கும். எனவே சில நிறங்கள் சிலருக்கு அழகாக பொருந்தி வருகின்றன. சில எரிச்சலை உண்டு பண்ணுகின்றன. உதாரணமாக சிவப்பு, ஆரஞ்சு போன்ற நிறங்கள் கிளர்ச்சியூட்டக் கூடியவை. அதேசமயம் பச்சை, நீல வண்ணங்கள் அமைதிப் படுத்தும் தன்மை வாய்ந்தவை. மஞ்சள் நிறம் இன்பமான ஒரு விளைவை ஏற்படுத்தக் கூடியது. சிலவகை பச்சை நிறங்கள் புத்துணர்ச்சி அளிக்கின்றன. நீல வண்ணம் ஒரு தனி மதிப்பையும், கம்பீரத்தையும் ஊட்டுகின்றது. எனவே நிறங்கள் அணியும் நேரத்திற்குத் தக்கவண்ணம், நிகழ்ச்சிக்கு ஏற்ப அமைய வேண்டும்.

## நேரமும் நிறமும் :

அடுத்து நாம் நிறங்களைத் தேர்ந்தெடுக்கும்போது நாம் தேர்ந்தெடுக்கும் நேரத்தையும் கவனிக்க

www.thamizham.net - Free E Books. No.TM 14705

வேண்டும். எப்போதும் பகல் நேரத்தில் ஆடைகளைத் தேர்ந்தெடுப்பதே நல்லது. மாலை வேளைகளில் வேறுபட்ட விதமாக நிறங்கள் தோற்றமளிக்க வாய்ப்பு உண்டு. அப்படி மாலையில்தான் எடுக்கவேண்டும் என்றால் பிரகாசமான செயற்கை விளக்குகள் இருப்பின் எடுக்கலாம். நாம் எப்போதும் ஆடைகளைத் தேர்ந்தெடுக்கும் போதும் நாம் அவற்றை அணியும்போதும் எந்த ஒரு நிகழ்ச்சிக்கு என்று மனதில் வைத்துக் கொண்டே தேர்ந்தெடுக்க வேண்டும்.

## உடலளவும் ஆடையும் :

ஆடைகளைத் தேர்ந்தெடுக்கும் போது அணியும் நபரின் உடலளவும் கண்காணிக்கப் படவேண்டிய ஒரு முக்கிய கட்டமாகும். நாம் தேர்ந்தெடுக்கும் உடை நபரின் நல்ல தோற்றங்களை மேலும் அதிகரிக்க உதவும் வண்ணமும் கவர்ச்சியற்றவைகளை மறைக்கும் படியாகவும் நாம் தேர்ந்தெடுக்கும் நிறங்கள் அமைய வேண்டும். குண்டானவர்கள், அழுத்தமான நிறமான சிவப்பு, பச்சை ஆகிய நிறங்களில் சேலை அணிந்தால் உடல் பருமன் குறைந்து காணப் படுகின்றார்கள். அதே சமயத்தில் வெளிர் நிறங்கள் அல்லது குளிர்ச்சியான நிறங்கள் கண்ணுக்கு உடனே சட்டென்று தோன்றுவதால், நபரை தோற்றத்தில் சற்று அதிக பருமனாக காட்சியளிக்க வைக்கின்றது. எனவே ஒல்லியானவர்கள் இத்தகைய நிறங்களில் சேலைகள் அணியலாம்.

## நிறங்களின் விகிதம் :

அடுத்து நாம் அணியும் ஆடைகளின் நிறங்களின் விகிதம் ஒரு குறிப்பிட்ட அளவின்படி இருக்க வேண்டும். மனோதத்துவ நிபுணர்களின் சோதனைகளின்படி அந்த விகிதம் 2 : 3 எனத் தெரிகின்றது. உதாரணமாக ஒரு மங்கல நிகழ்ச்சிக்காக ஊதாவும், மஞ்சள் நிறமும் நாம் தேர்ந்தெடுக்கும் ஆடைகளின் நிறங்கள் எனக் கொள்வோம். இங்கு மஞ்சள் நிறம் ஊதாவை விடக் கண்ணுக்கு கவர்ச்சியளிக்கக் கூடிய வண்ணமாகும். எனவே ஊதா : மஞ்சள் 3 : 2 என்ற விகிதத்தில் வரும்படி உத்தேசமாக நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## ஆடையும் வயதும் :

அடுத்து வயதும் ஆடைக்கலையில் முக்கியமான ஒரு பங்கை வகிக்கின்றது. இதற்கும் நிறங்களின் தன்மையை மனோதத்துவ ரீதியில் ஆய்ந்து ஒரு சில குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வயது வாய்ந்த பெண்கள் ஆழ்ந்த நிறங்களில் உடை உடுத்தல்வேண்டும். ஆழ்ந்த நீலமும், ஆரஞ்சு நிறமும் அவர்களுக்கு ஏற்றவை.

## ஆடையும் தரமும் :

ஆடைகளின் தரங்கள் அடுத்து சிந்திக்க வேண்டியவையாகும். உதாரணமாக ஒரு பட்டுப்புடவையும் பருத்தி புளவுசும் பொருந்தாதவை. அப்படியே நல்ல அலங்காரமிக்க புடவையும் சாதாரண ஜாக்கெட்டும் பார்க்க கவர்ச்சிகரமாக இருக்கா. ஆனால் சிறு வேறுபாடுகள் இவற்றிடையே இருந்தால் நன்றாயிருக்கும். குள்ளமாக குண்டாக இருப்பவர்கள் நேர் மடிப்புள்ள ஆடைகளை உடுத்தினால் சற்று மெல்லியதாக காணப் படுவார்கள். சிறு டிசைன்களும், செங்குத்துக்கோடுகளும் கொண்ட புடவைகள் குள்ளமானவர்களுக்கு பொருந்தியவை. ஒல்லியான தோற்றமுடையவர்கள் பெரிய அளவுள்ள டிசைன்களும், படுக்கைக் கோடுகளும் நிறைந்த ஆடைகளை அணிந்தால் நன்கு தோற்றமளிப்பார்கள்.

எனவே மேற்கண்ட முறைகளை பயன்கொண்டு, ஆடைக் கலையை நாம் வாடிக்கைப் படுத்தினால் பிறர் வியக்கும் வண்ணம் இந்த அழகுக் கலையில் வெற்றியடையலாம்!

www.thamizham.net - Free E Books No TM 14705

## தூங்கைக்கு ...

" நீ உன் நெறியை வகுத்துக்கொள். பழைய நெறியா புதிய வழியா இரண்டில் ஒன்றை உறுதிப்படுத்திக்கொள். நீ பழைய நெறியைப் போற்றுகிருய் என்று எனக்குத் தெரியும். அதில் பிடிவாதமாய் நின்றுவிடு, கொள்கைகளைப் பொறுத்தவரையில் பிறருக்குத் தீங்கு இல்லாத போது—நம் உறுதி நமக்குப் பெருநன்மை விளைவிப்பது திண்ணம். காந்தியடிகள் போன்ற பெருமக்கள், கொள்கைகளில் பிடிவாதமாய் இருந்த காரணத் திளுல்தான் உலகிற்கும் நன்மை செய்தார்கள், தாங்களும் உயர்ந்தார்கள். ஆகையால் கொள்கைகளில் நெறிகளில் உறுதி நல்லது "

—டாக்டர். மு.வ

தொகுப்பு : ஆர்.கே

## சாதனை கண்ட நீக்ரோ பெண்மணி!

அரீத்தா ஃபிராங்க்ளின் என்ற இந்த நீக்ரோ பாடகி அமெரிக்காவில் ஒரு பெரும் சாதனையை ஏற்படுத்தியுள்ளார். இவர் அடுத்தடுத்து மூன்று இசைத் தட்டுக்கள் வெளியிட்டார். ஒவ்வொன்றும் பத்து லட்சம் விற்பனையாகி உள்ளன. இதற்குமுன் அமெரிக்காவில் இத்தகைய சாதனையைக் கண்ட பாடகியாரும் இல்லை. "இந்த நீக்ரோ பாடகி இசையுலகில் அழியாப்புகழ் அடைவார்" என்ற ஜாஸ் இசை விமர்சகர்களின்பாராட்டுக்கள் மெய்யாகும் என்றே தோன்றுகின்றது. இந்த இளம் பாடகிக்கு வயது 25 தான்.



www.thamizham.net - Free E Books No TM 14705

# நிலாவிலுள்ள ‘டைக்கோ’ மடு பற்றி சர்வேயர்—7 கூறும் சுவையான கதை!

வாஷிங்டன். மார்ச் 1—பத்து லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பெரிய வால்நட்சத்திரம் நிலாவின்மேல் மோதியது. இதன் விளைவாக 23 கிலோமீட்டர் ஆழமும் 90 கிலோ மீட்டர் அகலமும் உள்ள ஒரு பள்ளம் நிலாவில் ஏற்பட்டது.

மாபெரும் இந்த மோதல் காரணமாக, நிலாவில் கால் பகுதி தூரம்வரை எல்லாத் திசைகளிலும் நிலவு மண் முதலியன வாரி இறைக்கப்பட்டன. நிலாவை இந்த அதிர்ச்சி அசைத்து, அது பூமியைச் சுற்றி வலம் வரும் பாதையிலிருந்து தற்காலிகமாக வழி பிறழுமாறுகூடச் செய்திருக்கலாம்.

நிலாவிலுள்ள மிகப் பெரிய அமைப்புக்களில் மேற்சொன்ன பள்ளம் ஒன்று. நிலாவின் துருவப் பகுதியிலுள்ள இந்தப் பள்ளம் வெறும் கண்ணுக்குக்கூடத் தெரியும். டைக்கோ என்பது அதன் பெயர்.

அமெரிக்கா அனுப்பிய சர்வேயர்—7 என்னும் பொறி, கரடு முரடான அமைப்புள்ள இந்தப் பள்ளத்தில் இறங்கி, அதை நேரில் ஆராய்ந்தது. வரலாற்றிலேயே இவ்வாறு நடைபெற்றது, இதுவே முதல் தடவை. ஜனவரி 9-ந் தேதி டைக்கோவின் விளிம்புக்குச் சற்றே வடக்கில் போய் இறங்கியது, அந்த முக்காலி. அடுத்த இரண்டு வாரங்களில் அது 21,000 படங்கள் எடுத்தது; ஏழு பள்ளங்கள் வெட்டியது; மூன்று தனித் தனி இடங்கள் குறித்து இரசாயன ஆராய்ச்சி நடத்தியது.

## சர்வேயர்—7 பணிகள்

அது ஆற்றிய பணிகள் குறித்துப் புதன்கிழமை விஞ்ஞானிகள் தெரிவித்தனர். அமெரிக்கா முன்பு அனுப்பிய சர்வேயர் பொறிகள் ஆராய்ந்த தாழ்வான பகுதிகளிலுள்ளதைக் காட்டிலும் டைக்கோவிலுள்ள பாறை செறிவுக் குறைவானது; இரும்பும் கன உலோகங்களும் அங்கு குறைவு என்பது சர்வேயர்—7 கண்டுபிடித்த மிக முக்கியமான உண்மையாகும் என்று விஞ்ஞானிகள் குழு கூறியது.

டைக்கோவிலுள்ள இயற்கைப் பொருட்களின் இரசாயன அமைப்பு, பூமியில் கிடைக்கும் எவ்வகைப் பாறையின் இரசாயன அமைப்பையும் ஒத்திருக்கவில்லை. எனினும் பூமியில் கிடைக்கும் ‘அனர்த்தாஸிட்டிக் காப்ரோ’ என்னும் ஒருவகை அடிப்படைப் பாறையை ஓரளவு ஒத்திருக்கிறது என்று விஞ்ஞானிகள் கூறினர்.

“ நிலவு ஒரு காலத்தில் உருகிய நிலையில் இருந்தது; இன்னமும் சூடாகவே இருக்கிறது; இரசாயன மாறுதல் அடைந்து வருகிறது என்பதற்கு முதன் முறையாக சர்வேயர்—7 சோதனைச் சான்று காட்டியுள்ளது ”—இவ்வாறு

www.thamizham.net - Free E Books No TM 14705

டாக்டர் -டொனல்டு இ. கால்ட் தெரிவித்தார். இவர் அமெரிக்க விண்வெளி நிலைய (நாஸா) ஏமஸ் ஆய்வுக்கூட விஞ்ஞானி.

நிலாவின் இரசாயன மாற்றம், கடல்களாகவும் கண்டங்களாகவும் மாறிய பூமியின் இரசாயன மாற்றத்தைப் போலவே, இன்னமும் நிகழ்ந்து வருகிறது என அவர் விளக்கினர். இதன் காரணமாக, "பூமியும் மற்ற இயற்கைக் கோள்களும் தோன்றியதெப்படி என்று மேலும் அறிவதற்கு நிலா ஒரு பெரும் வாய்ப்பு வழங்குகிறது" என்ருர் அவர்.

சர்வேயர் பொறியிலுள்ள இரசாயன ஆராய்ச்சிக் கருவியின் பணிக்குப் பொறுப்பு வகிப்பர், டாக்டர் அந்தோணி தர்க்கவிச். இவர் சிக்காகோ பல்கலைக் கழக இராசயன அறிஞர். நிலவின் தாழ்வான நிலப் பகுதிகளில் இரும்பு இல்லாததாலேயே பூமியிலிருந்து பார்க்கையில் நிலாவிலுள்ள மலைகள் பிரகாச மாகவும், தாழ்வான பகுதிகள் இருளாகவும் தோன்றுகின்றன என்று கூறினர்.

சர்வேயர் வரிசை சோதனைகள் 21 மாதங்களுக்கு முன்பு தொடங்கின. ஏழு முயற்சிகளில் ஐந்து வெற்றி கண்டன. சர்வேயர்—1. 3, 5, 6, 7 ஆகியவை அவை. 1966 ஜூன் மாதத்தில் முதன் முறையாக சர்வேயர்—1 நிலாவின் மீது மெத்தென இறங்கி வரலாற்றுப் புகழ்பெற்றது. இது முற்றிலும் பூமியிலிருந்து இயக்கப்பட்ட ஒரு பொறி. இதற்கு முன்பு இவ்வாறு இயக்கிய பொறி எதுவும் நிலாவில் இறங்கியதில்லை.

நன்றி : யு. எஸ். ஐ. எஸ்.

## இரத்தம் உறிஞ்சும் வீஸல்

வீஸல் வடகுளிர்ப் பிரதேசங்களில் வாழும் மிகக் கொடூரமான பாலூட்டி ஆகும். இவ்விலங்குக்கு மிகவும் பிடித்தமான பானம் மற்றப் பிராணிகளின் இரத்தமாகும். இது மற்றப் பிராணிகளின் கழுத்திலுள்ள இரத்தக் குழாயைக் கடித்து அறுத்துவிடும். அறுத்த இரத்தக் குழாயிலிருந்து இரத்தம் பீறிட்டுக்கொண்டு வெளியே வரும். அப்போது வீஸல் மிக்க ஆவலுடன் அவ்விரத் தத்தை உறிஞ்சிக் குடிக்கும். இதுவே இதற்குப் பிடித்த செயல். தன் பசியைத் தீர்க்க மட்டும் இது மற்ற விலங்குகளைக் கொல் வதில்லை. தன் மகிழ்ச்சிக்காக விலங்குகளைக் கொன்று குவித்த படியே இருக்கும். இது உருவத்தில் சிறியது' ஆனல் மிகுந்த பலமுள்ளது. தன்னைவிட முப்பது மடங்கு பெரிதான பிராணியாக இருந்தாலும் சிறிதும் அஞ்சாமல் அதைத்தாக்கிக் கடித்துக் கொன்றுவிடும். ஆதலால், எந்தப் பிராணியாக இருந்தாலும் இதனைக் கண்டால் நடுங்கும்.

"இளவல்"

www.thamizham.net - Free E Books -No TM 14705

# மாணவர்க்கு கூறுகிறேன்!

— : : —

A. V. M. ராஜன்

இந்த மார்ச் திங்கள் 10-ம் நாள் காஞ்சி பச்சையப்பன் கல்லூரிக்கு, முத்தமிழ் கலைவிழா நிகழ்ச்சியில் மகிழம்பூ நாடகத்தை நடத்தச் சென்றிருந்தேன். அந்த நாடகத்தின் இடைவெளியில் என்னைப் பேசுமாறு மாணவத் தோழர்கள் வேண்டினர். அவ்வமயம் மாணவர்களால், மாணவர்களுக்காக எழுச்சி மிக்க முறையில் நடத்தப் பட்டு வரும் "பூச்செண்டு" பத்திரிகை பற்றிக் குறிப்பிட்டேன். "தமிழகத்தில் மாணவர் சார்புடன் நடத்தப்படும் இந்த திங்களிதழுக்கு ஆதரவு தேடித் தருவது ஒவ்வொரு மாணவனும் தனக்கே ஆதரவு தருவது போலவாகும். ஏனெனில் மாணவர் கருத்துக்கள் பிரதிபலிக்க துணைசெய்யும் தமிழகத்தின் ஒரே திங்களிதழ் இது! அது மட்டுமல்ல நானும் இப்பத்திரிகைக்கான என்னாலியன்ற உதவிகளைச் செய்யத் தயாராக நிற்கின்றேன்" என்றும் குறிப்பிட்டு விட்டு "இந்த மாணவர் பத்திரிகைக்காக மட்டுமல்ல மாணவர் சமுதாயத்திற்காகவும் எந்தவித உதவிகளையும் என்றும் செய்ய நான் இறுதிவரை காத்திருக்கிறேன் கலைகள் வறண்டு போகாமல் இருக்க மாணவர் இனம் எடுக்கும் எந்த முயற்சியாயினும் அது என்னால் எப்போதும் வரவேற்பளிக்கப்படும் என்றெல்லாம் அந்த மேடையில் கூறினேன். மாணவர்கள் நான் எதிர்பார்த்ததற்கு மேல் எனக்கு வரவேற்பளித்து, கருத்துக்களுக்கு காது கொடுத்து மகிழ்வித்தனர்.

இறுதியாக நாடகம் முடிந்து விடைபெற்றுச் செல்லுகையில் சில மாணவர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு "எங்களுக்கு நீங்கள் ஏதாவது கருத்துரைகள் சொல்லி விட்டுத்தான் போக வேண்டும்" என்று அன்புக் கட்டளையிட்டனர். எனவே செல்லும்முன், மாணவர் சமுதாய நிலை குறித்து சில அறிவுரைகள் கூறினேன். அவற்றை ஓரளவு விரிவுபடுத்தி மாணவர் சமுதாயம் முழுமைக்கும் பொதுவாக இங்கே வழங்குகின்றேன்.

இன்றைக்கு பள்ளிகளிலே, கல்லூரிகளிலே படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் தான், நாளைய உலகத்தில் நாட்டின் டாக்டர்களாகவோ, இன்சினியர்களாகவோ ஆகப்போகின்றவர்கள். எனவே நாட்டின் நாளைய மிகப் பெரும் பொறுப்புக்களை உணர வேண்டிய கல்விகற்கும் இன்றைய இனம் வாழ்க்கையின் நல்ல நீதிகளை அறிவூட்டும் கருத்துக்களை இன்றே உணரத் தலைப்பட வேண்டும். தமிழ் இலக்கிய அறிவுக்கடலில் நுழைந்தால் வாழ்க்கையில் வாழ்ந்து கடைபிடிக்க வேண்டிய நீதிகள் பலவற்றை உணரலாம். சிறப்பாக வள்ளுவர் வகுத்த குறட்பாக்கள் 1330 ம் நீதியுரைகள் போதிக்கும், வாழ உணர்த்தும் அறிவுரைகள் புகட்டும் இலக்கியத் திரட்டுக்கள். ஒரு "தமிழன்" என்பவன் எப்படி வாழவேண்டும் என்பதை அறிவுறுத்தும் அறிவுக் களஞ்சியங்கள்.

நீங்கள் இந்த 1330 குறட் பாக்களையும் கற்று ஒவ்வொரு குறட்பா வழியும் வாழ்ந்து கடைபிடியுங்கள் என்று நான் கூறவில்லை. அத்தனை குறட்பாக்களையும் கற்பதும் அவை அத்தனை வழிப்படியும் நடப்பதும் இந்தக் காலத்தில் எளிதல்ல எனவே எளிதாக உங்களுக் கொன்று கூறுகின்றேன். உங்களுக்கு திருக்குறளில் பிடித்த ஒரே

www.thamizham.net - Free E Books No TM 14705

ஒரு குறளை எடுத்துக் கொள்ளுங்கள். உதாரணமாக உங்கள் பிறந்த நாளன்று ஒரு குறளை எடுத்துக் கொண்டு அடுத்த முறை மீண்டும் உங்கள் பிறந்தநாள் வரும் வரைக்கும், ஒரு ஆண்டு காலத்திற்கு அந்த குறள் வழிப்படி நடப்பேன் என்ற ஒரு பெரும் உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். அன்றிலிருந்து அதன்படி நடக்க விடாப்பிடியான முயற்சி எடுங்கள். இது ஒரு எளிதான முயற்சி! நடக்கக் கூடிய முயற்சி! எடுத்துக்காட்டாக,

"இனிய உளவாக இன்னாத [கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் [தற்று"

என்ற குறள் இருக்கின்றது. இந்த குறளை எடுத்துக் கொண்டு நாம் மேற்கூறியபடி உறுதியாக வாழ நினைக்கின்றோம். ஆனால் சில சமயங்களில் நமது எல்லை மீறி இன்னாதவை கூற உள்ளம் எழும் போது நாம் உறுதியாக இன்னாதவை கூறக்கூடாது அது நிமிர்ந்து நிற்கும் தமிழனுடைய போக்கல்லவே என்று நம்மை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். அப்போது தான், நம் மனம் நல்ல பக்குவமடையும்.

ஆண்டு இறுதியிலே குறள் நெறியில், நாம் வாழ முயற்சித்தால் விளைந்த லாபமென்ன, நஷ்டமென்ன என்று எண்ணிப் பார்க்கும்போது நிச்சயமாக லாபம் தான் அதிகமாக இருக்கும் என்பதில் ஐயமே இல்லை. இத்தகைய ஒரு எளிதான நீதி முறையை சாகும் வரை, ஒரு ஆண்டுக்கு ஒரு குறளாவது கடைபிடிப்பேன் என்ற உறுதியை தளரவிடாது வாழ முயற்சிப்பேன் என்று வாழ முயன்றால் அந்த வாழ்க்கை வள்ளுவர் வாழ்ந்த வாழ்க்கையாக, வாசுகி வாழ்ந்த வாழ்க்கையாக நிச்சயம் இருக்கும். தமிழன் என்று தலை நிமிர்ந்துபார்க்கக்கூடிய வாழ்க்கையாக கட்டாயம் அமையும்.

சமீபத்தில் நிகழ்ந்த உலகத் தமிழர் மாநாட்டு சமயத்தில் தான் எனக்கு குறளை பொறுக்கியெடுத்து அதன்படி ஒரு ஆண்டுக் காலம் வாழ்த்து பார்க்க ஏன் ஒரு முயற்சி எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற ஒரு எண்ணம் எழுந்தது. மாணவர்களாகிய உங்களுக்கே ஆண்டுக்கு ஒரு குறள் வீதம் கற்று அதன்படி நடக்க முயற்சிக்க அறிவுறுத்துகையில், உங்களை விடச் சற்று வயது வந்த நான் ஆறு குறள் வீதம் தேர்ந்தெடுத்து அதன்படி வாழ முயன்று வருகிறேன். எனது முயற்சி நல்ல பலனளிக்கும் என்று எதிர்பார்க்கின்றேன்.

"குறள் வழி வாழ்க்கை" இன்றைய மாணவர் சமுதாய வாழ்க்கையாக அமையுமானால் நாளைய நாட்டிலே நல்லவர்கள் தொகை பெருகும். தேவர்கள் நிறைந்த மோட்ச வீடுபோல தமிழகம் விளங்கும். ஏனெனில் வள்ளுவர் குறள்கள் அத்தகைய நீதிவலிமை ஊட்டக்கூடிய அறிவுச்சின்னங்கள். உதாரணமாக நமது சாதாரண சமூகத்தில் "ஆண்மை" என்பது எது என்று கூறுகிறோம்? ஒரு மாணவன் தன்னை முகத்தில் குத்தியவனை, உடனே ஓங்கி ஒன்று குத்துவது தான் ஆண்மை என்று நினைக்கிறோம். ஆனால் வள்ளுவரோ பேராண்மை என்பது எது என்று குறிப்பிடுகிறார் தெரியுமா? பிறருடைய மனைவியை விரும்பி நோக்காத தன்மையைத்தான் மிகப்பெரிய ஆண்மை என்று வலியுறுத்துகிறார்.

"பிறன்மனை நோக்காத
பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு"

இத்தகைய ஆழ்ந்த நீதிக்கருத்துக்களை நினைத்துப் பார்க்க அதை

www.thamizham.net - Free E Books No TM 14705

கூறிய வள்ளுவனைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க நமக்கே வியப்பாக இருக்கின்றது. இத்தகைய நல்ல க்ருத்துக்களை விரும்பி ஏற்க மாணவர் சமுதாயம் துணிந்து முன்வர வேண்டும். நமது வாழ்க்கை மிக மிகச் சிறியது. என்று இறக்கப் போகின்ருேம் என்பது நமக்கே தெரியாது. சாதாரணமாக மனிதன் 52 ஆண்டு வரை உலகில் வாழ்கின்ருன். அதிலும் நீங்கள் சிறுவர்களாக, நீதிமுறைகளை நன்கு உணர்ந்து அறிய முடியாத வயதையெல்லாம் கூட நீக்கிவிடுங்கள். 20 ஆண்டுவரை கூடப் பரவாயில்லை. குறைந்தது 21வது வயதிலிருந்தாவது நாம் இந்த நாளென்று குறள் கற்கும் பழக்கத்தை கைக் கொண்டால் கூட நமது வாழ்நாளில் 30 குறட்களை கற்று அதன் படி ஒரு நல்ல வாழ்க்கை வாழ்ந்தவர்கள் ஆவோம். எவன் ஒருவன் இந்த முறையைத் தனது வாழ்நாளில் முழுமையாகக் கடைபிடிப்பானே அவன் தான் தமிழன்! வாழ்க்கையை நன்கு உணர்ந்த மேதை! திருக்குறளில்

"தன்னைத்தான் காக்கின் சினங்
காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்"

என்ற ஒரு அருமையான குறள் வருகிறது. குறள் நெறி வாழும் மேதை இதைப் படிப்பானுயின் கோபத்தால் விளையும் கேடுகளுக்கு அஞ்சி கோபத்தை அடக்குவான். 'கோபம் குல நாசம்' என்ற பழமொழியை உணருவான். கோபப்பட்டு ஐயோ எவ்வளவு பெரிய தவறெல்லாம் செய்துவிட்டேன், என்று வருந்தமாட்டான். கோபத்தால் இரத்தக் கொதிப்பு வரும் என்பதால் ஏற்கனவே குறுகிய வாழ்வை இன்னும் சிறிதாக்கிக்கொள்ள முற்பட மாட்டான் அவனல்லவா வாழ்க்கையை நன்கு உணர்ந்த மேதை!

எனவே மாணவத்தோழர்களே, நீங்கள் எதிர்காலத்தில் நல்ல மனிதர்களாக மாற நினைத்தால் குறள் வழியை கடைபிடிக்க மறவாதீர்கள். அதன்படி நடவுங்கள். அதன் நீதிகளையும் நெறி முறைகளையும் நன்கு உணருங்கள்

"எந்நன்றி கொன்ருர்க்கும் உய்
வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற குறள் ஒன்று இருக்கின்றதே அதை நான் என்றும் மறக்கவே முடியாது. ஏனெனில் நான் இத்தகைய ஒரு நல்ல நிலைக்கு வந்திருக்கிறேன் என்ருல் அதற்குக் காரணம் மாணவர்களே! என்னை இந்த அளவுக்கு ஆளாக்கிய அவர்களை என்றும் நான் மறவேன்.

இறுதியாக நீங்கள் கடைப்பிடிக்கப்போகும் குறளை விடாப்பிடியாக நடைமுறைப் படுத்துங்கள் என்று கூற ஆசிக்கிறேன். உங்களுக்கு உறுதியான உள்ளம் உண்டாயின் ஆறு குறள்களை ஒரு ஆண்டில் கடைப்பிடிக்க முயலுங்கள். நிச்சயம் முடியும் என்ற தீவிர உறுதியுடைய உள்ளங்கள் ஆறு குறள்களை ஒரு ஆண்டில் வாழ்க்கைப் படுத்திக் காட்டலாம். நீங்கள் அடிக்கடி பார்க்கும் இடங்களில் பாடபுத்தகங்களின் மேலோ, சாமி கும்பிடும் இடத்திலேயோ எழுதிக் கொண்டு கண்ணில் அடிக்கடி படுமாறு செய்து கொள்ளுங்கள், நீங்கள் கடைபிடிக்கத் தொடங்கிய தேதியையும் குறிப்பிட மறக்க வேண்டாம். எனவே நான் கூறியுள்ள இந்த ஆறு குறள் கற்கும் முயற்சி தமிழ்நாட்டு மாணவர் சமுதாயம் முழுவதும் ஆருகப் பெருகட்டும் என வேண்டி முடிக்கிறேன்!

www.thamizham.net - Free E Books No TM 14705

# உலகில் உயிர் பிறந்தது எப்போது? இதோ புதிய தகவல்கள்!

விஞ்ஞானத்துக்குப் புரியாத புதிர்கள் உலகில் ஏராளம். இவை யனைத்துக்கும் தலை, நிலவுலகில் உயிர் தோன்றியது எப்போது என்ற புதிர். இன்றைய விஞ்ஞானியைப் பொறுத்தவரை, உயிர் எப்போது தோன்றியதென்பது பற்றிய ஆராய்ச்சிக்கு வித்து, உயிரினங்கள் அனைத்துக்கும் இன்றியமையாத எளிய இரசாயனப் பொருட்கள்தாம்.

இரசாயன முறையில் உயிர் தோன்றி வளர்ந்த விதம் பற்றி அவர்கள் ஒரு கருத்து தெரிவித்து வருகின்றனர். ஆதி காலக் கடல் களில் இரசாயனப் பொருட்கள் ஒன்றையொன்று பாதித்ததன் விளைவாக, கடல்களில் முதல் உயிர் பிறந்தது என்பது அந்தக் கருத்து. இது மேலும் மேலும் வளர்ந்து ஓரறிவு. ஈரறிவு உயிர்களாகி இறுதியில் ஆறறிவு மனிதனுயிற்று என்பது அவர்கள் கருத்து.

இந்தக் கருத்துக்கு ஆதாரமாக முக்கியமான புதிய விஞ்ஞானச் சான்று கிடைத்துள்ளது என்று அமெரிக்கப் பழங்காலத் தாவர இயல் அறிஞர் டாக்டர் ஜே. வில்லியம் ஸ்காப்ஃப் அறிவிக்கிருர். மாஸச் சூஸட்ஸ் மாநிலத்தில் காம்பிரிட்ஜ் நகரிலுள்ள ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் இவர் பணியாற்றி வருகிருர்.

300 கோடி ஆண்டுகளுக்கு மேல் முந்தியதெனக் கருதப்படும் பாறை அமைப்பு ஒன்றில் 22 அமீனே அமிலங்கள் இருப்பதற்குச் சான்று இருப்பதாக அவர் கண்டுபிடித்தார். உயிரினங்கள் அனைத்துக் கும் இன்றியமையாதது, புரதப் பொருள் (புரோட்டீன்); இதை உருவாக்கும் அடிப்படைப் பொருட்கள்தாம் அமீனே அமிலங்கள்.

இதுவரையில் இவ்வளவு பழங்காலத்தைச் சேர்ந்த அமீனே அமிலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதில்லை என்றும், 300 கோடி ஆண்டு களுக்கு முன்பும்கூட, உயிரின் அடிப்படை இரசாயனப் பொருட்கள் இன்றுள்ளவைபோலவே இருந்துள்ளன என்றும் புலனுகியுள்ளதாகவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். பூமியின் வயது ஏறத்தாழ 500 கோடி ஆண்டுகள் என்று கணக்கிட்டுள்ளனர். மனிதன் தோன்றியது ஏறத்தாழ 20 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு.

தென் ஆஃப்ரிக்காவில் ஒரு சிறிய நகரில் கண்டுபிடிக்கப்பட்ட பாறைப் படிவம் ஒன்றில் டாக்டர் ஸ்க்காப்ஃப் ஆராய்ச்சி செய்து புதிய துப்புக் கண்டுபிடித்தார். கலிஃபோர்னியா மாநிலத்தில் மவுண்ட்டன் வியூ என்னுமிடத்திலுள்ள அமெரிக்க விண்வெளி நிலைய (நாஸா) ஏம்ஸ் ஆய்வுக் கூடத்தில் அவர் ஆராய்ச்சி நடத்தினர்.

நன்றி: யு. எஸ். ஐ. எஸ்.

www.thamizham.net - Free E Books No TM 14705

# இந்தமிழ்த் தேம்பாவணி

வித்துவான் ச. சவரிமுத்து,. பி. ஓ. எல், பி. இடி.

— o —

## " நாடா வளந்தரும் நாடு "

நாட்டின் இலக்கணம் வகுக்கப் புகுந்த தெய்வப் புலவர் திருவள்ளுவர் நாடா வளந்தருவது நாடு என்ருர்.

வளன் பிறந்த சூதேய நாடு வளஞ்சிறந்த நல்ல நாடு. நீர் வளமும், நிலவளமும் மிக்க அந் நாட்டில் செல்வ வளம் செழிக்க சீரும் சிறப்புமுற்று மக்கள் வாழ்ந் தனர். வானம் பொய்யாது பெய்தது; தானமும் தவமும் சிறந்தன.

மலையின் உச்சியில் திரண்டு நின்றன மேகம். யானைக் கூட்டங் கள் போல் விளங்கிய அக்கரு மேகங்கள் போர் முரசம் போல இடித்து மழை பெய்தன. நீர்த் தாரைகள் சொரிய வெள்ளம் மலைச்சரிவுகளில் அருவுகள் பல வாகத் துள்ளி விழுந்தன. இந்தக் காட்சி அழகிய கற்பனை ஒன்றை முனிவரின் மனத் திரையில் உரு வாக்கியது. சூதேய நாடு அருள் தோய்ந்த நாடல்லவா? வளன் பிறந்ததினுலும் வளத்திற் கெல் லாம் வள்ளலான இயேசு பெருமான் பிறந்ததினுலும் உல கத்து நாடுகளில் எல்லாம் உயர்ந் தது சூதேய நாடு. அந்த நாட்டின் உயர்ந்த மலைமீது வானவர்க்கு ஒப்பற்ற ஆசை. அதை எவ்வா றேனும் பெயர்த்தெடுத்து வானுல கில் கொண்டு சேர்க்க வேண்டும் என்று துடித்தனர்; வடக் கயிறு கள் பல உலகத்தில் விட்டு பெயர்த் தெடுக்க முற்பட்டனர். ஆனுல் நிலமகள், அதைவிட்டு விடு வாளோ! விடாமல் வெள்ளி சங் கிலிகள் கொண்டு கட்டி இறுகப் பிணித்துக் கொண்டாள். நீர்த் தாரைகள் வானவர் விட்ட வடம் என்றும், அருவிகள் நிலமகள் பிணித்த வெள்ளிச் சங்கிலிகள் என்றும், கூறியிருக்கும் உவமை நயம் எண்ணி எண்ணி மகிழக் கூடியதாக உள்ளது;

> புள்ளி மால்வரை பொன்னுல
> கிடத்து எடுத்து உய்தல்
> உள்ளி, வான்விடும் வடமெனத்
> தாரைகள் ஒழுக,
> வெள்ளி நீள் தொடர் விசித்து
> அதைப் பிடித்தெனச் சூழத்
> துள்ளி வீழ் உயர் தூங்கிய
> அருவியின் தோற்றம்.
> (நாட்டுப் படலம், 5)

நீர்வளம் நிறைந்த அந்நாட்டில் நெல் வளமும் பெருகியது. மலையில் பிறந்த ஆறுகள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நானிலங் களையும் வளமாக்கியது. புதுநீர்ப் பாய்ச்சிய உழவர்கள் பூரித் தெழுந்த ஒன்று கோடியாக நெல் நிரம்புக என்று நெல் விதைத்தனர். விதைத்த நெல் செழித்து வளர்ந்து கல்வி நிரம்பிய அறிஞர்களைப் போல வளைந்து சாய்ந்தன. அவற்றை அறுத்த மக்கள் ஈதலோடு இசை கொண்டு வாழ்ந் தனர்.

ஈட்டிய பொருளை எல்லோருக் கும் கொடுத்து இனிதே வாழ்ந் தனர் மக்கள். அந்நாட்டில் வாட் டம் இல்லை. வளம் இருந்தது. நாடா வளம் சிறந்த அந்நாட்டு மக்கள் தீதற்ற இன்பவாழ்வில்

www.thamizham.net - Free E Books No TM 14705

திளைத்தனர். கடைப் போரையும், கடாய்ப் போரையும் கண்டு களித்துப் பொழுது போக்கினர்.

வளம் நிறைந்த அந்நாட்டில் வறுமை இல்லை. களவு செய்யும் கயவர் இல்லை. இருப்பினும் அந்நாட்டில் ஒரே ஒருவகைக் களவு தான் இருந்தது. எருமைகள் குளத்திலே இறங்கிக் கோரைப் புல் மேய்ந்தன. குளத்திலே அன்னப் பறவைகள் பல அழகோடு நீந்தித் திரிந்து வந்தன. வயிறு நிரம்பிய எருமைகள் பால் சுரந்து மடி பெருகப் பஞ்சிளங் கன்றுகளை நினைந்தன. அன்புப் பெருகவே பால் சொரிய ஆரம்பித்தன. சொரியும் பாலை அன்னப் பறவைகள், எருமைகள் அறியா வண்ணம் சென்று குடித்து மகிழ்ந்தன. இத்தகைய களவே அன்றி அந்நாட்டில் வேறுவகை களவு இல்லை, என்கிறார் முனிவர்.

உண்டு அகன்ற கன்று
  உள்ளி மேதிகள்
மண்ட அன்பு நீஇ வழிந்த
  பால் திரள்
கொண்ட அன்னமே
  குடித்தல் ஆவது
கண்டது அங்கு உள
  களவு இதாம் அரோ"
      (நாட்டுப் படலம். 24)

இப்பாடல்,

"மோட்டெருமை வாவிபுக
  முட்டவரால் கன்றென்று
வீட்டளவும் பால்
  சொரியும் வெண்ணெயே"

என்ற கம்பனது கவின் மிகுக் கவிதை வரிகளோடும்,

'சூழமேதி இறங்கும் துறையில்,
சொரியும் பாலை பருகிய வாளை'

எனத் தொடங்கும் குற்றாலக் குறவஞ்சி பாடலோடும் ஒப்பு நோக்கி இன்புறத் தக்கதாகும்.

வளமிக்க மருத நிலங்களைக் கொண்ட சூதேய நாட்டில் சோலைகள் பல சூழ்ந்து இருந்தன, தென்னை, வாழை, மா, பலா, ஆசினி முதலிய மரங்கள் நிறைந்து நின்றன. இனியக் கனிகள் கொத்துக் கொத்தாகப் பழுத்துத் தொங்கின. அச்சோலைகளில் காற்றசைய முற்றிய தேங்காய்கள் வீழ்ந்தன. அவை வாழைப் பழங்களை வீழ்த்தின; மாம்பழங்களை உதிர்த்தன; பலாப் பழங்களையும் கீறின. இதனால் உதிர்ந்து நசுங்கிய அப்பழங்களிலிருந்து சாறு வழிந்தது. வழிந்த தீஞ்சாறு பெருகியோடி எங்கும் பாய்ந்தது; பாய்ந்த இடமெல்லாம் இனிமை தோய்ந்தது. எத்தனை வளமான நாடு முனிவர் காட்டும் சூதேய நாடு!

"பாய்ந்த தேங்கதின்
  பழங்கள் வீழ்தலால்
வாய்ந்த வாழை மா
  வருக்கை ஆசினி
சாய்ந்த தீங்கனி
  சரிந்த தேம்புனல்
தோய்ந்த வாயெலாம்
  இனிமை தோய்ந்தன."
      (நாட்டுப் படலம். 33)

தமிழ்த் தேன் பாயும் இப்பாடலை, சிந்தாமணிச் செய்யுள் ஒன்றோடு ஒப்பிட்டு நோக்கி இன்புறுதல் வேண்டும். சீவகனது ஏமாங்கத நாடு தேன் பாயத் திக்கெட்டும் புகழ்ப்பெற்றது என்னும் திருத்தக்க தேவரின் பாடல் இது:

"காய்மாண்ட தெங்கின் பழம்
  வீழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடை
  கீறி, வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப்
  பழங்கள் சிந்தும்
ஏமாங் கதம் என்று இசையால்
  திசை போய துண்டே."

சிந்தாமணியைச் சுவைத்துச் சுவைத்து மகிழ்ந்த முனிவரின்

www.thamizham.net - Free E Books No TM 14705

பாடலில் சிந்தாமணியின் மணம் கமழ்வதை ஒப்பிட்டு நோக்கின் நுகரமுடியும்.

சோலைகள் எங்கும் கனிகள் பழுத்துக் குலுங்கப் பறவைக் கூட்டங்களும், குழுமி வேண்டிய பழங்களைக் கொத்தித் தின்று கூடிக் குலாவி இருந்தும், பறந்தும் ஒலித்துக் கொண்டிருந்தன.

ஒரு புறம் 'கருகரு' எனக் காடைகள் எழுப்பும் ஒலிகள், மற்றொரு புறம் 'ஞரு ஞரு' என மயிலினங்கள் எழுப்பும் ஒலிகள், பிறிதொரு புறம் 'குருகுரு' எனப் புருக்கள் எழுப்பும் ஒலிகள் இன்னும் பற்பல பறவைகள் எழுப்பும் பல்வேறு ஒலிகள். இவை எல்லாம் ஒன்று சேர்ந்து எழுப்பும் ஒலி வெள்ளம் முனிவர்க்கு அனைவரும் விரும்பும் ஒரு அரிய இடத்தை நினைவுறுத்தியது. அதுதான் பள்ளிக்கூடம். சிறுவர்கள் மனத்தில்படிவதற்கரிய பாடங்களை மனதில் படியும் வண்ணம், வாய் விட்டுப் படித்து, மனப்பாடம் செய்யும் காட்சியும், அப்போது பள்ளியில் எழும்பும் பல வகை ஒலியும் அவ் கற்பனையில் தோய்ந்தன. பல வகை ஒலிகள் மிக்க அச்சோலை சிறுவர்கள் பயிலும் பள்ளிக்கூடம் போல் காட்சி தந்தது என்றார். ஒவ்வொரு பறவையும் எழுப்பும் ஒலியையும் அவ்வாறே ஒலித்து, இப்பாடலை முனிவர் இயற்றியிருப்பது மனதிற்கு மகிழ்வூட்டுகிறது.

கருகரு என ஓர்பால்
  கடைப் புள்ளினம்
ஞருஞரு என ஓர்பால்
  நயந்த தோகைகள்
புருகுரு வுதலோடு
  புள்பல ஓதையால்
அருதுஉரு உணர்வு உகும்
  அரங்கம் சோலையே.
(நாட்டுப் படலம் - 45)

இத்தகைய வளம்நிறைந்த அந்நாட்டு மக்கள் செல்வத்திலே திளைத்திருந்தாலும் அறத்தை மறக்கவில்லை. செழிப்புமிக்க தம் நாட்டை நினைக்கும் போதெல்லாம் அவர்கள் நினைவிலே தோன்றியது சீரும் சிறப்பும் என்றும் நின்று நிலைக்கும் பேரின்பமும் கொண்ட வான்வீடே. மண்ணகத்தில் மகிழ்ந்து வாழ்ந்த அவர்கள் விண்ணகத்தையே மனக்கண் முன் நிறுத்தி மறம் நீக்கி அறம்செய்து வாழ்ந்தனர். அறிவுறும் இந்நாடே இவ்வளவு அழகிய தாயின் அழியாத அழகுடைய அந்நாடு - பேரின்ப வீடு - எத்தனை அழகுடையதாக இருக்கும் என மகிழ்ந்து போற்றினர். மகிழ்வு தரும் சோலையில் புகுந்து மலர் பறித்த மங்கையர், "படமெடுத்தாடும் பாம்பு தோலுரித்ததைப் போல, உயர்ந்த மலையிலிருந்து கற்களினூடே பாய்ந்தோடும் அருவிகள் நிறைந்த அழகு மிக்க நாடு இது. இந்நாடு இவ்வளவு அழகு மிக்க தாயின் இறைவனின் அருளாகிய அலையில்லாக் கடல் பாய அழகும், திருவும் மிகும் வானுலகு எவ்வளவு அழகியதாக இருக்கும். அதைநாம் நாடாது இருக்கக் கூடுமோ?" எனப் பாடினர்,

"படநாகம் தோலுரித்த பான்மை
  யின் கல்லூடு உரிஞ்சி
தடநாகம் தூங்கு அருவி
  தாவழகார் நாடிதுவே
தாவழகார் நாடிதுவேல்
  தரங்க மில்லாது அருள் பவ்வம்
வாவழகார் திருநிலைத்த
  வானுலகம் நாடே மோ?"
(நாட்டுப்படலம் - 60)

மலையிலிருந்து கல்லிடையே பாய்ந்து விழும் அருவி பாம்பு உரித்த தோல்போல் விளங்கினது எனக் கூறும் உவமை நயம் இன்புறத் தக்கது. அதோடு இசைப் பதற்கேற்ப இயற்றப்பட்டுள்ள இப்பாடல் சிலம்பின் கானல் வரிப் பாடல்களை நினைவூட்டுகின்றன.

www.thamizham.net - Free E Books No TM 14705

வானுலகை நோக்கி வாழும் அந் நாட்டின் சிறப்பினை எதுவும் வல்ல தமிழ் மொழியாலும் எடுத்துக் கூற இயலாது எனக் கூறுகிறார் முனிவர். நல்லறம் அல்லது தீவினைகள் இல்லை அந்நாட்டில்; துன்பம் இல்லை; மன மயக்கமில்லை; புகழொலியே யன்றி இகழொலிகள் இல்லை. இத்தகைய உயர்வும் சிறப்பும் உடைய நாடே வளன் பிறந்த சூதேய நாடு என்கிறார் முனிவர் பெருமான்.

ஆற்ற வருந்தில நல்லறம்
அல்லதும் அல்லவை இல்லையெனா,
மாற்ற அருந்துயர் இல்லதும்
உள்மயல் மல்கலும் இல்லையெனாச்
ஏற்ற அருந்துதி ஒல்லொலி
அல்லதும் எள்ளதும் இல்லையெனாச்
சாற்ற வருந்தினும் ஒல்லும்
அருந்தமிழும் சமம் அல்லதுவே.
(நாட்டுப் படலம் - 73)

இவ்வாறு வளன் பிறந்த சூதேய நாட்டின் சிறப்பினைத் தேன் சொட்டும் தெள்ளுத் தமிழ்க் கவிதைகளில் பாடுகின்றார் முனிவர். கோசல நாட்டை கம்பர் வருணித்தாலும் கன்னித் தமிழ் நாடே அவர் மனத்திரையில் நின்றது போல, ஏமாங்கத நாட்டைப் பாடினாலும் திருத்தக்க தேவரின் சிந்தனையில் தெள்ளுத் தமிழ் நாடே காட்சி தந்தது போல, முனிவர் வளன் பிறந்த சூதேய நாட்டை வருணித்தாலும் அவரின் கண் முன்னே நின்றது காவிரித் தமிழ் நாடேயன்றி வேறன்று.

[வளரும்]

★

# அதிசய மலைப்பாம்புகள்

உலகத்தில் இருக்கும் மலைப்பாம்புகளுள் ஆசியாவில் உள்ள மலைப் பாம்புகளே பெரியவை. அவற்றின் சராசரி நீளம் இருபதடி. முப்பத்திரண்டு அடி நீளமுள்ள பாம்புகளும் இருக்கின்றன. அப் பாம்புகள் ஓராண்டிற்கு முப்பது தடவைக்கு மேல் இரை கொள்வதில்லை. பிடித்து வளர்க்கும் பாம்புகள் ஓராண்டளவும் ஒன்றுமே தின்னாமல் உயிர் வாழ்கின்றன என்று சொல்லப் படுகின்றது.

—ஆர்.கே.

www.thamizham.net - Free E Books No TM 14705

# குடியிருந்த கோவில்

—: :—

“ சுயா ”

தந்தையின் கொலைக்குப்பின் தாயுடன் இரயிலில் பயணம் புறப்படும் இரட்டைப் பிள்ளைகள் எதிர்பாராத விதமாகப் பிரிந்து மூத்தவன் தன் தந்தையைக் கொன்ற கொடியவனால் கொடிய வனாகவும், இளையவன் தாயிடம் நல்லவனாகவும் வளர்க்கப்படு கிறார்கள். எதிர்பாராத விதமாக இருவரும் சகோதரர்கள் என்பது வெளிப்படுகின்றது. மூத்தவனும் நல்லவனாகிறான். தன் தந்தை யைக் கொன்றவனை போலீசில் பிடித்துக் கொடுத்து தன் பால்ய சபதத்தை நிறைவேற்றுகிறான். இதற்கிடையில் இருவருக்கும் காதலிகள் இருப்பதால் சில ஆடல் பாடல்கள் இடம்பெறு கின்றன.

பாடல்கள் இன்னும் நன்றாக இருந்திருக்கலாம். காட்சி அமைப்புகளுக்கு நிறைய செலவு செய்யப்பட்டிருக்கிறது. கலர் கண்ணுக்கு குளிர்ச்சியாக இருக்கிறது. டைரக்ஷன் பரவாயில்லை.

அண்ணன் சண்டைப் போடுவதைக் கண்டு தம்பி ஆனந்தப் படும் இடம், அடிக்கடி முகத்தைச் சுளித்து “ உச் ” கொட்டும் இடங்கள் போன்ற காட்சிகள் தெவிட்டாதவை. அண்ணன் தம்பி உரையாடும் இடங்கள், தாயிடம் தன் திருமணம் பற்றி பேசும் காட்சி போன்றவை ரசமானவை. பொதுவாக மக்கள் திலகத்தின் நடிப்பில் மெருகு தெரிகிறது. அதிலும் “ பாபு ” பாத்திரம் குறிப்பிடத்தக்கது.

ஜெயலலிதா படத்தின் பெரும் பகுதி புடவை அணிந் திருப்பது பார்க்க மிக நன்றாக இருக்கிறது.

நாகேஷின் கிழவி நடிப்பு சிறப்பு. (அர்த்தமற்றதாக இருப் பினும்) அவரை கதையுடன் கொஞ்சம் ஒட்டியிருக்கலாம்.

பகுதி கொஞ்சமானாலும், மிகுதியாகச் செய்திருக்கிறார் சுந்தரராஜன்.

*மக்கள் திலகத்தின் புகழ் மணிமுடிக்கு,*

*குடியிருந்த கோவில் நிச்சயமாக ஒரு முக்கியமான*

*மணி.*

www.thamizham.net - Free E Books No TM 14705

# தங்கை வருகிறாள்!

'ரீத்தா'

'இந்தாங்க உங்களைத்தானே! காபி எடுத்துக்குங்கோ!' வழக்கமான, ஆனால் பழக்கமான அந்தக் குரல் என் கவனத்தைக்கவர்ந்தது. கையில் காபி டம்ளருடன் என் மனைவி சரோஜா நிற்பது தெரிந்தது. காலம்தான் அவள் முகத்தில் எப்படி விளையாடிவிட்டது! மூப்பின் நரைகள் இங்கொன்றும் அங்கொன்றும்மாக முளைவிட்டிருந்தன. வாழ்க்கையில் ஆழ்ந்து அனுபவித்த அனுபவ முத்திரைகள் சுருக்கங்களாக விழுந்திருந்தன. மஞ்சள் பூசிக்குளித்து பளிச்சென்று நெற்றிக்கு இட்டு அந்த வயதிலும் தனி அழகுடன் காட்சியளிக்கும். அவளைக் கண்டதும் தான் எனக்குச் சட்டென்று நினைவிற்கு வந்தது, ஹாலில் தொங்கும் நாள்காட்டி இன்று வெள்ளிக் கிழமை என்றுக் குத்திக் காட்டியது. எவ்வளவு முட்டாள்தனமாக எல்லாவற்றையும் மறந்துவிட்டோம். இன்று சாதாரண நாளா என்ன? என் கண்கள் என்னையும்மீறி ஹாலையும் அறைகளையும் நோட்டம் விட்டன. உடல் எல்லாம் பற்றிக்கொண்டு எரிவதுபோல் இருந்தது. சரோ, காபியை வைத்துவிட்டு நகர்ந்து கொண்டு இருந்தாள். அப்படியே இழுத்து நாலு அறைவிடலாம் போலிருந்தது.

"சரோ!" கோபத்தால் வீடே அதிர்ந்தது. "கொஞ்சமாவது அறிவு இருக்கிறதா உன் மரமண்டையில்? இன்று வெள்ளிக் கிழமை என்றுத் தெரியாதா? லதா வருவதுகூட மறந்து விட்டதா? வீடு கிடக்கிற லட்சணத்தைப் பார்த்தாயா?" மூச்சுவிடாமல் பேசியதால் மூச்சு இரைத்தது எனக்கு. ஹாலில் உட்கார்ந்திருந்த டாக்டர் பிரைட் இதையெல்லாம் கவனிக்காதவர்போல் என்னிடம் வந்தார். 'சார் இன்று என் தங்கை லதா வருகிறாள் ஸார். என்னுடைய உயிர்த் தங்கை லதா இன்று வருகிறாள்ஸார், என்னைப்பேசவிடவில்லை அவர் என் உடல்தனலாக கொதித்தது. ஆனால் அவருக்கு நான் கூறிய வார்த்தைகள் உறைக்கவில்லைபோலும் ஒரு இஞ்செக்சனைப்போட்டுவிட்டு ஹாலுக்கு சென்றுவிட்டார். ஆனால் என் துடிப்பு எனக்கு. என் லதா வரப் போகிறாள். அண்ணா, அண்ணா என்றுப் பாசத்தை அள்ளிஅள்ளித் தரும் அந்த அன்பு லதாதான் வரப் போகிறாள். இப்பொழுதே என் அருகில் வந்து என் கழுத்தைக் கட்டிக்கொண்டு 'ரா......வண்ணா!' என்றுக் கூப்பிடுவதுபோல் இருக்கிறது. ராகவன் என்ற என் பெயருடன் அண்ணாவை இணைத்து. அதைச் சுருக்கி 'ரா......வண்ணா!' என்று அவள் அழைக்கும் அழகே தனிதான். "ஏன்டி! மாடு மாதிரி வயசாகிறது. நாளைக்கு ஒருத்தனுக்கு கழுத்தை நீட்டப்போறவ நீ. இப்படிக் குழந்தையாட்டம் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு கொட்டமடிக்கிறியே!" என்றுத் திட்டும் அம்மாவைக் கூட 'போம்மா என் அண்ணாவுக்கு நான் எப்பவும் குழந்தைதான். இல்லையாண்ணா?" என்றுக் கூறி என் தலையில் குட்டி விளையாடும் அந்தக் குழந்தை லதாதான் வரப் போகிறாள்.

அப்பப்பா! அவள் நடை, உடை எதை எடுத்தாலும் அதில் ஒரு தனி பாணி இருக்கும். கவிஞர்களின் கற்பனைக் கன்னி போலக்



www.thamizham.net - Free E Books No TM 14705

காட்சி அளிக்கும் அவளை நினைக்கும் பொழுதே இப்படியொரு தங்கைக்கு அண்ணுவாக வாய்த்தோமே என்று உள்ளமும் உடலும் மகிழ்ச்சியால் பூரித்துப் பெருகும் இன்னைக்கெல்லாம் பாடச் சொல்லிக் கேட்டுக் கொண்டு இருக்கலாம் கல்யாணி ராகத்தில் ஒரு பதம் பாடி முடிப்பதற்குள்ளேயே! இவளுக்காகத்தான் கல்யாணி ராகமே உருவானதோ! என்று அம்மாவே மூக்கில் விரலைவைப்பாள். 'டேய் ராகவா! இந்த லச்சுமியைக் கிரக லச்சுமியாக அடைய எவன் கொடுத்து வைச்சிருக்கானே!' என்று பெருமையின் பூரிப்பால் அவள் கூறும் பொழுது, 'போம்மா, போய் திருஷ்டி சுற்றிப் போடு. என் தங்கைக்கு உன் கண்ணே படும் போலிருக்கிறது!' என்பேன். அந்த அன்பு லதா தான் இன்றுவரப் போகிருள்.

"லதா இன்னும் ஒரு வருடத்திற்குள் உன் படிப்பு முடிந்துவிடும். உனக்கு செலக்ஷன் எக்ஸாம் நடக்கும் பொழுதே இங்கு மாப்பிள்ளை செலக்ஷன் முடிந்துவிடும். நீ புத்தகச் சுமையை இறக்கி வைக்க வேண்டியதுதான். உன் தலையில் குடும்பச் சுமையை சுவையுடன் ஏற்றி வைக்க நான் இங்கு தயார் ஆகிவிடுவேன், என்ன குழிதானே. என்று கிண்டல் செய்யும் என்னைக் கலங்கிய விழிகளுடன் "ரா......வண்ணு என்னை ஏன் இப்படி அடிக்கடி அழவைக்கிறே. நீ கல்யாணம் செய்துகிட்டு அண்ணி வந்தவுடன் என்னை அடியோடு மறந்துவிட்டது போதாதா? நான் வேறு உன்னை விட்டு இந்த வீட்டை விட்டு நிரந்தரமாகப் பிரிய வேண்டுமா? முன்னலே சென்னைக்கு வாரத்திற்கு ஒருமுறையாவது வருவே. ஆனல் இப்போ பக்கத்திலே செங்கல்பட்டில் இருந்தும்கூட என் கல்லூரி பக்கமே தலைவைத்துப் படுக்க மாட்டேன் என்கிறே' என்று கண்ணீருடன் மறுக்கும் அவள் உருவமும், அதற்கு 'போடி அசடு நீ அடிக்கடி வரவேண்டும் என்றுதான் ஒரு குட்டிப் பியட்டையே' வாங்கிக்



www.thamizham.net - Free E Books No TM 14705

கொடுத்திருக்கிறேனே எத்தனை நாள்தான் உன்னைத் தனியாகப் பார்ப்பேன். உன் மருமகன் ரகுவுடன் விளையாட ஒரு குட்டி லதா வேண்டாமா?' என்று கூறி அவளைத் தேற்றும் என் வார்த்தைகளும் என் காதில் இன்னும் ஒலித்துக் கொண்டே இருக்கிறன. அந்த லதா இன்று வரப் போகிருள்.

அவள் வீட்டில் இருந்தால் இந்த வீடே களை கட்டியிருக்கும். அங்கும் இங்கும் நடைபயின்று எதையாவது செய்து வீட்டை அழகு படுத்துவதில் அவளுக்கு அலாதி இன்பம் போங்கள். என் குழந்தைகள் இரண்டும் இப்படி அழுக்குப் படிந்த உடைகளுடன் தெருவில் விளையாடிக் கொண்டிருக்க விடுவாளா என்ன? அவளுக்கு எப்பொழுதும் எல்லாரும் சுத்தமாக இருக்க வேண்டும். அவள் வைத்த ரோஜா செடி என் நினைவுகளைப் போலவே இன்று வாடிக் கிடக்கிறது. அவள் இருக்கும்பொழுது அதில் பூக்கும் பூக்களை இன்று கூடப் பார்த்துக் கொண்டு இருக்கலாம். ஒவ்வொன்றும் உள்ளங்கை அளவு இருக்கும். அது ஏதோ அவள் தோழி ஊட்டியில் இருந்து கொண்டுவந்து கொடுத்தாளாம், அதை வளர்க்க அவள் எடுத்துக் கொண்ட சிரமம். அப்பப்பா ஒரு பூவை கிள்ளனுமே, அவளும் பறிக்க மாட்டாள், வேறு யாரையும் கைவைக்க விடமாட்டாள். அவளுக்கு மலர்களை பறித்து தலையில் வைத்துக் கொள்வதை விட அதை செடியில் வைத்துப் பார்ப்பதில்தான் திருப்தி.

இவ்வளவு சமர்த்து இருந்தும் வாயடிக்கனுமே. ஊஹீம் வாய் திறந்து ஒரு வார்த்தை ஆடமாட்டாள். ஆனல் சரியான துடுக்கு அவளிடம் வாலாட்டினுல் சரியாக மூக்கறுத்து விடுவாள். அதை இன்று நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

ஒரு நாள் ஏதோ புத்தகம் வாங்கப் போகிறேன் என்றுக் கடைக்கு கிளம்பினுள். எங்க வீட்டில் அவளும் ஒரு ஆண்பிள்ளை தானே. துணையின்றி தனியாகவே சென்று வருவாள். அவள்மேல் அவ்வளவு நம்பிக்கை எங்களுக்கு, இல்லா விட்டால் சென்னையில் ஹாஸ்டலில் தங்கிப் படித்து ஒவ்வொரு வாரமும் தனியே காரை ஓட்டிக் கொண்டு வீடுவந்து சேருவாளா என்ன ? புத்தகக் கடைக்குச் சென்றவள் திடுதிப்பென்று என் முன்னேவந்து நின்ருள். நின்றவள் 'ரா...வண்ணு நீ உன்ஸ்ுவைதைக்கனும் என்ருயே, எடுத்திட்டுப் போறேன் நீயும் வாசலுக்கு வாயேன் என்ருள். புத்தகம் வாங்கப்போகிறேன் என்றவள் செருப்பு தைக்கிறவனைக் கூட்டிக் கொண்டு வந்திருக்கிருளே!' என்று வியப்புடன் பின் தொடர்ந்த எனக்கு பகீர் என்றது. அங்கு இருபது இருபத்தைந்து மதிக்கத்தக்க வாலிபன் ஒருவன் நின்று கொண்டு இருந்தான். 'இவன்தான் அண்ணு' என்ருள் சிறிதும் பதட்டப் படாமல். எனக்கு அவன் அவமானத்துடன் குறுகி அங்கிருந்து விரைந்து செல்வதையோ......அதைக்கண்டு வாய் விட்டு பெரிதாக சிரிக்கும் லதாவை கண்டிக்கவோ......ஒன்றும் புரியவில்லை. 'என்ன அண்ணு பிரமை பிடித்தவன் மாதிரி நிற்கிருய்.? இவனுக்கு சரியானப் பாடம் கற்பிக்கத்தான் இப்படிச் செய்தேன். இந்த 'இடியட்' என்னிடம் வந்து கொஞ்சம்கூட கூச்சம் இல்லாமல் 'மிஸ் லதா மணி என்ன இருக்கும். என்று கேட்டான். என் பெயரை என் கையில் இருக்கும் இந்தப் புத்தகத்தில் இருந்து தெரிந்துக் கொண்டான் என்று நினைக்கிறேன். அவனுக்கு புத்தி புகட்டத்தான் அவனிடம் "ஸாரி தெருவில் வந்து இப்படி எல்லாம் பேசாதீர்கள்" என்று விலாசத்தைக் கொடுத்து வரச் சொன்னேன். நான் நினைத்த மாதிரியே அந்த தடியனும் வந்

www.thamizham.net - Free E Books No:TM 14705

தான். அப்புறம் தான் உனக்குத் தெரியுமே அண்ணு" என்று முடித்தவள். 'நான் செய்தது தப்பாராவண்ணு, என்ருள். எனக்கு என்ன சொல்வது என்றேப் புரியவில்லை. 'புரியாத குழந்தையாக இருக்கிறியேம்மா' என்று தான் சொல்லிவைக்க முடிந்தது. அந்தக் குழந்தைதான் இன்று வருகிருள்.

அவள் பார்க்கத்தான் குழந்தையேத் தவிர காரை எடுத்தால் என்ருல் ஆண்கள் கூடப் பிச்சை வாங்க வேண்டும். என் வண்டி அம்பாசிடரை எடுத்தாலே ஐம்பது ஐம்பத்தைந்துக்கு குறைய மாட்டாள். அப்படிப்பட்டவளுக்கு பியட்டை ஓட்டுவது பாதம் அல்வா சாப்பிடுவது மாதிரி. பஞ்சா பரத்திக் கொண்டு வருவாள். அவள் கார் ஓட்டும் அழகே தனிதான். இடது கையில் ஸ்டியரிங்கைப் பிடித்து அனுவசியமாக டர்னிங்கில் திருப்புகிற காட்சி நமக்கே வியப்பைத் தரும். எப்பொழுதும் அவள் வாயில் ஏதாவது ஒரு மெட்டு இசைந்து கொண்டே இருக்கும்.

அன்றும் வெள்ளிக்கிழமை தான். எனக்கு நன்ருக ஞாபகம் இருக்கிறது, என் லதாக்குட்டி என்னைப் பார்க்க வந்துகொண்டு இருந்தாள். அவளுக்கு அன்று நிச்சார்த்தம் என்று நான் தான் வரச் சொல்லி இருந்தேன்.

அவள் எண்ணமெல்லாம் என்னை நோக்கித்தான் இருந்தது. காரின் ஹாரன் குழியில் கூட என் உருவப் படத்தைத்தான் பதித்திருந்தாள். கார் தாம்பரத்தை நெருங்கிக் கொண்டு இருந்தது, அவள் கண்கள் என் படத்தை பார்த்து, 'ஏண்ணு என்னை நிரந்தரமாகப் பிரிவதற்கு அவ்வளவு விருப்பமா. அதற்குள் மாப்பிள்ளை பார்த்திட்டியாமே! என்றவள் துயரத்தின் மிகுதியால் ஒரு நிமிடம், ஒரே ஒரு நிமிடம்தான் ஸ்டியரிங்கில் தலையை கவிழ்த்திருக்கிருள். அவ்வளவுதான். பின் அந்தத் தலை நிமிரவே இல்லை, எங்களுக்கு இவை எல்லாம் அவளுடன் அந்தக் காரிலேயே வந்துகொண்டிருந்த அவள் உயிர்த்தோழி டெய்ஸி கூறும்பொழுதுதான் தெரியும். எனக்குத் தகவல் கிடைக்கும் பொழுது உருக்குலைந்தக் காரும், உயிருக்குப் போராடும் நிலையில் அவள் தோழி டெய்ஸியும், என் உயிர்த் தங்கையின் உயிரற்ற உடலும்தான் கிடைத்தது. அந்தத் தங்கை லதா தான் இன்று வருகிருள்.

'ஏன் சார் அப்படி பார்க்கிறீங்க. ஏதேதோ பிதற்றுகிறேன் என்ரு? அதோ தெருவில் மல்லிகைப் பூ கொண்டுபோருன் சார். தயவு செய்து கூப்பிடுங்களேன். என் லதாவுக்கு மல்லிகைப் பூ என்ருல் உயிர் சார். ஆனுல் தலையில் தான் வைத்துக் கொள்ளமாட்டாள். அப்படியே முழுப்பந்தாக வாங்கி அறையில் வைத்து அதன் மணத்தில் லயிப்பதில் தான் அவளுக்கு அலாதி இன்பம் சார்.

என்னுல் தெருவிற்குப் போக முடியாது. என்னைத்தான் விலங்குப்போட்டு அறையில் பூட்டி இருக்கிருர்களே! அதனுல்தான் சரோ காபியை சன்னலில் வைத்துவிட்டுப் போய்விட்டாள் போலிருக்கிறது. ஆனுல் நீங்களாவது தயவு செய்து கூப்பிடுங்கள் ஸார். ஏன் என்ருல் இன்று என் தங்கை லதா வரப்போகிருள் சார்.........
பிலீஸ்...............

— o —

www.thamizham.net - Free E Books No TM 14705

# வள்ளுவர் வழி—2

(பேராசிரியர் சு. இராசேந்திரன்)

— o —

நீந்துவன, ஊர்வன, நடப்பன, பறப்பன ஆகிய பலவகைப் பிராணிகளுள் மனிதனே சிறந்த வாழ்க்கை வாழும் வாய்ப்புப் பெற்றிருக்கிறன் என்பது உண்மை. அதனுலேயே மக்கட் பிறவி மேலானது என்றேம். மக்கள் பெற்றிருக்கும் இத்தகைய சிறப்பிற்குக் காரணம் என்ன? அவர்களிடம் மனம் என்னும் ஒரு கருவி இருப்பதும் அதை அவர்கள் நன்கு பயன்படுத்தக்கூடிய ஆற்றல் பெற்றிருப்பதுமே அவர்கள் வாழ்க்கை சிறப்புற்றிருந்தலுக்குக் காரணமாகும். மற்ற பிராணிகளைப் போல் மனிதன் தன் ஐம்புலன்களின் மூலம் மாத்திரம் வாழ்வதில்லை. இவ்வைம் பொறிகள் அவனுக்கு அளிக்கும் அனுபவத்தோடு மனம் என்னும் ஒரு சிறந்த கருவியின் மூலமும் மனிதன் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறன். ஏன், இம்மனத்தின் மூலம் வாழும் வாழ்க்கையே முதலிடம் பெறுகிறது என்றும் கூறலாம். அதனுலேயே அறிஞர் பலரும் "மனம் போல வாழ்வு" எனக் கூறியிருக்கின்றனர்.

எளிய வாழ்க்கையிலும் இன்பம் காணுவோர் எத்தனையோ பேர் இருக்கின்றனர். அதற்குமாறுக செல்வத்தினிடையே துயரம் தோன்றுவதையும் நாம் பார்த்திருக்கிறேம். எல்லாம் அவரவர் தங்கள் மனதைப் பயன்படுத்தும் முறையைப் பொருத்தே வாழ்க்கை அமைகிறது. நாம் பெற்றிருக்கும் பொருள்கள் நம் வாழ்க்கையை ஒரு நிலையில் அமைத்துக் கொள்வதற்குப் பெரிதும் பயன் படுகின்றன என்பது உண்மை. என்றுலும் வாழ்க்கையில்விருப்பமோ, வெறுப்போ ஏற்படுவது மக்களின் மனதால் ஆவதேயாகும். இவ்வுலகையே சொர்க்கமாகவோ அல்லது நரகமாகவோ மாற்றவல்லது நமது மனம் என்றார் ஒரு ஆங்கிலப் பெருங் கவிஞர்.

மக்கள் வாழ்க்கையில் இத்தகைய உன்னதமான இடம் பெற்றிருக்கும் மனம் தூய்மையடைவதே வாழ்க்கையின் நோக்கம் என்பது திருவள்ளுவரின் கருத்து. அவர் தமது குறளை முப்பாலகப் பிரித்திருப்பதே மனதை மையமாக வைத்துத்தான். மனம் பண்பட வேண்டிய துறை குடும்பம். காதல் கொண்ட கணவனும் மனைவியும், ஊடியும் கூடியும் தங்கள் மனதைப் பண்படுத்திக் கொள்ளும் வாய்ப்பைப் பெறுகின்றனர். இதையே நாம் காமத்துப் பாலில் காண்கிறேம். அவ்வாறு குடும்ப வாழ்வில் பண்பட்ட மனம் பொது வாழ்வில் பயன்படும் வகையை நாம் பொருட் பாலில் காண முடிகிறது. இப்படி இரண்டு துறைகளிலும் பண்பட்டுப் பயனளித்துப் பக்குவமடைந்த மனம் தனி வாழ்க்கையில் அறநெறியைக் கடைபிடித்துத் தூய்மையடையும் வழியை நாம் அறத்துப்பாலில் காண்கிறேம். ஆனால் மனம் பண்படைதல், பயனளித்தல், தூய்மைபெறுதல் ஆகிய மூன்று நிலைகளும் ஒன்றன்பின் ஒன்ருய் நிகழ்வதில்லை. குடும்ப வாழ்க்கையிலும் சரி, பொது வாழ்விலும் சரி மனம் தூய்மையாகவே இருத்தல் வேண்டும். மனத்தூய்மையில்லாவிடில் நல்ல முறையில் தொடங்கும் காதல் வாழ்க்கையும் நாளடைவில் சீர்கெட்டு மனம் பண்படையும் வாய்ப்பை இழந்துவிடுகிறது. அஃதே போல் மனத்தூய்மையின்றெனின் பொது வாழ்வில் மனிதன் தன் கடமையைச் சரிவரச் செய்யத் தவறிவிடுவதுண்டு. அதன்பின் அவனிடம் தன்னலம், பொருமை, சூது முதலிய பல தீயகுணங்கள் வளர்ந்து மனம் பயனளிக்கும் வாய்ப்பை இழக்க நேரிடும்.

இவ்வாறு எல்லா நிலைகளிலும் இன்றியமையாததாக விளங்கும் மனத்தூய்

www.thamizham.net - Free E Books No TM 14705

மையை அறத்தின் அடிப்படையாகக் கருதும் திருவள்ளுவர்,

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்

தறன்

ஆகுல நீரபிற' என்றார்.

இக்குறளுக்கு விளக்கங்கூற வந்த வீரமாமுனிவர் "இல்லறம் துறவறம் என்ற இவ்விரண்டினுள்ளும் அடங்கி நிற்கும் எல்லா அறங்களும் மனத்தின் தூய்மையாற்பெறும் பெருமையே தருமம் எனவும் மனத்தினுள் மாசு கொண்டவன் செய்யும் தவமும் தானமும் மற்றும் யாவையும் அறத்தின் அரவமாவதன்றி அறத்தின் பயனுள அல்ல எனவும், அக்குறளின் பயன் இவை எனவும் விரித்துக் காட்டும்" என்று எழுதினார். இக் குறளை விளக்கி மேலும் இம்முனிவர் எழுதுகிறார், "ஒருவன் அருமறை ஓதினும் அரும்பொருட் கலைநூல் அளவறக் கற்கினும், பல நதி ஆடினும், பலதலம் சேரினும், வரைவில கொடுப்பினும், வழுவில நடப்பினும், கோயில் மண்டபம், குளம் முதல் பற்பல வாயிற்றருமம் என உவந்து இயற்றினும், திரள் பொருள் ஈட்டிய செல்வம் துறப்பினும், மனை நகர் நாடு மகார் சுற்றமும் துறந்து, அருவனத்திடை துணையற உறையினும், இன்புறு சுவை சுகம் எல்லாம் மறுத்தே ஐம்பொறி கொன்டு உடல் அழிய நோற்பினும், ஈரற வழியெலாம் நேரச் செல்லினும், மனத் தூடிய வினை, மாசுளதாயின், தனக்கொரு பயனும் தராதென உணர்க."

வெளிநாட்டில் பிறந்து, துறவறம் பூண்டு, தமிழ் நாட்டிற்கு வந்து, தமது முப்பத்தைந்தாம் வயதிற்குப்பின் தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கிய இம்முனிவரின் குறளறிவையும், தமிழ் நடையையும் கண்டு நாம் வியப்படையாமல் இருக்க முடியாது. அவர் ஒருவனுடைய வாழ்க்கை வெளித் தோற்றத்தில் எத்தகையதாக இருப்பினும், மனதில் தூய்மையில்லாவிடின், அவ்வாழ்க்கை அறவாழ்க்கையாகாது என்பதை எவ்வளவு திட்டவட்டமாக எடுத்துக் காட்டுகிறார்.

ஒருவர் தம் மனம் தூய்மையுடையதாய் இருக்கிறதா என்று தெரிந்து கொள்வதெப்படி? அடுத்த இதழில் ஆராய்வோம்.

(வளரும்)

---

# சொர்க்கத்திலா

இறந்துபோன தன் கணவனைக் கனவில் கண்ட அவன் மனைவி அவனைப் பார்த்துக் கேட்டாள்: "இப்பொழுது எப்படி இருக்கிறீர்கள்?"

"மிகவும் மகிழ்ச்சியாக, அமைதியாக, நிம்மதியாக" வழக்கம் போல் அடக்கமாகப் பதில் கூறினான் அவன்.

"என்ன! இந்த உலகத்தில் என்னுடன் வாழ்ந்ததைவிட மகிழ்ச்சியாகவா இருக்கிறீர்கள்?" வியப்புடன் கேட்டாள் அவள்.

"ஆம்," அதே குரலில் பதில் கூறினான் அவன்.

"சொர்க்கம் என்பது இவ்வளவு இனிமையாகவா இருக்கிறது" ஆசையுடன் அவள் கேட்டக் கேள்விக்கு அலட்சியமாகப் பதில் வந்தது அவனிடம் இருந்து.

"யார் சொன்னார்கள் நான் சொர்க்கத்தில் இருக்கிறேன் என்று? இப்பொழுது இருப்பது நரகத்தில் அல்லவா?"

கே. கே. மாதவன்.

www.thamizham.net - Free E Books No TM 14705

நம்ப மறுத்தும் நடக்கப்போகும் பெரும் உண்மைகளை முன்கூட்டி எச்சரித்திருக்கிறார்.

1946-ம் ஆண்டு ஜுன், சர் கிர்ஷா சங்கர் பாபுஜி என்ற இந்திய உத்தியோகஸ்தர் கொடுத்த விருந்து ஒன்றில் கலந்து கொண்டிருக்கும் போது ஒரு மனிதர் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு தன்னைப்பற்றி ஏதாவது கூறுமாறு வேண்டினார். அப்போது ஜீன், இன்னும் இரண்டு ஆண்டுகளில் இந்தியாவில் பிரிவினை ஏற்படும் என்றும் அப்போது பிரிவினை ஏற்பட்ட மறுபக்கத்தில் மேற்கண்ட மனிதர் இருந்து அவரது தொழிலில் முன்னேற்றமடைவார் என்றும் குறிப்பிட்டார். அந்த மனிதர் கோபமாக "இருக்கவே இருக்காது. இந்தியாவில் பிரிவினையாவது! என்னுடைய வாழ்வில் பிரிவினையற்ற பாரதத்தில் வாழப் போகின்றேன்" என்றார்.

ஆனால், ஜுன் உறுதியாக "1947-ம் ஆண்டு 20-ம் தேதி அந்த பிரிவினை நிகழப் போகின்றது" என்று தெளிவாக எடுத்துரைத்தார்.

1947-ம் ஆண்டு 20-ம் தேதி காலை அந்த மனிதர் ஜீனுக்கு போன் செய்து அவர் கூறிய தவறான விவாதத்தைக் கண்டித்துப் பேசினார். ஆனால் ஜீன் அமைதியாக, "நாள் இன்னும் முடியவில்லை, பொறுத்திருங்கள்!" என்று உறுதியான குரலில் கூறினார். மறுநாள் காலை வந்த பத்திரிகைகள் எல்லாம் இந்தியாவில் ஏற்பட்ட பிரிவினை பற்றி அறிவித்தன. அது மட்டுமல்ல. அந்த மனிதரும் பிறகு பாகிஸ்தானுக்கு வாஷிங்டனிலிருந்து திரும்பி சிறிது காலத்தில் அரசாங்கத்தில் ஒரு பெரிய பதவியை அடைந்தார்.

இன்னும் இதுபோல பல செய்திகளை முன்கூட்டியே ஜீன் பலருக்கு அறிவித்துள்ளார். 1947-ல் ஒரு மனிதர் தான் புது டில்லிக்கு செல்லுவது பற்றி ஜீனிடம் கூறி வந்தபோது ஜீன் திடீரென்று, "மகாத்மா காந்தி கொலை செய்யப் படவிருக்கிறார்" என்று தான் உணருவதாக அறிவித்தார். இதைப்போல திரை நடிகை மர்லின் மன்ரோவின் தற்கொலை, ஆமர்சீல்டின் மரணம் இவைபற்றியும் கூறியிருக்கிறார்.

1962-ன் முன்னறிவிப்பு என்ற தலைப்பில் பத்திரிகையினருக்கு அவர் அளித்த தகவல்கள் மிக மிகச் சுவையானவை. அதில், "ரஷ்யா சந்திரனுக்கு மனிதனை அனுப்புவதில் நம்மை முந்திக் கொள்ளும். ஆனால் அந்த நிகழ்ச்சி குருசேவும், கென்னடியும் பதவியிலிருக்கும்போது நிகழப் போவதல்ல. இரகசியமாக மனிதனை சந்திரனுக்கு அனுப்பும் முயற்சியில் பல முறை தோற்றிருக்கிறது, ரஷ்யா! இனி வரப்போகும் சில ஆண்டுகளுக்கு பிறகு நாம் ரஷ்யாவுடன் சேரப்போகின்றோம். அப்போது செஞ்சீனா, ஆப்பிரிக்காவில் சில பகுதிகள், தூரக் கிழக்கு நாடுகள் இவை நமக்கு எதிராக நிற்கப் போகின்றன." 1964-ம் ஆண்டு பத்திரிகையில் இன்னும் வியப்பூட்டும் முன்னறிவுச் செய்திகளைக் கூறினார், "உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களில் நமக்கு 1964—67 ஆண்டு காலங்களில் பெரும் இடைஞ்சல்கள் விளையப் போவதைக் காண்கிறேன். இந்த இடைஞ்சல்களின் உச்சநிலை தற்போதைய முதல்வர் குருஷேவ் பதவியிலிருந்து தூக்கப்பட்டு இன்னொரு தலைவர் வரும்போதுதான் ஏற்படும். அது இன்னும் 18 மாத காலத்தில் நிகழும். அந்த மனிதரின் பெயர் "எஸ்" என்ற முதலெழுத்துடன் ஆரம்பமாகும். அந்த மனிதர் அறிவாற்றல் உள்ள

www.thamizham.net - Free E Books No TM 14705

தேர்ந்த ஒருவர். அவர் ஏற்கனவே சோவியத், சீன, ஜெர்மானிய விஞ்ஞானிகளுடன் சேர்ந்து கொண்டு நமது வீழ்ச்சிக்கு அடிகோலுகிருர். ஆனல் அவர் முயற்சி வெற்றி பெருது" என்று அறிவித்தார்.

குருஷேவின் விலக்குதலுக்கு பிறகு அவரது வேலையை லெனய்டு ப்ரெஸ்னேவ், அலக்ஸி கோசிஜின் ஆகிய இருவரும் மேற்கொண்டனர். ஆனல் இவர்கள் இருவரும் புதிய ஒரு பெரும் சக்தி வாய்ந்த தலைவன் வரும் வரைக்கும் தற்காலியமாகத்தான் பதவி ஏற்கப் போகின்ருர்கள் என்று விஷயமறிந்தவர்கள் எண்ணுகிருர்கள். அப்படியானல் ஜீன் டிக்ஸன் குறிப்பிடும் "எஸ்" என்ற முதல் எழுத்தில் தொடங்கும் பெயருள்ள மனிதர் யாராக இருக்கும்? இரும்புத் திரை ரஷ்யாவில் "எஸ்" என்ற எழுத்துடன் பெயருள்ள சில பெரிய தலைவர்களில் சுஸ்லோவ் என்பவர் ஒருவர். ஜீன் குறிப்பிட்டது போல குணங்கள் உள்ளவர் அவர். கிரெம்ப்ளின் அதிர்ச்சிக்குக் காரணமான கம்யூனிஸ்டு மத்திய கமிட்டியின் கூட்டத்தில் முதன்மையான உரை வழங்கிய மனிதர் அவர்!

இன்னெரு மனிதரான அலக்ஸாண்டர் ஷெலிபின் என்பவரின் பெயர் க்ரெம்ப்ளின் மேடையில் குருஷேவின் வீழ்ச்சிக்குப் பிறகு அடிபட்டது. அந்த எதிர்காலத் தலைவர் அவராகக் கூட இருக்கலாம். பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

1963-ம் ஆண்டு பத்திரிகை முன்னறிவிப்பு செய்தியில் ஜீன் உணர்ந்த ஒரு தகவல் சில காரணங்களால் விடப்பட்டது. அந்த தகவல் இதோ: "ஜனதிபதி கென்னடியும், முதல்வர் குருஷேவும் இரகசியமாக, காஸ்ட்ரோவை பதவியிலிருந்து தூக்கிவிட்டு, அதற்குப்

---

## கடலுக்கு அடியிலோடும் அதிசயப் பேராறு

பூமத்திய ரேகைக்கு அருகில் கடலுக்கடியில் 250 மைல் அகலமும் 1000 அடி ஆழமும் உள்ள ஒரு நதி ஓடுகின்றதாம். கடல் மட்டத்திற்கு ஏறத்தாழ 2900 அடிக்குக் கீழே மேற்குத் திசையில் ஒரு நதி மேற்கு நோக்கி ஓடிக்கொண்டிருப்பதாக முன்னமே கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு 100 மைல் அடியில் தான் இந்தப் புதிய பேராறு கிழக்கு நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறதாம். ஓராயிரம் பெரிய நதிகளின் நீரோட்ட பலம் இதற்கு இருக்கிறதாம்.

'பெண்டி'

---

www.thamizham.net - Free E Books No TM 14705

பதிலாக தங்களுக்கு இன்னும் சாதகமான ஒருவரை அங்கு நியமிக்க திட்டமிட்டனராம். இதையறிந்த காஸ்ட்ரோ யாருக்கும் தெரியாத வகையில் கென்னடியைக் கொலை செய்ய திட்டமிட்டான். ஆஸ்வால்ட்டு கென்னடியை சுட்டவனே ஒழிய, திட்டமிட்ட சதிகாரர்கள் வேறு சிலர் காஸ்ட்ரோ தனது பதவியை காப்பாற்றிக்கொள்ள இந்த முயற்சியில் இறங்கினன். குருஷேவைக் கொல்லுவது எளிதல்லவாதலால், கென்னடியை முடித்துவிட அவன் திட்டமிட்டிருக்கிருன்." பளிங்குப் பந்து தந்த மேற்கண்ட தகவல்கள் ஜீனுக்கு அப்போது தெரிந்தன. வாரன்கமிஷன் செய்த முடிவோ வேறு! பளிங்குப் பந்தில் கண்ட விவரமாகையால் ஊகித்தறிந்தது முழுவதும் உண்மையா, தவரு என்று புலப்படவில்லை.

ஜீன் டிக்ஸனின் மனேதத்துவ விநோதத் திறமைகளையும், தீர்க்க தரிசனங்களையும் காண்கின்ற சிலர் "கத்தோலிக்கு திருச்சபையின் கருத்துக்களுக்கு புறம்பான வகையில் அவள் செயல்கள் இருக்கின்றன" என தவருக எண்ணுகின்றனர். இது குறித்து கத்தோலிக்குப் பல்கலைக் கழக ப்ராக்டரேட்டராக பணியாற்றி வரும் மான்சிக்னர் ஜேம்ஸ் ஏ. மாக்னர் என்பவரைக் கேட்டபோது அவர் கூறுகிருர், "கத்தோலிக்க திருச்சபையின் கொள்கைகளுக்கும், இவற்றிற்கும் நிச்சயமாக முரண்பாடுகள் இல்லை. இன்னும் கூறப்போனல் நமது மதமே காட்சிகள் பலவற்றின் அடிப்படையில் பின்னப்பட்டிருக்கின்றது. பைபிளிலே எத்தனையோ காட்சிகள் பற்றி காண்கிரேம். மனேதத்துவத்துறையில் நாம் இன்னும் முன்னேற்றம் காணவில்லையென்ருலும், ஒவ்வொரு கத்தோலிக்கனுக்கும் இந்தக் காட்சிகள் சாதாரணமானவை!" என்று குறிப்பிட்டு, ஜீனைப்பற்றி, "இவள் மிக பக்திவாய்ந்த பெண்மணி. பணிவும், தாராள மனப்பான்மையும், பிறருக்கு தொண்டு செய்யும் நல்லெண்ணமும் கொண்டவள். இவளிடம் ஒரு துளிகூட தன்னல உணர்ச்சி கிடையாது, எல்லா வகையிலும் இவள் உயர்ந்தவள்!" என்று பெருமிதமாகக் கூறுகிருர்.

ஜீன் டிக்ஸன் இதுவரை கண்ட காட்சிகள் எல்லாவற்றிலும் மிகத் தெளிவான, வியக்கத்தக்க காட்சி 1962-ம் ஆண்டு பிப்ரவரி 5ம் தேதி நிகழ்ந்தது. அந்தத் தேதியே மிகமுக்கியம்வாய்ந்தது, ஏனெனில் அன்றுதான் சிலர் கிரகங்களின் விசித்திர சேர்க்கையும், பயங்கர நில அதிர்ச்சியும் ஏற்படும் என்று அறிவித்தனர். இதே போன்று ஒரு நிகழ்ச்சிதான் 2000 ஆண்டுகளுக்கு முன் "கீழ்வானத்தில் ஒளிமிக்கவிண்மீண் தோன்றும்" என்ற பைபிள் கூற்றுக்கு காரணமான ஒன்று என்று நிபுணர்கள் சிலர் கூறுகின்றனர். எனவே அது அந்த தினம்! கதிரவன் இன்னும் எழுந்திருக்கவில்லை. ஜீன் கிழக்கை நோக்கியிருக்கும் தனது படுக்கையறை ஜன்னலுக்கு அருகே மெதுவாக நடந்து சென்ருள். வெளியே அவள் பார்க்கும்போது, செடிகளோ, தெருவோ ஒன்றும் தெரியவில்லை, அதற்குப் பதிலாக தெளிவான பிரகாசமிக்க நீலவானம் தெரிந்தது. அதற்கு மேலே ஒரு வறண்ட பாலைவனம் தெரிந்தது. அடிவானத்திற்கு சற்று மேலே அவள் இதுவரைக் கண்டிராத பிரகாசமான கதிரவன் தங்க பந்து போல காணப்பட்டான். அதிலிருந்து எல்லா திசைகளிலும் கதிர்கள் பரவி உலகத்தையே ஈர்த்தன. அந்த ஒளிமிக்க கதிர்களிலிருந்து கைமேல் கைகொண்டு பாரோவும் (எகிப்திய அரசர்) அவர் மனைவி அரசி நெபர்டிட்டியும் அடியெடுத்து வைத்தனர். அரசியின் மற்ருெரு கையில் குழந்தை ஒன்று தாலாட்டிக் கொண்டு இருந்தது.

www.thamizham.net - Free E Books No TM 14705

அந்த குழந்தை அணிந்துள்ள கிழிந்த துணிகளில், சேறு படிந்திருந்தது. கம்பீரமான அழகிய ஆடை உடுத்தியுள்ள அந்த தம்பதிகளுக்கும், இந்த குழந்தைக்கும் தான் எத்தனை வேறுபாடு! அந்த குழந்தையின் கண்களைப் பார்க்கும்போது அதில் மெய்யறிவும், எல்லாவற்றையும் அறிந்த ஞானமும் புலப்பட்டது. பார்த்துக்கொண்டே யிருக்கும்போது அந்த தம்பதிகள் அவளை நெருங்கி வந்து அவளிடம் அந்த குழந்தையை வழங்குவதுபோல உலகம் அனைத்திற்கும் அதை வழங்கினார்கள். பிறகு சூரியனின் ஒளியில் பாரோவைக் காணமுடியவில்லை. அரசி நெபர்டிட்டி இறந்தகாலத்தில் ஆயிரமாயிரம் ஆண்டுகள் நடக்கிறாள். பிறகு அந்தக் குழந்தை பெரியவனாகின்றான். எல்லோரும். மத, இன, நிற வேறுபாடின்றி முழந்தாளிட்டு அந்தக் குழந்தையை வணங்குகிறார்கள்" மற்ற காட்சிகளைப்போல இல்லாமல் இந்தக் காட்சி வெகு நேரம் மறையாமல் இருந்தது என்று ஜீன் குறிப்பிடுகிறார். அவர் கண்ட காட்சியின் பொருளை பின்வருமாறு விளக்குகிறார் :

"1962-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5 ம் தேதி காலை 7 மணிக்குச் சற்று பிறகு மத்திய கீழ்த்திசை நாட்டில் பிறந்துள்ள இந்தக் குழந்தை உலகத்தைப் புரட்சிகரமாக மாற்றப் போகின்றது. இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் மனித சமுதாயம் முழுவதையும் ஒரே அன்புப்பிடியில் அவன் ஆட்கொள்ளப்போகின்றான்.

இந்த நபர் எளிமையான குடியானவனின் குழந்தையாக இருந்த போதிலும், பாரோ, அரிசி நெபர்டிட்டி இவர்களின் வழித்தோன்றல். இந்தக் குழந்தையின் வரவு துயரமிக்க உலகத்தின் பல நாள் வேண்டுதல்களின் விளைவு! மனித குலம் 1980க்குப் பிறகு இந்த நபரின் வன்மைமிக்க சக்தியை உணரப் போகின்றது. அதன்பிறகு 10 ஆண்டுகளில் உலகம் ஒரு மாற்றம் அடையும். அந்த மாற்றத்தின் விளைவாக போர்களற்றதுன்ப மற்ற மனித சமுதாயம் உருவாகும். இந்த நபரின் ஆற்றலும் வன்மையும், 1999 வரை அதிகமாகிக் கொண்டே போகும். அந்த சமயத்தில் உலகத்தில் "நல்ல மன

---

## பாதத்திலே என் இதயம்

ஆம், இதுவே உனது அன்புக்கு அறிகுறி, நான் நன்கு அறிவேன். எனது இதயம் நிறைந்த காதலனே, இலைகளின்மேல் விளையாடும் இந்த ஒளி, விண்ணில் மெல்ல மெல்ல ஊர்ந்து செல்லும் மேகங்கள், என் முகத்தில் குளிர்ந்த சுகமளிக்கும் இந்த மென்காற்று இவையனைத்தும் உன் அருளேயாம்.

காலைக் கதிரொளி என் கண்களை நிறைத்தது. இதுவே எனது இதயத்திற்கு வந்த உனது செய்தியாகும். உன் முகம் மேலிருந்து கீழே கவிந்திருக்கிறது. உன் கண்கள் என் கண்களைச் சந்திக்கின்றது. எனது இதயம் உனது பாதத்தைத் தொட்டுவிட்டது.

—தாகூர் (கீதாஞ்சலி-59)

தொகுப்பு : ஆர்.கே.

---

www.thamizham.net - Free E Books No TM 14705

1. புத்தரின் சிலையை பல இடங்களில் நாம் பார்க்கிறோம். எல்லா சிலைகளிலும் புத்தபிரான் காலை மடித்து உட்கார்ந்த காட்சியைத் தான் பார்க்கிறோம். ஆனால் ஒரே ஒரு இடத்தில் மட்டும் புத்தர் காலை தொங்கப் போட்டவண்ணம் உட்கார்ந்த நிலையில் சிலை உள்ளது. எங்கே தெரியுமா ? எல்லோராவில் விசுவகர்மா குகை என்னும் குடைவுச் சிற்பக் குகைக்குள்தான் !

2. திருவள்ளுவர் சாதாரணமாக படங்களிலும் சிலைகளிலும் உட்கார்ந்த வண்ணம் காணப்படுகிறார். ஒரே ஒரு இடத்தில் மட்டும் கம்பீரமாக நிற்கிறார். அது எங்கே ? சென்னை மெரினா கடற்கரையில் !

தகவல் : 'விசு'

முடைய மனிதர்களுக்கு ஆத்மீக அமைதி கிடைக்கும்" என்கிறார்.

எதிர்கால உலகைப் பற்றி ஜீன் டிக்ஸன் இன்னும் சில வியப்பூட்டும் முன்னறிவிப்புக்கள் தந்துள்ளார். அவைகளில் சில பின்வருமாறு :

"அமெரிக்காவின் மிகப் பெரிய பிரச்சனைகள் நிறவேற்றுமைப் பிரச்சனையும், சீனாவும்தான். நிறவேற்றுமைப் பிரச்சனையின் விளைவாக சில ஆப்பிரிக்க ஆசிய நாடுகள், அமெரிக்காவிற்கு எதிராகக் கிளம்பும். 1980க்குப் பிறகு இந்த விளைவுகளால் உலக யுத்தம் ஒன்று ஏற்படும். வியட்நாமும், கொரியாவும் இந்த தடுக்க முடியா போரை செஞ்சீனாவுடன் தொடர காரணமாயிருக்கும்."

* * *

"செஞ்சீனா ரஷ்ய எல்லையில் தகராறுகள் கொடுக்கும்."

"இன்னும் மூன்று ஆண்டு காலத்தில் (1969ல்)ரஷ்யா முதன் முறையாக சந்திரனுக்கு 'மனிதனை அனுப்பும் முயற்சியில் வெற்றி பெறும்."

* * *

"1961—1969க்குள் அமெரிக்காவில் மூன்று ஜனாதிபதிகள் பதவி ஏற்பார்கள்.

* * *

"போப் பால், பாப்பானவர்களின் சரித்திரத்திலே ஒரு முக்கிய இடம் பெற்றவராக விளங்கப் போகிறார். இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் ஒரு பாப்பானவர் உடலளவில் துன்புறுத்தப் படுவார். அதற்குப் பிறகு திருச்சபையில் தலைமைப்பீடம் வேறு ஒரு முறையில் இருக்கும். தலைமை சக்தி இருக்கும், ஆனால் பாப்பானவர் என்ற நபரிடம் அது இருக்காது" [1958ல் ஜுன் கண்ட இந்த காட்சிதான் பாத்திமா நகரில் அன்னை குறிப்பிட்ட மூன்றாவது சத்தியம் என்று இவர் நினைக்கிறார்]

www.thamizham.net - Free E Books No TM 14705

"அமெரிக்க விஞ்ஞானிகளும், தலைவர்களும் தவருக ஒரு சிறு எறி படையை (missile) தள்ளி வைத்திருக்கிருர்கள். அதன் நீளம் சுமார் 18 அங்குலம். நீளமான பலூன் வடிவமுள்ள அதன் நிறம் கருப்பாகவோ கரும் பச்சை வண்ணமாகவோ இருக்கும்; 1970ல் 2 அல்லது 3 பேர்களால் போர்களத்தில் தூக்கிக் கொண்டு செல்லக்கூடிய அது மிக அவசியமாக நாட்டின் பாதுகாப்புக்குத் தேவைப்பட போகின்றது. ஆனல் அது கிடைக்காது."

* * *

"1968 தேர்தலில் அமெரிக்காவில் ரிப்பப்ளிக்கன் கட்சி வெற்றி பெறப் போகின்றது."

* * *

பொறுத்திருந்துதான் பார்ப்போமே எதிர்காலத்தை!

ஆதாரம்: "A gift of Prophecy"
By Ruth Montgomery

ஆசிரியர்: டேய் குமார் இங்கிருந்து அமெரிக்கா அருகில் உள்ளதா அல்லது சந்திரன் அருகில் உள்ளதா?

குமார்: சந்திரன் தான் சார்!

ஆசிரியர்: என்ன சந்திரனு?

குமார்: ஆமாம் சார், சந்திரனை நாம் தினமும் பார்க்கிருேம். அமெரிக்காவை அப்படி பார்க்க முடியவில்லையே.

---

ஆசிரியர் மாணவர்களின் கணித பதில் தாளைப் பார்த்து கோபமாக, "டேய் பாலு! உன் வயதில் ஜார்ஜ் வாஷிங்டன் ஓர் சர்வேயராக இருந்தார் தெரியுமா" என்ருர். மாணவன் தயங்கிக் கொண்டே "சார் உங்கள் வயதில் அவர் அமெரிக்க ஜனுதிபதியாக இருந்தார்" என்ருன்.

www.thamizham.net - Free E Books No TM 14705

# விற்பனையில் குறள் தபால்

## தலையின் சாதனை

உலகத் தமிழ் மாநாடு முன்னிட்டு வெளியிடப்பட்ட விசேட தபால்தலையான குறல் பொறித்த தபால் தலைகள் சென்னையிலுள்ள தபால் நிலையங்களில் ஒரே நாளில் (12,000) பன்னிரெண்டாயிரத்திற்கும் அதிகமாக விற்கப்பட்டிருக்கிறது.

உயர்திரு சி. என். அண்ணாத்துரை அவர்கள்—தமிழக முதலமைச்சர், அந்த விசேட தபால்தலை விற்பனைக்காக ஏற்பாடாகிருந்த வெளியீட்டு நிகழ்ச்சியை இரத்து செய்ததும், மறுநாள் முதல் விற்பனை நிறுத்தப்பட்டதும் யாவரும் அறிந்ததே.

மத்திய அரசாங்கம் விற்பனையைத் தடைசெய்யும் என்று தெரிவதற்கு முன்னால், வெளியீட்டு நாளான அந்த ஒரே நாளில் தமிழகம் முழுவதுமுள்ள தபால் நிலையங்கள் (12,306) பன்னிரெண்டாயிரத்து முன்னூற்று ஆறு தபால் தலைகள்விற்று விட்டன. இதுதான் இந்த ஆண்டில் அதிகமாக விற்கப்பட்டதாக குறிக்கப்பட்டுள்ளது.

உலகத் தமிழ் மாநாட்டிற்கு முன்னர், உரிமை தினத்திற்கும் (Human Rights Day), பாரத சாரண சாரணீயருக்காவும் (Bharat Scouts and Guides), ராஷ் பிஹாரி போஸ்ஸுக்காகவும் (Rash Bihari Bose), வெளியிடப்பட்ட விசேட தபால் தலைகள் ஒவ்வொன்றும் (7,000) ஏழாயிரத்திற்கும் குறைவாக, அந்தந்த வெளியீட்டு நாளான நாள் ஒன்றில் மட்டும் விற்கப்பட்டுள்ளதாக தகவல் துறை இலாகாவிலிருந்து அறியப்படுகிறது.

பிரச்சனைக்குரிய, சர்ச்சைக்குரிய இந்தக் குறள் தபால் தலைகள் நாடெங்குமுள்ள மற்ற தபால் நிலையங்களில் விற்றுக் கொண்டு வருவதாகவும் அறியப்படுகிறது.

தகவல் : திருமதி சியாமளா வேணுகோபாலன்.

ஆதாரம் : ஸண்டே ஸ்டாண்டர்டு.

www.thamizham.net - Free E Books No TM 14705

# சிந்தனைக்கு......

ஒருமுறை தவறி விழுந்து விட்டவனை உலகம் ஒரு காட்சிப் பொருளாகவே நினைக்கிறது. அந்த நிலை மாற வேண்டும். அப்படித் தவறி விழுபவன் மீண்டும் எழுந்து நிற்க ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

* * *

நட்பு என்பது அழகிய கண்ணாடி. அதை ஒரு முறை கீழே போட்டாலும் போதும் உடைந்து தூள் தூளாகிவிடும் பின் ஒன்று சேர்க்கவே முடியாது.

* * *

அனுபவம் என்பது ஒரு தனிப்பட்ட மனிதனின் செயல் களால் பிரதிபலிக்கப்படும் பாடம்.

* * *

நடந்துவிட்ட நிகழ்ச்சிகள் தான் பிற்காலத்தில் வரலாரு கவும் சரித்திரமாகவும் பிறப்பெடுக்கின்றன.

* * *

புதிய எண்ணங்களும், கருத்துக்களும் எப்போதும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படுகின்றன; எதிர்க்கப் படுகின்றன. அவை தவருனவை என்பதால் அல்ல, புதியவை என்ற ஒரே காரணத்தால்!

* * *

ஒரு பொருளைப் பெறுவதைக் காட்டிலும் அந்தப் பொருளைப் பெறப்போகிறேம் என்ற ஆவலே அதிக ஆனந்தம் தருவது.

* * *

ஆதரவற்றதெல்லாம் ஏழைதான். அந்த விதத்தில் மிகப்பல சமயங்களில் உண்மையும் ஏழையாய் இருப்பதைக் காண்கின்றேம்.

* * *

இந்த உலகத்தில் ஒரு மனிதனை, மற்ருெரு மனிதன் ஒரு செயலை செய்யாவிடில் கொல்லத் தயாராகும் வரை எந்த ஒரு செயலும் நடைபெறுவதில்லை.

தொகுப்பு: எழிற்கலை

www.thamizham.net - Free E Books No TM 14705.

# மாணவர்களே

# ஒரு நிமிடம்!

—: :—

"பூச்செண்டு" இரண்டாம் இதழ் உங்கள் கைகளிலே பூத்துவிட்டது. மாணவர்தம் கருத்துக்களை, கொள்கைகளை பிரதிபலிக்கத் தமிழகத்தில் தொடங்கப் பட்டிருக்கும் இம் முயற்சி குறித்து பலர் பாராட்டி எழுதியுள்ளனர். எங்கள் மனங் கனிந்த வரவேற்பைப் பெற்ற அக்கடிதங் களில் சிலவற்றை இவ்விதழில் வெளியிட் டிருக்கிறோம்.

மாணவர் இதழை மாணவரே நடத்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் தொடங்கப்பட்ட முதல் மாணவர் தமிழ்த் திங்களிதழான பூச்செண்டின் வளர்ச்சியும், உயர்ச்சியும் உங்கள் கரங்களில்தான் இருக்கின்றது. எந்த ஒரு இதழும் உறுப் பினர்களின்றி விளம்பரங்களின்றி வளர்ந் ததில்லை! கசப்பான அனுபவங்களை எதிர்நோக்குவோர் மட்டுமே பத்திரிகைத் தொழிலில் இறங்க வேண்டும் என்று அன்னன் நிலையில் உள்ளோர் பலர் எடுத்துக்கூறியும், தயங்காது தமிழகத்தில் மாணவர் ஏடை மாணவரே நடத்த முன் வந்தோம். எங்களது இளம் உணர்ச்சி களால் ஆயிரம் ஆயிரம் சாதிக்க முடியும். சாதித்திருக்கிறோம் என்று மார்தட்டும் மாணவர் உலகுதான் இந்த செயலிலும் இறங்கியிருக்கிறது. எங்கள் முயற்சியை தமிழக மக்கள் நிச்சயம் வரவேற்பார்கள் என்ற ஆழ்ந்த நம்பிக்கையில் தான் எங்கள் வலது காலை பூச் செண்டென்னும் பயணப் பாதையில் எடுத்து வைத்தோம். அந்த பயணம் முடியாது தொடர உங்கள் அன்பு என்றென்றும் தேவை!

பூச் செண்டின் ஒவ்வொரு அங்கமும் மணக்க உங்கள் ஊக்கமும், ஆக்கமும் இன்றியமையாதவை. நீங்கள் உறுப்பின ராவதுடன் உங்கள் நண்பர்களுக்குச் சொல்லுங்கள். அவர்கள் தங்கள் தோழர்களுக்குக் கூறட்டும். அது வழியே பூச்செண்டு வளரட்டும். அத்துடன் இது உங்கள் இதழ்! நினைவிருக்கட்டும்!

உங்கள் இளம் உள்ளங்களில் ஆயிர மாயிரம் கருத்துக்களும், கற்பனைகளும் தோன்றலாம். அவையெல்லாம் எழுத் தாகட்டும்! வளர்கின்ற தமிழகத்திற்கு இவை இன்றும்நாளையும் மிகமிகத் தேவை. எனவே தோழர்களே உங்கள் எழுத்துக் களை திரட்டி முறைப்படுத்தி உங்கள் இதழாம் பூச்செண்டிற்கு அனுப்புங்கள். வெளியிடத்தக்கவற்றை நிச்சயம் வெளி யிடுகிறோம். நாளைய எதிர்கால எழுத் தாளர்களை பூச்செண்டு இன்றிலிருந்து உருவாக்குமானால் அது இந்தப் பத்திரிகை யின் மாபெரும் வெற்றியாகக் கொள்வோம்!

— :: —

www.thamizham.net - Free E Books No TM 14705

# “பூச்செண்டு”

## (விளம்பர விகிதம்)

| | | |
|---|---|---|
| வெளிப்புற அட்டை முழுப் பக்கம் (ஒரு கலர்) | ... ரூ. | 150/- |
| உட்புற அட்டை | ... ரூ. | 100/- |

ஒரு வண்ணத்திற்கு மேற்பட்ட விளம்பரங்களுக்கு 25 சதவீதம் அதிகம்.

பத்திரிகையில் :

| | | |
|---|---|---|
| முழுப் பக்கத்திற்கு | ... ரூ. | 80/- |
| அரைப் பக்கத்திற்கு | ... ரூ. | 40/- |
| கால் பக்கத்திற்கு | ... ரூ. | 25/- |

## சந்தா விகிதம்

1 ஆண்டுக்கு ... ரூ. 4 00

விற்பனையாளர்கள் தமிழ்நாடு எங்கும் தேவை. விபரங்களுக்கு எழுதுங்கள்.

ஆசிரியர்,
**பூச்செண்டு**
19, நௌரோஜி ரோடு,
சென்னை-10.

பதிப்பாளரும் ஆசிரியரும்: எஸ். இராசேந்திரன், எம்.ஏ., 19, நௌரோஜி ரோடு. சென்னை-10. அச்சிடுபவர் : பி. வி. ராமச்சந்திரன், ஸ்ரீ பண்டாரி பிரஸ் 26, பிராட்வே, சென்னை-1.

www.thamizham.net - Free E Books No TM 14705

www.thamizham.net - Free E Books No TM 14705

# அடுத்த இதழில்

★ தமிழகக் கல்லூரிகள் என்ற புதிய பகுதி துவங்குகிறது.

★★ 'நெய்தல் பாவை' — அவ்வை. நடராஜன் எழுதும் அழகு மிக்க இலக்கிய விளக்கம்.

★★★ ஓவியர் நடிகர் சிவக்குமாரின் இனிமையான பேட்டி.

★★★★ மனோதத்துவப் பேரறிஞர் டாக்டர். தைரியம் அவர்கள் மனநோயாளிகளிடம் தான் அனுபவித்த விசித்திரமான அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

★★★★★ திரைப்பட எழுத்தாளர் சிவ. நா. அருசு எழுதும் சுவையான சிறுகதை.

★★★★★★ 'ராதா, காதலை ஒரு விளையாட்டாக நீ கருதியிருந்தால் என்னைப் பொம்மையாக நினைத்து எறிந்ததில் தவறொன்றும் இல்லை. ஏனென்றால் என்னைப் பொறுத்தவரையில் நீ ஒரு குழந்தை தான்'—மூர்த்தி.

ரீட்டா எழுதும் 'கண்கள் பணித்தன' என்னும் உணர்ச்சிக் காவியம்.

Printed at Sri Pandaari Press, 26, Broadway, Madras-1
www.thamizham.net - Free E Books No TM 14705